**கவனிக்க**.-2019.03.22 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II, பகுதி III மற்றும் பகுதி IV(அ) என்பன பிரசுரிக்கப்படவில்லை.


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2117 - 2019 මාර්තු මස 29 වැනි සිකුරාදා - 2019.03.29

*2117 ஆம் இலக்கம் - 2019 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 29 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (IIஅ) - விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | - | பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 800 |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலூன பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர், அதாவது 2019, ஏப்பிறல் மாதம் 18 ஆந் திகதி வியாழக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2019, ஏப்பிறல் மாதம் 05 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."

**கங்கானி லியனகே,**
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2019 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

797-B 81508-5,403 (2019/03)

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்படும் அரச சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகள்

**1. வேண்டப்படும் பொதுத் தகைமைகள் :**

1.1 விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபித்தல் வேண்டும். இலங்கையர் என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தினால் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவுவழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.

1.2 சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான அல்லது அதைவிட உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ஆகக்குறைந்த கல்வித் தகைமையாக விதிக்கப்பட்டுள்ள எந்தப் பதவிக்கும் விண்ணப்பிக்கும் வேட்பாளர் ஒருவர் சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அவர் சிங்களவராக இருந்து சிங்கள மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து அல்லது தமிழராகவிருந்து தமிழ் மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து, விடயத்துக்கேற்ப, சிங்கள மொழியில் அல்லது தமிழ் மொழியில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். இத்தேவைப்பாடு (1961, சனவரி 01 ஆந் தேதிக்கு முற்பட்டவொரு திகதி தொடக்கம் அரசாங்க சேவையில் இருப்பவர்களுக்கும் அரசாங்க சேவையில் பிறபதவிகளுக்கு நியமனங்களைப் பெற முயற்சி செய்பவர்களுமானவர்களுக்கும் ஏற்புடைத்தாகாது).

1.3 சிங்களத்தில் அல்லது தமிழில் கல்வி கற்காதவர்களும் விதித்துரைத்த அரச கரும மொழித் தேர்ச்சி சோதனைகளில் சித்தியடையத் தவறியமைக்காக தகுதிகாண் நிலைப்பரீட்சார்த்த நியமனங்கள் முடிவுறுத்தப்பட்டவர்களுமான "புதிய சேர்வாளர்கள்" ஆகிய அரசாங்க உத்தியோகத்தர்களினால் அனுப்பப்படும் விண்ணப்பங்கள், அவர்கள் அப்பதவிக்கு விதித்துரைக்கப்பட்ட அதியுயர் தேர்ச்சிச் சோதனையிலிருந்து விலக்களிப்பைப் பெறும் உரிமையை வழங்கக்கூடிய தகைமைகளைப் பெற்றிருந்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

**2. சேவை நிபந்தனைகள் : பொது**

2.1 நிதி ஒழுங்குவிதிகள், தாபனக்கோவை, திணைக்களக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக்காலம் விதிக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே சகல அரச சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.

2.2 அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தியோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலாம்.

அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர் தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.

2.3 அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலூவது சேவையாற்றும்படி கேட்கப்படலாம்.

**3. நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடையதாகும் சேவை நிபந்தனைகள் :**

3.1 நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்கள் மேலே 2 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இருக்கவேண்டியதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும் :-

3.1.1 சகல நியமனங்களும் ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய மூன்று வருடத்துக்கு தகுதிகாண் நிலையிலேயே இருக்கும். தகுதிகாண் காலத்தின் ஏதாவது ஒரு நேரத்தில் காரணம் எதுவும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்திவைக்கலாம்.

3.1.2 சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையைச் செயற்படுத்துவதற்கு காலத்துக்குக் காலம் ஆக்கப்படும் எந்தச் சட்டங்களுக்கும் அல்லது ஒழுங்குவிதிகளுக்கும் அல்லது விதிகளுக்கும் அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.

3.1.3 சிங்கள மொழி மூலத்தில் அல்லது தமிழ் மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேராத சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் அரசகரும மொழிகளிலொன்றில் பணியாற்றும் அறிவைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுவர்.

3.1.4 அரசாங்க சேவையில் சிங்களம் அல்லது தமிழ் தவிர்ந்த ஒரு மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேர்ந்த உத்தியோகத்தரொருவர் தகுதிகாண் நிலைக்காலம் முடிவுற்றதன் பேரில் பதவியில் உறுதிப்படுத்தல் பிறவற்றுள், அவர் அரச கரும மொழிகளிலொன்றில் நியமனத் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்குள் I ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் இரண்டு வருடங்களுக்குள் II ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் (ஏற்புடையவிடத்து) மூன்று வருடங்களுக்குள் III ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் சித்தியடைவதில் தங்கியிருக்கும். ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுறத் தவறினால் வேதன ஏற்றம் இடைநிறுத்தப்படும். அந்த இடைநிறுத்தம் விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப்படும். அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் எய்தும் வரையில் அல்லது 3.1.6 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும். அத்தகைய காலம் வரையில் செயலில் இருக்கும்.

3.1.5 அத்தகைய உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டதன் பேரில் அரசகரும மொழிகளிலொன்றில் தேர்ச்சி பெறுவதற்கு 6 மாத காலத்திற்கு முழுச் சம்பளத்துடனான வசதிகள் வழங்கப்படல் வேண்டும். அதன் பின்னர் அவர் தொடர்புடைய தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடையுமாறு வேண்டப்படுவர். அவர் சித்தியடையத் தவறுமிடத்து முழுச் சம்பளத்துடனான 6 மாத காலத்திற்கு உடனடியாகப் பின்னர், அவர் தமது வழக்கமான கடமைகளை நிறைவேற்றும் வேளையில், 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் சித்தியடைவதற்கு அவருக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.

3.1.6 இந்த விதித்துரைத்த 2 1/2 வருட காலத்திற்குள் பரீட்சையில் அவர் சித்தி அடையத் தவறினால் அவருடைய சேவை முடிவுறுத்தப்படும்.

3.1.7 அரச சேவையின் நிரந்தரமான பதவியொன்றில் ஏற்கனவே பதவி உறுதிசெய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரச சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவியொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல்பாகவே தகுதிகாண் நிலையில் இருக்க வேண்டியதில்லை.

3.1.8 தெரிவுசெய்யப்பட்ட வேட்பாளர் (அரச சேவையில் ஏற்கனவே நிரந்தர/தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத்திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்ந்த)தீவின் எந்தப் பகுதியிலூவது சேவை செய்வதற்கு உடற்றகுதி உள்ளவர்கள் என்பதனைச் சோதனை செய்து அவர்கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.

**4. பணிக்கமர்த்தும் நியதிகள் :**

4.1 நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்குரித்துடையதுமான பதவிகளுக்கு நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர் அவர்களின் வேதனத்திலிருந்து அறவிடப்பட வேண்டுமென அரசாங்கத்தால் விதிக்கப்பட்டுள்ள நூற்று வீதத்துக்குச் சமமானவொரு தொகையைத் தங்களின் வேதனங்களிலிருந்து விதவைகள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகையாக வழங்குதல் வேண்டும்.

4.2 நிரந்தர அல்லது தற்காலிகப் பதவிகளுக்கு ஏற்பாட்டு நிதிய அடிப்படையில் நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள் தங்களின் திரட்டிய வேதனங்களின் 6% ஐ அரசாங்க சேவை ஏற்பாடு நிதியத்துக்கு உதவு தொகையாக வழங்குமாறு வேண்டப்படுவர். நிதி ஆண்டின் இறுதியில் கட்டாய உதவுதொகையாகக் குறித்த நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ள தொகையின் 150% க்குச் சமமானவொரு தொகையைக் குறித்த நிதியத்துக்குத் தனது உதவுதொகையாக அரசாங்கம் செலுத்தும்.

4.3 அரச சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நியமனங்கள் வகிப்பவர்களும், உள்ளூராட்சிச் சேவையிலுள்ள ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கும் நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுக்குமான உத்தியோகத்தர்களுக்கு உள்ளூராட்சிக் சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுமான உத்தியோகத்தர்களுக்கு முறையே உள்ளூராட்சிச் சேவையிலும் அரச சேவையிலுமுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும்.

4.4 ஓய்வூதியப் பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையவையான, அரச சேவையிலுள்ள பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படும் தரைப்படை, கடற்படை, வான்படை ஆகியவற்றின் நிலையப்படை ஆளணியினர்க்கு அரச சேவையிலுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும். இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையதெனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஓர் அரச உத்தியோகத்தர் ஆக அளிக்கப்படுமொரு பதவியொன்றில் நியமனத்தை ஏற்பதாக விடுவிக்கப்படும், படைத்தாங்கு சேவைகளின் உறுப்பினரொருவரினது இழக்கப்படாத முழுச் சம்பள சேவைக்காலமானது இப்பிரமாணக் குறிப்புக்களிலுள்ளவற்றிற்கு மாறாக யாதேனும் இருந்தபோதிலும் இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் கொடுக்கப்படற்பாலதான ஏதேனும் ஓய்வூதியத்தின் அல்லது பணிக்கொடையின் பொருட்டுக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.

**5. யுத்த சேவைச் சலுகை :**

5.1 ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப்படைகளில் சேவையாற்றியவர்களுக்கும், தீயணைக்கும் படை, விமானத் தாக்கப்பாதுகாப்புப் படை, ஊர்ப்பாதுகாப்பு படை என்பனவற்றிலும் முழுநேரக் கடமையாற்றியவர்கள் அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காவிடின், 1939 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிவரையில் உள்ள அச்சேவைக்காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆந் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன் அவர்கள் பற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருத்தல் வேண்டும்.

**6. அரசசேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள் :**

6.1 எல்லூத் தகைமைகளையும் உடைய அரச சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரச சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்தமட்டில் விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.

6.2 விண்ணப்பதாரி குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படலாம். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்பட மாட்டாது.

6.3 விண்ணப்பதாரியைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலாம். விண்ணப்பதாரி ஒருவரைத் தெரிவுசெய்வதற்கு எந்தவொரு விதத்திலூவது ஆதரவு தேடினால் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய விண்ணப்பதாரியைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.

6.4 விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப்பிழை விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்படுவதற்கு முன்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவுசெய்யப்பட்ட பின்பு அப்பிழை கண்டுபிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.

6.5 விளம்பரத் தேவைகளுக்கு அமைபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**7. தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை :**

7.1 தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும். அதில் பதில் வேதனம். படி முதலியன சேர்ந்திருக்கா.

**8. ஆட்சேர்த்தல், பதவி உயர்வு வழங்குதல் தொடர்பான புதிய தேசிய கொள்கை :**

இனிமேல் வெளியிடப்படவிருக்கும் அரசாங்க நிருவாக சுற்றறிக்கைகளின் மூலம் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு உட்பட்டு 1990.03.09 ஆந் திகதிய இல. 15/90, 1990.03.25 ஆந் திகதிய இல. 15/90 (i), 1990.06.15 ஆந் திகதிய 15/90 (ii) கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள கொள்கைகளுக்கு இணங்க அரசாங்க சேவைக்கு, மாகாண அரசாங்க சேவைக்கு, அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கான ஆட்சேர்ப்புக்கள், பதவி உயர்வுகள் என்பன 1990.01.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

# பரீட்சார்த்திகள் கவனிக்க வேண்டிய விதிகளும் அறிவுறுத்தல்களும்

1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்கத்தைக் கொண்ட பரீட்சைகள் செய்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்கச் செயற்படுதற்கு பரீட்சார்த்திகள் அனைவரும் கடப்பாடுடையவர்களாவர்.

எல்லாப் பரீட்சார்த்திகளும் கீழ்வரும் விதிகளுக்கமைய நடந்துகொள்ள வேண்டும் விதிகளை மீறி நடக்கும் பரீட்சார்த்தி பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் விரகின்படி கீழ்காணும் தண்டனைகளில் ஒன்றினையோ பலவற்றையோ ஏற்றவாறு பெறுவர்.

(i) முழுப்பரீட்சையிலிருந்து அல்லது அதன் ஒரு பகுதியிலிருந்து நிறுத்திவைக்கப்படுவர். ஒரு பாடத்திலிருந்தோ அதன் பகுதியிலிருந்தோ நிறுத்திவைக்கப்படுவர் ;

(ii) ஒரு பாடத்துக்கோ பரீட்சைக்கோ தகுதியற்றவர் ஆக்கப்படுவர் ;

(iii) ஒரு வருடத்துக்கு அல்லது இரண்டு வருடங்களுக்குப் பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்துவைக்கப்படுவர் ;

(iv) சீவியகாலம்வரை பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்து வைக்கப்படுவர் ;

(v) ஒரு கால எல்லைக்குத் தராதரப் பத்திரத்தைப் பயன்படுத்த முடியாமல் தடுத்துவைக்கப்படுவர் ;

(vi) பரீட்சார்த்தியின் நடத்தை பற்றி அவருடைய மேலதிகாரிக்குத் தெரிவித்தல் அல்லது பொலிசாரிடம் பரீட்சார்த்தியை ஒப்படைத்தல் அல்லது விடயத்தைப் பொலிசாரிடம் ஒப்படைத்தல்.

பரீட்சைக்கு முன்னரோ, பரீட்சை நடக்கும்பொழுதோ பரீட்சைக்குப் பின்னரோ தேவையான நடவடிக்கை எவையேனும் அவசியமெனப் பரீட்சாதிகாரி தீர்மானித்தால் அத்தீர்மானம் முடிவானதாகக் கொள்ளப்படும். எனினும், அரசாங்க சேவைக்குப் பரீட்சார்த்திகளைத் தெரிந்தெடுக்கும் பரீட்சைகளைச் சார்ந்த பரீட்சாதிகாரியின் தீர்மானம் அரசாங்க சேவை ஆணைக்குழுவால் பரிசீலனை செய்வதற்குட்பட்டதாகும்.

1. ஒவ்வொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்தைச் சார்ந்த இடங்களிலிருந்து மேற்பார்வையாளருக்கோ அவருடைய உதவி உத்தியோகத்தருக்கோ மற்றைய பரீட்சார்த்திகளுக்கோ வசதியீனத்தையும் தொந்தரவையும் உண்டுபண்ணாது நடந்துகொள்ள வேண்டும். பரீட்சை மண்டபத்துள் பிரவேசிக்கும் போதும் வெளியேறும்போதும் பரீட்சார்த்தி அமைதியாக நடந்துகொள்ளுதல் வேண்டும்.

2. பரீட்சார்த்திகள் மேற்பார்வையாளரின் அதிகாரத்துக்குட்பட்டவராவர். பரீட்சை நடக்கும்பொழுதும் அதற்கு முன்னரும் பின்னரும் பரீட்சை மேற்பார்வையாளரும் கவனிப்பாளரதும் கட்டளைப்படி நடந்து பரீட்சை மேற்பார்வையாளருக்கு உதவிசெய்தல் வேண்டும்.

3. பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி நிலவச் செய்ய வேண்டும். பரீட்சார்த்திகள் எக்காரணம் பற்றியும் மண்டபத்திலுள்ள மற்றும் பரீட்சார்த்திகளுடனோ வெளியேயுள்ள பரீட்சார்த்திகளுடனோ தொடர்புவைத்துக்கொள்ள அனுமதிக்கப்பட மாட்டார். பரீட்சை உத்தியோகத்தர்களுடன் மாத்திரமே தொடர்பு வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படுவர். மிக அத்தியாவசியமான நிலைமையுண்டானால் மேற்பார்வையாளரின் அனுமதியைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

4. மேற்பார்வையாளரால் ஒழுங்குசெய்யப்பட்ட மேசையைவிட வேறெந்த மேசையையும் பரீட்சார்த்தி உபயோகிக்கக்கூடாது. மேற்பார்வையாளரின் அனுமதியோடன்றி ஒரு மாற்றமும் செய்யக்கூடாது. பரீட்சார்த்தி தமக்கு ஒழுங்குசெய்யப்படாத வேறு ஒருவரின் ஆசனத்திலிருந்தால் அவர் நேர்மையீனமான முறையில் நடந்துகொள்ள எத்தனித்ததாகக் கருதப்படுவர்.

5. பரீட்சார்த்தி தமது விடைத்தாளில் பெயரை எழுதாது சுட்டிலக்கத்தையே எழுதுதல் வேண்டும். ஒரு பரீட்சார்த்தி பிறிதொரு பரீட்சார்த்தியின் சுட்டிலக்கத்தைத் தமது விடைத்தாளில் குறித்திருந்தால் அவர் ஏமாற்றுவதற்கு எத்தனித்ததாகக் கருதப்படுவர். சுட்டிலக்கம் தெளிவற்ற முறையில் எழுதப்பட்டிருந்தால் அவ்விடைத்தாள் கவனிக்கப்பட மாட்டாது.

6. பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட விடையெழுதுந்தாளையோ வெறெவ்விதப் பொருளையோ பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே எடுத்துக்கொண்டு போதல் கூடாது. அத்தகைய விடை எழுதுந்தாளும் பொருளும் பரீட்சாதிகாரிக்குச் சொந்தமானவையாகும். இவ்விதிக்கு மாறாக நடந்துகொண்டால் அது நேர்மையீனமான நோக்கங்களைக் கொண்ட நடத்தையெனக் கருதப்படும்.

7. வினாத்தாள் கொடுக்கப்பட்ட அரை மணித்தியாலத்துக்குப் பின் பரீட்சார்த்தி எச்சந்தர்ப்பங்களைக் கொண்டும் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்கப்பட மாட்டார் இந்த நேர எல்லை கழிந்த பின்னர் தான் பரீட்சார்த்தி பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியேறவும் அனுமதிக்கப்படுவர். செய்முறை அல்லது வாய்மொழிப் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்க மறுக்கலூம்.

8. பரீட்சார்த்திகள் எழுதுவதற்கெனக் கொடுக்கப்பட்ட விடைத்தாளில் எழுதுவதேயல்லூமல் ஒற்றுத்தாளிலோ வினாத்தாளிலோ மேசையிலோ வேறெந்த இடத்திலோ எழுதக்கூடாது. இவ்விதிக்கு முரணாக நடந்தால் பரீட்சார்த்தி நேர்மையற்ற நோக்கங்களுடன் நடந்துகொண்டதாகக் கருதப்படுவர்.

9. ஒரு பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட கடதாசியோ விடைப் புத்தகமோ கிழிக்கப்படவோ கசக்கப்படவோ மடிக்கப்படவோ வேறெவ்விதத்திலோ சேதப்படுத்தப்படவோ கூடாது. பருமட்டான வேலை செய்யப்பட்ட கடதாசியும் புறக்குறிப்பு எழுதிய கடதாசியும் விடைத்தாள்களின் பகுதியாக அமைய வேண்டும். அத்தகைய பருமட்டான வேலை முதலியவற்றை ஒழுங்காகக் கீறிவிடவேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதிய எவற்றையும் வெளியே எடுத்துச்செல்லல் ஆகாது. ஒரு வினாவுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட பலவிடங்களில் விடையெழுதியிருந்தால் தேவைப்படாத விடைகளை வெட்டிவிடுக. இவ்விதிக்கு மாறாக நடந்தால் அது ஏமாற்றுவதற்கு எத்தனமெனக் கருதப்படும்.

10. கணித சம்பந்தமான வினாக்களுக்குப் பிழையான செய்கை வழிகளுடனோ செய்கை வழியில்லூமலோ சரியான விடைகள் இருந்தால் சித்திரத்தில் அலங்கார ரூபச் சித்திரமும், கருத்து வெளிப்பாட்டுச் சித்திரமும் கருத்திலும் அளவிலும் நோக்கத்திலும் பெரும்பாலும் வேறுமொன்றினோடு ஒத்திருந்தால் அல்லது பெரும்பாலும் ஒத்திருந்தால் அவை நேர்மையற்ற வழிகள் மூலம் பெற்றவையெனக் கருதப்படும்.

11. பரீட்சை மண்டபத்துள் ஒரு பரீட்சார்த்தி தம்வசம் அல்லது பக்கத்தில் எவ்விடத்திலேனும் புத்தகம், சட்டைப்பையில் வைக்கக்கூடிய புத்தகம், குறிப்புப் புத்தகம், கொப்பிப் புத்தகம் முதலியவைகளையோ மண்டபத்துள் கொடுக்கப்பட்ட தாள்களைவிட வேறு தாள்களையோ வைத்திருக்கக் கூடாது. தேவைக்கு வேண்டிய மாதிரி வர்ணப்பெட்டியையோ, கணிதக் கருவிப்பெட்டியையோவிட கைப்பை, அழகு செய்செப்பு, பார்சல் முதலியவற்றையோ, கோவை அட்டை, கடதாசி மட்டை, வெற்றுக் கடதாசிக் கொப்பி, மடித்த புதினப்பத்திரிகை, மாட்டுத்தாள் முதலியவற்றையோ வைத்திருக்கக் கூடாது. இப்பிரமாணத்தை மீறி நடப்போர் தண்டனைக்கு உள்ளாவார்கள்.

12. பரீட்சை மண்டபத்திலிருக்கும் பரீட்சார்த்தி தம்வசம் புத்தகங்களையோ குறிப்புக்களையோ வைத்திருக்கக் கூடாது. மேற்பார்வையாளருக்கு தேவையெனக் கண்டால், ஒவ்வொரு பரீட்சார்த்தியும் தம்வசமுள்ள பொருள்கள் இவையெனக் கூறிவிட வேண்டும். இந்நிபந்தனைகளை மீறினால் நேர்மையற்ற முறைகளைக் கையாண்டதாகக் கருதப்படுவர்.

13. பிற பரீட்சார்த்திகளின் விடைத்தாளிலிருந்தோ புத்தகத்திலிருந்தோ கடதாசியிலிருந்தோ குறிப்புகள் முதலியவற்றிலிருந்தோ பரீட்சார்த்திகள் பார்த்து எழுதக்கூடாது என எச்சரிக்கை செய்யப்படுகின்றனர். ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்தியின் விடைத்தாளைப் பார்க்க எத்தனிக்கக்கூடாது. ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்திக்கு உதவிசெய்யவும் அப்பரீட்சார்த்தியிடமிருந்தோ வேறொருவரிடமிருந்தோ உதவி பெறவுங்கூடாது. விடையெழுதப்பட்ட ஒவ்வொரு தாளும் எழுதப்படும் தாளின்கீழ் வைக்கப்பட வேண்டும். விடைத்தாளைக் கண்டபடி மேசைக்குமேல் விடக்கூடாது.

14. தற்காலிகமாகப் பரீட்சை மண்டபத்தைவிட்டு வெளியே செல்ல பரீட்சார்த்திகளுக்கு எச்சந்தர்ப்பத்திலும் அனுமதி கொடுக்கப்படமாட்டாது. எனினும் அவசியமான சந்தர்ப்பங்களில் மேற்பார்வையாளர் வேண்டிய அனுமதியைக் கொடுப்பர். ஆனால் பரீட்சார்த்தி ஒரு கவனிப்பாளருடன் செல்லவிடப்படுவர். பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்லும்பொழுதும், மீண்டும் வரும் பொழுதும் சோதிக்கப்படுவர்.

15. பரீட்சை மண்டபத்தில் அல்லது பரீட்சைக்கு முன்னர் ஒருவருக்காக வேறொருவர் எழுதுவது குற்றமாகும். உண்மை பற்றிய அடையாளப் பத்திரங்களில் மாற்றங்கள் செய்தல், பிழையான விபரங்கள் கொடுத்தல், பிழையான விபரங்களைச் சரியென உறுதிப்படுத்தல் என்பன குற்றமாகும். இவற்றையிட்டு பரீட்சார்த்திகள் எச்சரிக்கை செய்யப்படுகின்றனர்.

16. பரீட்சார்த்தியல்லூத ஒருவர் பரீட்சார்த்திக்கு நேர்மையல்லூத முறையில் உதவி செய்வது பாரதூரமான குற்றமெனக் கருதப்படும்.

பரீட்சார்த்திகள் தம் சொந்த நலனைக்கருதி கீழ்வரும் விதிகளைக் கவனித்தல் வேண்டும்

(i) ஒரு பாடம் தொடங்குவதற்குக் குறிக்கப்பட்ட நேரத்திலும் பார்க்க குறைந்தது 10 அல்லது 15 நிமிடங்களுக்கு முன்பாக பரீட்சை மண்டபத்தில் இருத்தல் வேண்டும். பரீட்சை மண்டபம் இருக்குமிடம் குறிப்பாகத் தெரியாவிடின் பரீட்சை நடக்கும் நாளுக்கு முன்நாளே விசாரித்து அறிந்துகொள்ள வேண்டும்.

(ii) ஒரு பாடத்துக்குத் தோற்றுவதைப் பற்றியோ தோற்றுவதற்குரிய தகுதிகளைப் பற்றியோ ஐயமேதுமிருப்பின் அப்பாடம் தொடங்குமுன் அதை மேற்பார்வையாளரிடமிருந்து தீர்த்துக்கொள்ள வேண்டும். இல்லூவிட்டால் குறிப்பிட்ட பாடத்திற்குத் தோற்றும் தகைமை நிராகரிக்கப்படக்கூடும்.

(iii) நீர் உண்மையான பரீட்சார்த்தியென நிரூபிப்பதற்குரிய சான்றுப்பத்திரங்கள் உம்மிடமிருந்து எதிர்பார்க்கப்பட்டால் ஒவ்வொரு பாடத்துக்குத் தோற்றும் பொழுதும் இப்பத்திரங்களைப் பரீட்சை மண்டபத்துக்கு நீர் கொண்டு வருதல் வேண்டும். தேவையான உறுதிப்பத்திரங்களை நீர் வைத்திருக்காவிடில் பரீட்சைக்குத் தோற்றும் உமது தகைமை நிராகரிக்கப்படும். உண்மை பற்றிய சான்றுப்பத்திரங்களைக் கொண்டுவர மறந்துபோனால் பரீட்சை முடியுமுன்னர் அவற்றைக் காண்பிப்பதாக மேற்பார்வையாளரோடு ஒழுங்கு செய்தல் வேண்டும்.

(iv) சாதாரணமாகப் பரீட்சைக்கு வேண்டிய விடைத்தாள், ஒற்றுத்தாள், கணனி ரேகைத்தாள், பேரேட்டுத்தாள், சுருக்கி எழுதுவதற்குரிய தாள் என்பன கொடுக்கப்படும். வழக்கமாகக் கொடுப்பதற்கு மாறாக வேறெவையேனும் கொடுக்கப்பட்டால் அதைப்பற்றி மேற்பார்வையாளருக்கு உடனே அறிவிக்க வேண்டும். உமக்கெனக் கொடுபடாத தாள் எவற்றையும் உபயோகிக்கக் கூடாது. மேல் மிச்சமாகக் கொடுக்கப்பட்ட எவற்றையும் சேதப்படுத்தாமல் உமது மேசைமேல் விட்டுவிடுக. மடக்கை வாய்ப்பாடுகள் கொடுக்கப்பட்டால் கவனமாக உபயோகித்த பின்னர் அவற்றை உமது மேசைமேல் விட்டுவிட வேண்டும்.

(v) சொந்தப் பேனைகள், மை, அடிமட்டைகள், கணித உபகரணக் கருவிகள், பென்சில், அழிறப்பர்கள், நிறப் பென்சில்கள், வர்ணக்கட்டிகள், நீர்வர்ணங்கள், விஞ்ஞானப் பிரதி செய்யும் தாள்கள் முதலியவற்றைப் பரீட்சார்த்திகள் கொண்டுவருதல் வேண்டும்.

(vi) விடைத்தாள் ஒவ்வொன்றிலும் நீர் உபயோகித்த வேறு தாளிலும் பரீட்சையின் பெயரையும் உமது சுட்டிலக்கத்தையும் கண்டிப்பாகக் குறிப்பாகக் குறிப்பிடுதல் வேண்டும். விடையெழுதுந் தாளில் இரு பக்கத்திலும் துப்புரவாகவுந் தெளிவாகவும் எழுதுதல் வேண்டும். ஒரு விடையிலுள்ள ஒவ்வொரு பகுதி விடைக்குமிடையில் ஒவ்வொரு வெற்றுக்கோடு விடப்பட வேண்டும். முழு விடைக்குப் பின்னர் ஒரு கோடு கீறப்பட வேண்டும். அல்லது சில வெற்றுக்கோடுகள் விடப்பட வேண்டும். விடைகளை ஒன்றோடொன்று நெருக்கி எழுத வேண்டாம்.

(vii) உமக்குக் கொடுக்கப்பட்ட விடைத்தாளிலுள்ள இடதுபக்க அடைப்பில் வினாவுக்குரிய இலக்கத்தை எழுதுக. வலதுபக்கத்து அடைப்பு, பரிசோதகரின் உபயோகத்துக்காக விடப்பட்டிருக்கிறது. தவறான இலக்கங்களிடின் சங்கடங்கள் ஏற்படுமாகையால் உமது விடைக்குரிய சரியான இலக்கங்களையிடுக.

(viii) எல்லூ விபரமாக கணக்கீடுகளையும் பெரும்படியான வேலைகளையும் நீர் செய்யும் கணக்குக்குரிய செய்கை வழிகளில் முறையான அமைப்பு முறையில் தருக. வரைபடங்கள், கோட்டு ரூபங்கள், சிறு படங்கள் என்பன திட்டமாகவும் பெரிதாகவும் இருக்க வேண்டும். வரைபடத்தை அல்லது கோட்டு ரூபத்தை அல்லது சிறுபடத்தைக் காட்டி எழுதப்படும் விடை, விடைத்தாளில் மறுபக்கத்தில் தொடரப்படுமானால் அவ்வடிவங்கள் மறுபடியும் கீறப்பட வேண்டும்.

(ix) ஒவ்வொரு பாடத்தின் முடிவிலும் நீர் எழுதிய முறைப்படி உமது விடைத்தாள்களைக் கவனமாக ஒழுங்குபடுத்தி நெருக்கமாகவும் உறுதியாகவும் ஒன்றுசேர்த்து இடதுபக்கத்து மேல் மூலையில் (வலதுபக்க மேல் மூலையிலன்று) உமக்குக் கொடுக்கப்பட்ட நூலூல் கட்டுதல் வேண்டும்.

(x) வினாப்பத்திரத்தின் தலைப்பில் கட்டாய வினாக்கள் தெரிவுக்குரிய வினாக்கள் பற்றியுள்ள விதிகளைக் கவனமாக அவதானித்தல் வேண்டும். இவற்றைக் கவனியாது விடைகள் எழுதப்படின் உமது சித்தியின் தரம் பாதிக்கப்படும்.

(xi) உமது விடைத்தாள்களைத நேரடியாக மேற்பார்வையாளரிடமோ கவனிப்பாளரிடமோ கொடுத்தல் வேண்டும். அல்லது இவர்களில் ஒருவர் வந்து ஏற்றுக்கொள்ளும் வரை உமது ஆசனத்தில் இருக்க வேண்டும். இது செய்யத் தவறினால் உமது விடைத்தாள் காணாமற் போய் இப்பாடத்துக்கு நீர் வரவில்லையென எண்ணப்படும். எக்காரணம் பற்றியும் சேவகரிடமோ பணியாளரிடமோ விடைத்தாள்களைக் கொடுத்தல் கூடாது.

(xii) மேற்பார்வையாளரிடம் அல்லது கவனிப்பாளரிடம் பேச அல்லது மேலதிகமான விடைத்தாள்கள் முதலியன பெறவேண்டினால் உமது ஆசனத்திலிருந்து கையை உயர்த்திக்காட்ட வேண்டும்.

பரீட்சை ஆணையாளர் நாயகம்.

இலங்கை பரீட்சைத் திணைக்களம்,
பெலவத்தை,
பத்தரமுல்லை.

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

## கல்வி அமைச்சு

*ஆசிரியர் கல்லூரிகளில் ஆசிரியர் கல்விப் பாடநெறியினைத் தொடர்வதற்காக ஆசிரியர்களைத் தேர்ந்தெடுத்தல் – 2019/2020*

கல்வி அமைச்சினால் வெளியிடப்பட்ட சுற்றறிக்கை இலக்கம் 28/2016 இற்கமைய தகைமைகளைப் பூர்த்தி செய்யும் பட்டதாரி அல்லாத பயிற்றப்படாத ஆசிரியர்களுக்கு ஆசிரியர் கல்லூரிகளில் ஆசிரியர் கல்விப் பாடநெறியினைத் தொடர்வதற்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

ஆசிரியர் கல்விப் பாடநெறியினை இதுவரை பூர்த்தி செய்யாத ஆசிரியர்கள், ஆசிரியர் உதவியாளர்கள், இச் சுற்றறிக்கை இலக்கம் 28/2016 இற்கமைய தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவங்களை 2019, ஏப்பிறல் 27 ஆந் திகதிக்கு முன்னர் "கல்விப் பணிப்பாளர், ஆசிரியர் கல்வி நிருவாகக் கிளை, கல்வி அமைச்சு, இசுருபாய, பத்தரமுல்லை" என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்ப வேண்டும்.

இச்சுற்றறிக்கை, விண்ணப்பப்படிவம் மற்றும் ஆலோசனைப்படிவத்தை கல்வி அமைச்சின் உத்தியோகபூர்வ இணையத்தளம் மூலம் (www.moe.gov.lk) எந்தவொரு வலயக் கல்வி அலுவலகத்தின் மூலமும் பெற்றுக்கொள்ள முடியும்.

பத்மசிறி ஜயமான்ன,
செயலாளர்.

கல்வி அமைச்சு,
இசுருபாய, பத்தரமுல்ல.

*3-1519*

---

## நீதி மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சு

*சட்ட அறிக்கைகளை சிங்களத்தில்/தமிழில் மொழிபெயர்ப்புச் செய்யும் கூறின் தட்டெழுத்தாளர் (சிங்களம்/தமிழ்) பதவிக்காக ஆட்சேர்ப்புச் செய்தல் – 2019*

நீதி மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சின் சட்ட அறிக்கைகளை சிங்களத்தில்/தமிழில் மொழிபெயர்ப்புச் செய்யும் கூறின் வெற்றிடமாக உள்ள தட்டெழுத்தாளர் (சிங்களம் - 03/தமிழ் -03) 6 பதவிகளுக்காக ஆட்சேர்ப்புச் செய்து கொள்வதற்கு பின்வரும் தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இவ்வறிவித்தலின் இறுதியிலுள்ள மாதிரிப் படிவத்தின் படி தயார் செய்யப்பட்ட விண்ணப்பங்கள் பின்வரும் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ "செயலாளர், நீதி மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சு, மீயுயர் நீதிமன்றக் கட்டடத்தொகுதி, கொழும்பு 12" என்னும் முகவரிக்குக் கிடைக்கக் கூடியவாறு பதிவு அஞ்சலில் அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும். கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "சட்ட அறிக்கைகளை மொழிபெயர்ப்புச் செய்யும் கூறின் தட்டெழுத்தாளர் (சிங்களம்/தமிழ்) பதவிக்காக ஆட்சேர்ப்புச் செய்து கொள்ளல்" எனத் தெளிவாகக் குறிப்பிடுதல் வேண்டும்.

விண்ணப்பங்கள் கோரப்படும் இறுதித் திகதி 2019.04.25 ஆகும்.

**குறிப்பு** : விண்ணப்பமொன்று அல்லது அது சம்பந்தப்பட்ட கடிதமொன்று தபாலில் காணாமற் போனதாக அல்லது தாமதமாகியதாக செய்யப்படுகின்ற முறைப்பாடுகள் கவனத்திற் கொள்ளப்படமாட்டாது. இறுதி நாள் வரை விண்ணப்பங்களைத் தாமதப்படுத்துவதனால் ஏற்படக்கூடிய நட்டங்களுக்கு விண்ணப்பதாரர்களே பொறுப்பாளிகளாவர்.

1. **நியமனம் நடைமுறைப்படுத்தல்.**- நியமிக்கப்படுகின்ற எண்ணிக்கை மற்றும் நியமனம் நடைமுறைப்படுத்தப்படும் திகதி அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் கட்டளையின் படி நீதி மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சின் செயலாளரால் தீர்மானிக்கப்படும்.

2. **சேவை நிபந்தனைகள்.-**

(i) இந்நியமனம் நிரந்தரமானது.

(ii) இப்பதவிக்கு நியமனம் பெறுகின்ற அலுவலர் ஒருவர் 03 வருடகால நன்னடத்தைக் காலத்திற்கு உட்படுவதுடன், அக்காலத்துள் முதலாம் வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சையில் சித்தியடைய வேண்டும்.

(iii) பொது நிர்வாக சுற்றறிக்கை 01/2014 மற்றும் அதற்கு இடைநேர்விளைவான சுற்றறிக்கைகளின் படி மொழி பற்றிய தேர்ச்சி மட்டத்தை 05 வருடகாலத்துள் பெற்றுக்கொள்ள வேண்டும். அரசகரும மொழியல்லாத மொழி மூலமொன்றில் சேவையில் சேர்ந்த அலுவலர்களால் 03 வருடகாலத்துள் ஓர் அரசகரும மொழி பற்றிய தேர்ச்சியை பெற்றுக்கொள்ள வேண்டுமென்பதுடன், மற்றைய அரசகரும மொழி பற்றிய தேர்ச்சி 05 வருட காலத்துள் பெற்றுக்கொள்ள வேண்டும்.

(iv) அரசாங்க சேவைகள் ஆணைக்குழு நடவடிக்கை முறை விதிகளுக்கும், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக் கோவைக்கும் அரசாங்கத்தின் நிதி ஒழுங்குவிதிகளுக்கும் திணைக்களத்தின் ஏனைய கட்டளைகளுக்கும் இந்நியமனம் உட்படும்.

3. **ஆட்சேர்ப்புச் செய்யும் தரம்** - தரம் III

4. **சம்பள அளவுத்திட்டம்.-** இப்பதவிக்கு 03/2016 ஆம் இலக்க பொது நிர்வாக வேதன சுற்றறிக்கையின் படி MN-1-2016 ரூபா 27,140-10 × 300 - 11 × 350 - 10 × 495 - 10 × 660 - ரூபா 45,540 ஆகிய (மாதாந்த) சம்பள அளவுத்திட்டமொன்று உரித்தாகிறது. தரங்கள் முறை சம்பந்தப்பட்ட ஆரம்ப சம்பள படிநிலை 2019.01.01 ஆந் திகதிக்கு 24,336 ரூபாவாகும்.

5. **தகைமைகள்.-**

I. **கல்வித் தகைமைகள் :**

(அ) மொழி/ இலக்கியம் மற்றும் கணிதம் உட்பட 04 திறமைச் சித்திகளுடன் இரு அமர்வுகளுக்கு மேற்படாத அமர்வுகளில் ஒரே அமர்வில் ஆகக் குறைந்தது ஐந்து (05) பாடங்களுடன் 06 பாடங்களில் க.பொ.த. (சாதாரண தரம்) பரீட்சையில் சித்தியடைந்திருத்தல்.

(ஆ) க.பொ.த. (உயர்தரம்) பரீட்சையில் ஆகக்குறைந்தது ஒரு (01) பாடத்திலாவது (சாதாரணப் பொதுப் பரீட்சை தவிர்ந்த) சித்தியடைந்திருத்தல்.

II. **தொழிற்றகைமைகள் :**
க.பொ.த. (சாதாரண தரம்) தட்டெழுத்துப் பாடத்திற்காக திறமைச் சித்தி பெற்றிருத்தல்.

III. **அனுபவம் :**
சிங்களம்/தமிழ் ஒரு நிமிடத்தில் 20 சொற்கள் வேகத்தில் தட்டெழுத்துச் செய்யும் ஆற்றல்

6. **வயதெல்லை.-** விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு 18 வயதுக்குக் குறையாதவராகவும் 30 வயதுக்கு மேற்படாதவராகவும் இருக்க வேண்டும்.

7. **உடற்றகைமைகள்.-**

(i) தீவின் எப்பாகத்திலும் சேவையாற்றுவதற்கு உகந்த, சிறந்த உடல் மற்றும் உளநலம் கொண்டவராக இருத்தல்.

(ii) பதவியின் கடமைகளை நிறைவேற்றுவதற்குத் தகுதியான உடல் ஆரோக்கியத்தைக் கொண்டிருத்தல்.

8. **பிற தகைமைகள்.-**

(i) விண்ணப்பதாரர் இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.

(ii) விண்ணப்பதாரர் நல்லொழுக்கமுள்ளவராக இருத்தல் வேண்டும்.

(iii) பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்து கொள்வதற்காகத் தேவையான சகல தகைமைகளையும் பூர்த்தி செய்ய வேண்டுமென

விண்ணப்பங்களைக் கோரும் அறிவித்தலில்/ வர்த்தமானப் பத்திரிகையில் குறிப்பிடப்படுகின்ற தினத்தில் அத்தகைமைகளை சகல விதத்திலும் பூர்த்தி செய்திருக்க வேண்டும். (தகைமைகளை உறுதிப்படுத்துவதற்காக சான்றிதழ்களின் பிரதிகள் விண்ணப்பத்துடன் சமர்ப்பிக்க வேண்டும்).

9. **ஆட்சேர்ப்பு முறை.-**

9.1 **தொழிற் பரீட்சை.-**

நீதி மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சின் செயலாளரால் அங்கீகரிக்கப்படுகின்ற நிறுவன மொன்றினால் நடாத்தப்படுகின்ற தொழிற் பரீட்சையொன்றின் மூலம் புள்ளிகள் வழங்கப்படும்.

**தொழிற் பரீட்சையில் புள்ளிகள் வழங்கும் விதம் :**

| பாடம் | உச்ச புள்ளிகள் | சித்தியடையும் புள்ளிகள் |
|---|---|---|
| தட்டெழுத்து (ஆகக் குறைந்தது வேகம் ஒரு நிமிடத்தில் 20 சொற்கள் வீதம் 20 நிமிடங்கள் தட்டெழுத்துச் செய்தல்) | 100 | 40% |

9.2 **அமைப்பு முறையான நேர்முகப் பரீட்சை.-**

நீதி மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சின் செயலாளரால் நியமிக்கப்படுகின்ற அமைப்பு முறையான நேர்முகப் பரீட்சைச் சபையொன்றின் மூலம் புள்ளிகள் வழங்கப்படும்.

அமைப்பு முறையான நேர்முகப் பரீட்சையில் புள்ளிகள் வழங்கும் முறை :

| புள்ளிகள் வழங்கும் பிரதான துறைகள் | உச்ச புள்ளிகள் | சித்தியடையும் புள்ளிகள் |
|---|---|---|
| 01. கல்வித் தகைமைகள் | 10 | |
| 02. ஆங்கில மொழிஅறிவு | 10 | |
| 03. கணினி அறிவு | 15 | |
| 04. அனுபவம் | 40 | 40 |
| 05. தொழிற்றகைமைகள் | 20 | |
| 06. ஆளுமை | 05 | |

**குறிப்பு**: தொழிற் பரீட்சையில் சித்தியடையும் விண்ணப்பதாரர்களில் அமைப்பு முறையான நேர்முகப் பரீட்சை மற்றும் தொழிற் பரீட்சை ஆகிய இரண்டிலும். பெற்றுக்கொள்ளும் மொத்தப் புள்ளிகளின் திறமை தொடர்வரிசையின்படி மற்றும் உளதாம் வெற்றிடங்களின் எண்ணிக்கையின் படி பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்யப்படும்.

10. விண்ணப்பம் 22 × 29 செ. மீ. அளவிலான ஏ4 கடதாசிகளில் தயார் செய்யப்பட வேண்டுமென்பதுடன், 1-12 வரையிலான தலைப்புக்கள் முதலாம் பக்கத்திலும், 13-16 வரையிலான தலைப்புக்கள் இரண்டாம் பக்கத்திலும் உள்ளடங்கும் வகையில் தயார் செய்யப்படுதல் வேண்டும். அதற்கான தகவல்களை தனது கையெழுத்தினாலேயே தெளிவாக உள்ளடக்க வேண்டும். சகல விதத்திலும் பூர்த்தி செய்யப்படாதுள்ள, அடிப்படைத் தகைமைகளைக் கொண்டிராத, உரிய தினத்திற்குப் பின்னர் கிடைக்கப் பெறுகின்ற மற்றும் மாதிரி விண்ணப்பப்பத்திரத்திற்கு அமைவாக இல்லாத விண்ணப்பங்கள் எவ்வித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும். சம்பந்தப்பட்ட விண்ணப்பத்தின் பிரதியொன்றை தன்வசம் வைத்திருப்பது பயனுள்ளதாகவிருக்கும் - மேலும் பூர்த்தி செய்யப்படுகின்ற விண்ணப்பம், அறிவித்தலில் குறிப்பிட்டுள்ள மாதிரி விண்ணப்பப்பத்திரத்திற்கு இயைந்ததாக உள்ளதா என விண்ணப்பதாரரால் பரீட்சித்துப் பார்க்க வேண்டுமெனவும் அவ்வாறு இல்லாதவிடத்து விண்ணப்பம் நிராகரிக்கப்படுமெனவும் அறிவித்துக் கொள்கிறேன். விண்ணப்பங்கள் இத்துடன் உள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கமைவாக தயார் செய்ய வேண்டும். விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்றமை அறிவிக்கப்படமாட்டாது.

அரசாங்க சேவையில், மாகாண அரசாங்க சேவையில், அரச கூட்டுத்தாபனங்களில் சேவையிலுள்ள அலுவலர்கள் தமது திணைக்கள/நிறுவனத் தலைவரினூடாக விண்ணப்பங்களை அனுப்பி வைக்க வேண்டும்.

11. **பரீட்சைக் கட்டணம்.-** ஒவ்வொரு விண்ணப்பதாரரும் பரீட்சைக் கட்டணமாக ரூபா 300.00 தொகையொன்றை மக்கள் வங்கியின் நகர மத்தி கிளையின், நீதி மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சின் செயலாளரின் பெயரில் உள்ள 176100199025184 ஆம் கணக்கு இலக்கத்தில் வரவு வைக்க வேண்டும். சம்பந்தப்பட்ட பற்றுச்சீட்டின் மூலப் பிரதி

விண்ணப்பத்தில் குறிப்பிட்ட இடத்தில் இணைத்து அனுப்பப்படுதல் வேண்டும்.

12. அரசாங்க சேவைகள் ஆணைக்குழு நடவடிக்கை முறை விதிகள், காலத்துக்குக்காலம் அரசாங்க சேவை சம்பந்தமாக வழங்கப்பட்டுள்ள சுற்றறிக்கைகள் மற்றும் நீதி மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சின் சட்ட அறிக்கைகளை சிங்களத்தில்/ தமிழில் மொழிபெயர்ப்பு செய்யும் கூறின் தட்டெழுத்தாளர் (சிங்களம்/ தமிழ்) பதவிக்கான ஆட்சேர்ப்பு நடவடிக்கை முறையின் நிபந்தனைகள் இப்பதவிக்காக ஏற்புடையதாகின்றன.

ஆர். எம். டீ. பி. மீகஸ்முல்ல,
செயலாளர்,
நீதி மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சு.

2019, மாச்சு 02.

மாதிரி விண்ணப்பப்படிவம்

இல. ..........................................
(அலுவலக உபயோகத்துக்காக)

மொழிமூலம்

| | |
|---|---|
| சிங்களம் | |
| தமிழ் | |

(உரிய கூட்டினுள் (√) அடையாளமிடுக.)

**நீதி மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சு**

சட்ட அறிக்கைகளை சிங்களத்தில்/தமிழில் மொழிபெயர்ப்புச் செய்யும் கூறின் தட்டெழுத்தாளர் (சிங்களம்/தமிழ்) பதவிக்காக ஆட்சேர்ப்புச் செய்தல் - 2019

1. (அ) முதலெழுத்துக்களுடன் பெயர் (சிங்களத்தில்/தமிழில்) :
..........................................................................................................
முதலெழுத்துக்களுடன் பெயர் (ஆங்கில கெப்பிடல் எழுத்தில்) :----.
..........................................................................................................

(ஆ) முழுப் பெயர் (சிங்களத்தில்/தமிழில்) :----.
..........................................................................................................
முழுப் பெயர் (ஆங்கில கெப்பிடல் எழுத்தில்) :----.
..........................................................................................................

2. நிரந்தர முகவரி (சிங்களத்தில்/தமிழில்) :
..........................................................................................................

3. நிரந்தர முகவரி (ஆங்கில கெப்பிடல் எழுத்தில்) :----.
..........................................................................................................

4. கடிதங்கள் கிடைக்கப்பெற வேண்டிய முகவரி (ஆங்கில கெப்பிடல் எழுத்தில்) :----.
..........................................................................................................
(நிரந்தர முகவரி மாறுபடுமாயின் மாத்திரம் பூர்த்தி செய்க.)

5. தொலைபேசி இலக்கம் :----.

6. தேசிய ஆள் அடையாள அட்டை இல. : ............................................

7. ஆணா, பெண்ணா ? என்பது :----.

8. பிறந்த திகதி :
ஆண்டு :----. மாதம் :----. திகதி :----.

9. விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதி நாளுக்கு வயது :
வருடங்கள் :----. மாதங்கள் :----. நாட்கள் :----.

10. இனம் :----.

11. விவாகமானவரா/விவாகமாகாதவரா ? :----.

12. க. பொ. த. (உ. த.) பரீட்சைப் பெறுபேறுகள் :
ஆண்டு :----. சுட்டெண் :----.

| பாடம் | சித்தி |
|---|---|
| | |
| | |
| | |
| | |

13. க. பொ. த. (சா. த.) பரீட்சைப் பெறுபேறுகள் :
ஆண்டு :----. சுட்டெண் :----.

| பாடம் | சித்தி |
|---|---|
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |

14. விண்ணப்பங்கள் கோரப்படும் அறிவித்தலின் 05 ஆம் பந்தியின்படி தகைமைகள் :
(i) கல்வித் தகைமைகள் : ----.
(ii) தொழிற்றகைமைகள் :----.
(iii) அனுபவம் :----.

15. மொழித்தேர்ச்சி - (சம்பந்தப்பட்ட நிரலில் √ அடையாளத்தை இடுக.):

| | மிக நன்று | நன்று | சாதாரணம் | பலவீனம் |
|---|---|---|---|---|
| சிங்களம் | | | | |
| தமிழ் | | | | |
| ஆங்கிலம் | | | | |

*16.* பரீட்சைக் கட்டணம் செலுத்திய பற்றுச்சீட்டு.

விண்ணப்பதாரியின் சான்றிதழ் :

........... ஆகிய நான், இதில் குறிப்பிடப்பட்டுள்ள சகல தகவல்களும் உண்மையானவை மற்றும் சரியானவை எனத் தெரிவித்துக் கொள்கிறேன். நான் அரசாங்க சேவையிலிருந்து விலக்கப்படவோ அல்லது வினைத்திறமையின்மையின் மீது சேவையிலிருந்து ஓய்வுபெற செய்யப்படவோ இல்லை எனவும், பதவிகளைக் கைவிட்டுச் சென்ற ஒருவராக கருதப்படவில்லை எனவும் அத்தாட்சிப்படுத்துகிறேன். இதில் குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் எவையும் பொய்யானவை அல்லது பிழையானவை என நான் தெரிவு செய்யப்படுவதற்கு முன்னர் தெரியவருமிடத்து தகுதியற்றவனாவேன் எனவும். தெரிவு செய்யப்பட்டதன் பின்னர் தெரியவருமிடத்து எவ்வித நட்டஈடுமின்றி தொழிலிருந்து நீக்கப்படுவேன் எனவும் நான் அறிவேன்.

----,
திகதி :----. விண்ணப்பதாரியின் கையொப்பம்.

*3-1540*

---

**சுகாதாரம், போஷணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சு**

ஆரம்ப தர வைத்திய உத்தியோகத்தர்களுக்கும் பல் சத்திரசிகிச்சை வைத்திய உத்தியோகத்தர்களுக்குமான திணைக்களப் பரீட்சை - 2019, மாச்சு

*2014.10.11* ஆந் திகதியும் *1883/17* ஆம் இலக்கமும் கொண்ட இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதி விஷேட வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்பட்டுள்ள சுகாதார சேவையின் வைத்திய உத்தியோகத்தர்கள் தொடர்பான நியதிச் சட்டக் கோவையின் 08 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள வகையில் ஆரம்ப தர வைத்திய உத்தியோகத்தர்கள் II ஆம் தரத்திற்கு உயர்த்தப்படுவதற்கு முன்பும், பல் சத்திர சிகிச்சை வைத்திய உத்தியோகத்தர்கள் தமது சேவையில் உறுதிப்படுத்துவதற்கு முன்பும், இங்கு முன்னர் இத்திணைக்களப் பரீட்சையினை பூர்த்தி செய்யாத நிர்வாக தரத்தையோ விஷேட வைத்திய தரத்தையோ சேர்ந்த உத்தியோகத்தர் ஒருவர் அந்நியமனம் கிடைக்கப்பெற்ற திகதியிலிருந்து இரண்டு வருடங்களினுள் தேர்ச்சியடைய வேண்டிய திணைக்களப் பரீட்சை 2019.04.28 ஆந் திகதி சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளிலும் நடாத்தப்படும் என்பதை இத்தால் அறிவிக்கப்படுகின்றது. பரீட்சை நடாத்தப்படும் இடமும் கால அட்டவணையும் பிரவேசப் பத்திரத்துடன் அனுப்பி வைக்கப்படும்.

*02.* **தகைமைகள்**.- உரிய பரீட்சையினைப் பூரணப்படுத்தியிராத ஆரம்ப தர வைத்திய உத்தியோகத்தர்களும், நியமனத்தில் உறுதிப்படுத்தப்படாத பல் சத்திர சிகிச்சை நிபுணர்களும் இந்தப் பரீட்சையின் பொருட்டு விண்ணப்பிக்க முடியும். மேலும் இத் திணைக்களப் பரீட்சையினை பூரணப்படுத்தியிராத நிர்வாக தரத்தைச் சேர்ந்த வைத்திய உத்தியோகத்தர் தரத்தைச் சேர்ந்தவர்களும், விசேட வைத்திய நிபுணர் தரத்தைச் சேர்ந்தவர்களும் இப் பரீட்சையின் பொருட்டு விண்ணப்பிக்க முடியும்.

*03.* **விண்ணப்பங்கள்**.- இச்சுற்று நிருபத்தில் இறுதியில் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்தைப் போன்று விண்ணபதாரிகளினால் தயாரித்துக் கொள்ளப்பட்ட விண்ணப்பங்கள் *2019.03.22* ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் நிறுவனத் தலைவரிடம் கையளிக்கப்பட வேண்டும். விண்ணப்பதாரி பரீட்சைக்குத் தோற்றுவதற்கான அனைத்து தகைமைகளையும் பூரணப்படுத்தியுள்ளதாக நிறுவனத் தலைவர் சான்றுப்படுத்திய பின் விண்ணப்பமானது "சுகாதார அமைச்சு, கொழும்பு – 10, இலக்கம் 385, வண. பத்தேகம விமலவங்ச தேரர் மாவத்தை, சுவசிரிபாய கட்டிடத்தில் பணிப்பாளர் (பரீட்சை)" அவர்களுக்கு *2019.03.30* ஆந் திகதி அல்லது அத்தினத்திற்கு முன்பு கிடைக்கக்கூடியதாக பதிவுத் தபால் மூலம் அனுப்பப்பட வேண்டும். தனது விண்ணப்பத்துடன் முகவரி எழுதப்பட்ட ரூபா 45.00 பெறுதியான முத்திரை ஒட்டப்பட்ட 9''X4'' அளவுள்ள கடித உறைகள் 02 அனுப்பப்பட வேண்டும். (இதில் விரும்பிய வகையில் அலுவலக முகவரி அல்லது சொந்த முகவரியை எழுதலாம்).

**கவனிக்கவும்**: மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு அமைய விண்ணப்பம் A4 தாளின் இரண்டு பக்கங்களையும் உபயோகித்து தயாரிக்கப்பட வேண்டும். முதற் பக்கத்தில் இலக்கம் 01 -04 (உ) வரையும் இரண்டாம் பக்கத்தில் 04 (ஊ) – 09 வரையும் அமையுமாறு விண்ணப்பம் தயாரிக்கப்படல் வேண்டும். மேற்படி தகவல்களுக்கு அமைய தயாரிக்கப்படாத விண்ணப்பங்கள் எதுவித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும் என்பதை கவனத்தில் கொள்ளவும்.

04. **பரீட்சைக் கட்டணம்**:-

(i) முதன்முறையாக பரீட்சைக்குத் தோற்றும் விண்ணப்பதாரர்கள், பரீட்சைக் கட்டணத்தினின்றும் விலக்களிக்கப்படுவர். ஏனைய விண்ணப்பதாரர்கள் ஒரு விடயத்திற்கு 25 ரூபா வீதம் மதிப்பிழக்கப்படாத முத்திரைகளை விண்ணப்பத்தில் ஒட்டி அதன் மேல் தனது கையொப்பத்தையும் திகதியையும் இட்டு அதை செல்லுபடி நீக்கம் செய்யப்படுதல் வேண்டும்.

(ii) எக்காரணத்தைக் கொண்டும் இவ்வாறு செலுத்தப்பட்ட பரீட்சைக் கட்டணம் வேறு பரீட்சையொன்றின் பொருட்டு மாற்றவோ அல்லது மீளச் செலுத்தப்படவோ மாட்டாது.

05. **பரீட்சைக்கு உட்படுத்தல்**.-

(i) ஏற்றுக்கொள்ளப்பட்ட விண்ணப்பங்களுக்கு அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்படும். அவ் அனுமதிப்பத்திரங்களை உரிய முறையில் நிரப்பி பரீட்சை நிலைய அதிபருக்குச் சமர்ப்பித்தல் வேண்டும். அனுமதி அட்டைகள் சமர்ப்பிக்கப்படாத எந்த ஒரு பரீட்சார்த்தியும் பரீட்சைக்கு அனுமதிக்கப்படமாட்டார்கள்.

(ii) விண்ணப்பதாரர்களினால் பரீட்சை மண்டபத்தினுள் பரீட்சை நிலைய அதிபருக்குத் தனது ஆளடையாளத்தை நிரூபித்தல் வேண்டும். அதன் பொருட்டு கீழே குறிப்பிடப்படும் ஆவணங்களில் ஒன்றைச் சமர்ப்பித்தல் வேண்டும்:

(அ) தேசிய ஆள் அடையாள அட்டை;

(ஆ) சுகாதார அமைச்சு மற்றும் அதனுடன் ஏற்புடைய நிறுவனங்களினால் முறைப்படி வழங்கப்பட்ட அடையாள அட்டை;

(இ) செல்லுபடியாகும் வாகனச் சாரதி அனுமதிப்பத்திரம்;

(ஈ) செல்லுபடியாகும் கடவுச்சீட்டு.

(iii) தவிர்க்க முடியாத காரணத்தினால் பரீட்சை அனுமதிப்பத்திரம் கிடைக்கப் பெறாதவிடத்து சுகாதார அமைச்சின் இணையத்தளத்தில் தங்களினது பரீட்சைச் சுட்டெண், பரீட்சை நிலையம் என்பவற்றினை பெற்றுக்கொண்டு தங்களது கையொப்பத்தினை உறுதிப்படுத்திய திணைக்களத் தலைவரின் கடிதத்துடன் இணையத்தளத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சை நிலையத்தில், இணையத்தளத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சுட்டெண்ணில் தாங்கள் பரீட்சையினை மேற்கொள்ள முடியும். அனுமதி அட்டை கிடைக்கப் பெற்றவர்கள் கட்டாயமாக கையொப்பத்தினை உறுதிப்படுத்திக்கொண்டு வருதல் வேண்டும். (கையொப்பத்தினை உறுதிப்படுத்திய கடிதம் அல்லது கையொப்பம் உறுதிப்படுத்தப்பட்ட அனுமதி அட்டையினை முன்னளிப்பு செய்யாதவர்கள் பரீட்சைக்குத் தோற்ற அனுமதிக்கப்படமாட்டார்கள்.)
(சுகாதார அமைச்சின் இணையத்தள முகவரி www.health.gov.lk)

06. **பரீட்சைத் திட்டம்**.- இப்பரீட்சை மூன்று எழுத்து மூல கட்டுரை வினாப்பத்திரங்களையும் சிங்கள/தமிழ் வாய்மொழிப் பரீட்சை ஆகிய 04 பிரிவுகளைக் கொண்டுள்ளது. ஒவ்வொரு பிரிவிற்கும் 100 புள்ளிகள் வீதம் ஒதுக்கப்பட்டுள்ளது. தேர்ச்சியடைவதன் பொருட்டு ஒரு விடயத்திற்கு குறைந்தபட்சம் 50 புள்ளிகளைப் பெற்றுக்கொள்ள வேண்டும். ஒரு அமர்வில் அல்லது பல அமர்வுகளில் பிரிவுகளுக்குத் தோற்றி பரீட்சையைப் பூரணப்படுத்திக்கொள்ளலாம்.

07. **பரீட்சைப் பாடத்திட்டம்** :-

7.1 ***எழுத்துப் பரீட்சை*** :

7.1.1 தாபனவிதிக்கோவை :
நேரம் 02 மணித்தியாலம். 08 வினாக்களில் 05 வினாக்களுக்கு விடையளிக்க வேண்டும்.

பாடவிதானம் :

I. சுகாதார அமைச்சின் சுகாதாரத் திணைக்களத்தின் பொதுவான ஒழுங்குவிதிகள்.
II. அரசாங்க சேவை ஆணைக்குழுவின் ஒழுங்குவிதிகள்.
III. தாபனவிதிக்கோவை

I ஆம் பிரிவு:- VI, VII, VIII, IX, XII, XIII, XIV, XV, XVI, XVII, XVIII, XXIII, XXIV, XXV, XXVI, XXVII, XXVIII, XXX, XXXI, XXXII ஆகிய அத்தியாயங்கள்.
II ஆம் பிரிவு:- XLVII, XLVIII ஆகிய அத்தியாயங்கள்.

7.1.2 வைத்தியசாலைகள், மருந்துச்சாலைகள் என்பவற்றின் நிர்வாகம் :-
நேரம் 1 1/2 மணித்தியாலம். 07 வினாக்களில் 04 வினாக்களுக்கு விடையளிக்க வேண்டும்.

பாடவிதானம் :
சுகாதாரக் கைநூல்

I. வைத்தியசாலைகள், பொதுச் சுகாதார நிர்வாகம்
II. ஆய்வுகூட சேவை முகாமைத்துவம்
III. மருந்து முகாமைத்துவம்

7.1.3. கணக்கியல் :-
நேரம் 02 மணித்தியாலம். 07 வினாக்களில் 04 வினாக்களுக்கு விடையளிக்க வேண்டும்.

பாடவிதானம் :

I. சுகாதாரத் திணைக்களத்தில் களஞ்சியக் கணக்கு வைத்தல் தொடர்பான ஒழுங்குவிதிகள்

II. சுகாதாரத் திணைக்களத்தில் வழிகாட்டிக் கைநூலில் நிதி தொடர்பான பந்தி

III. சுகாதார வைத்திய உத்தியோகத்தர் ஒருவரின் நாளாந்த கடமைகளுக்கு ஏற்புடைய நிதிப்பிரமாணம்

I ஆம் அத்தியாயம்- நிதிப்பிரமாணம் 1, 2, 78

II ஆம் அத்தியாயம்- நிதிப்பிரமாணம் 90, 91, 101, 102, 103, 104, 105, 106, 107, 108, 109, 110, 113, 115, 118, 119

III ஆம் அத்தியாயம்- நிதிப்பிரமாணம் 124, 125, 126, 127, 128, 131, 133, 134, 135, 136, 137, 138, 139, 140, 142, 143, 151, 152, 154, 155, 156, 189

V ஆம் அத்தியாயம்- நிதிப்பிரமாணம் 200, 201, 215, 225, 238, 245, 255, 257, 260

VI ஆம் அத்தியாயம்- நிதிப்பிரமாணம் 380, 381, 382, 383, 384, 385, 386, 388, 389, 390, 391, 392, 393, 394

VII ஆம் அத்தியாயம்- நிதிப்பிரமாணம் 488, 493

XIII ஆம் அத்தியாயம்- நிதிப்பிரமாணம் 715, 716, 756, 757, 758

பெறுகை வழிகாட்டிக் கோவை

1 ஆம் அத்தியாயம் - அனைத்து பிரிவுகளும்

2 ஆம் அத்தியாயம்- 2.3, 2.4, 2.5, 2.6, 2.7, 2.8

3 ஆம் அத்தியாயம் - 3.1, 3.2, 3.3, 3.4, 3.5, 3.6, 3.7, 3.8, 3.9

7.2 ***சிங்களம்/ தமிழ் வாய்மொழிப் பரீட்சை.***- சிங்களம்/ தமிழ் ஆற்றலை அளப்பதன் பொருட்டு திணைக்களத்தின் பதவிநிலை உத்தியோகத்தர்களினால் நடாத்தப்படும் வாய்மொழிப் பரீட்சையாகும். தனது நாளாந்த கடமைகளில் ஈடுபடும்பொழுது மேலோங்கும் நிகழ்வுகள் தொடர்பாக சிங்கள மொழி மூல உத்தியோகத்தர்களுக்குத் தமிழ் மொழியிலும், தமிழ் மொழிமூல உத்தியோகத்தர்களுக்கு சிங்கள மொழியிலும் கலந்துரையாடுவதற்கு உத்தியோகத்தருக்கு உள்ள ஆற்றலைப் பரீட்சித்தல். (நேரம் 10 நிமிடம்)

08. **பரீட்சை தொடர்பான ஒழுங்குவிதிகளைக் கடைப்பிடித்தல்.**- பரீட்சார்த்திகள் குறிப்புக்களை தன்னிடத்தில் வைத்து பார்த்து எழுதுதல் தடைசெய்யப்பட்டுள்ளது. ஏனைய பரீட்சார்த்திகளின் விடைத்தாளினை பார்த்து எழுதுதலும் தடை செய்யப்பட்டடுள்ளது, ஒருவருக்கொருவர் உதவி செய்தலை தவிர்த்துக்கொள்ளல் வேண்டும். மேலும் கையடக்கத் தொலைபேசி மற்றும் அதனுடன் தொடர்புடைய தொடர்பாடல், இலத்திரனியல் உபகரணங்களை பயன்படுத்தாதிருத்தல் வேண்டும். இவ்விதிகளை மீறும் எந்தவொரு பரீட்சார்த்தியின்மீதும் நடவடிக்கை எடுக்கப்படும்.

09. தயவுசெய்து இச்சுற்றுநிருபத்தை உங்கள் நிறுவனத்தில் கடமையில் ஈடுபட்டுள்ள உத்தியோகத்தர்களுக்கு அறிவிப்பதற்கு ஏற்பாடுகளை மேற்கொள்ளவும். இத்தகவல்கள் www.health.gov.lk எனும் இணையத்தளத்தில் பெற்றுக்கொள்ள முடியும்.

**குறிப்பு**.- இவ்வறிவித்தலில் சிங்களம், தமிழ், ஆங்கில மொழி பெயர்ப்புக்களில் ஏதாவது ஒவ்வாமை காணப்படின் சிங்கள மொழி மூல அறிவித்தலே வலுவுடையதாகும்.

வசந்தா பெரேரா,
செயலாளர்,
சுகாதாரம், போஷணை மற்றும் சுதேச
வைத்திய அமைச்சு.

சுகாதாரம், போஷணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சு,
'சுவசிரிபாய',
385, வண. பத்தேகம விமலவங்ச தேரர் மாவத்தை,
கொழும்பு 10,
2019, மாச்சு 18.

மாதிரி விண்ணப்பப்படிவம்

[ ]
(அலுவலக உபயோகத்திற்காக)

**ஆரம்பதர வைத்திய உத்தியோகத்தர்களுக்கும் பல் சத்திரசிகிச்சை வைத்திய உத்தியோகத்தர்களுக்குமான திணைக்களப் பரீட்சை - 2019, மாச்சு**

01. (அ) (i) விண்ணப்பதாரியின் முழுப்பெயர் (தமிழில்) :----.

(ii) விண்ணப்பதாரியின் முழுப்பெயர் (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்):

| | | | | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | | | | | | | | | |

(iii) முதல் எழுத்துக்களுடன் பெயர்: (தமிழில்) :----.

(iv) முதல் எழுத்துக்களுடன் பெயர் : (ஆங்கில கெப்பிட்டல் எழுத்துக்களில்)

| | | | | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | | | | | | | | | |

(ஆ) பதவி (உரிய கூண்டினுள் (✓) அடையாளமிடவும் :

(i) வைத்திய உத்தியோகத்தர் [ ]    (ii) பல் சத்திரசிகிச்சை வைத்திய உத்தியோகத்தர்கள் [ ]

(ii) தகுதிகூர் நிலைக்கால நியமனம் பெற்ற திகதி :----.

(iii) ஆரம்ப தரம்/தரம் II இற்கு நியமிக்கப்பட்ட திகதி :----.

02. நீங்கள் இம்முறை தோற்றுவதற்கு எதிர்பார்க்கும் விடயங்களுக்கு முன்னாள் உள்ள கூண்டினுள் (✓) அடையாளத்தை இடவும், தோற்றாவிடின் (×) குறியை இடவும் :

வைத்தியசாலைகள் மருந்துச்சாலைகள் என்பவற்றின் நிர்வாகம் [ ]    தாபனவிதிக்கோவை [ ]    கணக்கியல் [ ]

சிங்களம் வாய்மொழி [ ]    தமிழ் வாய்மொழி [ ]

03. பரீட்சைக்குத் தோற்றும் மொழி (உரிய கூண்டினுள் (✓) அடையாளத்தை இடவும்) :

சிங்களம் [ ]    ஆங்கிலம் [ ]    தமிழ் [ ]

04. (அ) (i) தற்பொழுது சேவையாற்றும் சேவை நிலையம் :----.
(ii) சேவை நிலையம் நிர்வகிக்கப்படுவது: மத்திய அரசின்கீழ் [ ]
மாகாண அரசின் கீழ் [ ]

(ஆ) (i) மாகாண சபையாயின் உரிய மாகாணம் :----.

(ii) அதற்குரிய மாவட்டம் :----.

(இ) கையடக்கத் தொலைபேசி இல.: | | | | | | | | | | |

(ஈ) தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் : | | | | | | | | | | | | |

(உ) கீழ்வரும் பரீட்சை நிலையங்களில் விரும்பிய பரீட்சை நிலையம். (தெரிவு செய்யும் பரீட்சை நிலையத்திற்கு போதிய விண்ணப்பதாரிகள் இல்லாதவிடத்து அண்மையிலுள்ள பரீட்சை நிலையத்திற்கு அல்லது சுகாதார சேவைப் பணிப்பாளர் நாயகத்தினால் தீர்மானிக்கப்படும் பரீட்சை நிலையத்திற்கு அழைக்கப்படுவர்) பொருத்தமான கூண்டினுள் சரி (✓) அடையாளமிடுக :

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| கொழும்பு | | கந்தானை | | அம்பாந்தோட்டை | | அம்பாறை | |
| களுத்துறை | | காலி | | பதுளை | | வவுனியா | |
| குருநாகல் | | அநுராதபுரம் | | இரத்தினபுரி | | பொலநறுவை | |
| கண்டி | | மட்டக்களப்பு | | யாழ்ப்பாணம் | | திருகோணமலை | |

(ஊ) அனுமதிப்பத்திரம் அனுப்புவதன் பொருட்டு பிழையற்ற தெளிவாக முகவரி எழுதப்பட்ட 9"x4" அளவுள்ள ரூபா 45.00 பெறுமதியான முத்திரைகள் ஒட்டப்பட்ட கடித உறைகள் 02 விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்ப வேண்டும்.

(எ) I. அஞ்சல் முகவரி (சிங்களத்தில் அல்லது தமிழில்) :----.

II. அஞ்சல் முகவரி (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) :----.

05. (அ) இதற்கு முன் இப்பரீட்சைக்குத் தோற்றியுள்ளீரா? :----.

(ஆ) முதன் முறை அல்லாவிடின் முத்திரைகள் ஒட்டப்பட்டுள்ளனவா? அவ்வாறு தோற்றி இருப்பின் இம்முறையின் பொருட்டு முத்திரைகள் ஒட்டியுள்ளதா? :----.

முத்திரைக் கூண்டு (முத்திரையை ஒட்டி அதன் மீது கையொப்பமிடுக)

06. **விண்ணப்பதாரரின் சான்றுரை**:

எனது அறிவிற்கும் நம்பிக்கைக்கும் எட்டியவகையில்,

(i) இவ்விண்ணப்பத்தில் என்னால் தரப்பட்டுள்ள விபரங்கள் யாவும் உண்மையானவையெனவும், நான் இப்பரீட்சைக்குத் தோற்றுவது முதன் முறையாக என்றபடியால் கட்டணம் செலுத்தத் தேவையில்லை எனவும்/ முதன் முறை அல்லாதபடியால் ரூபா ..................... பெறுமதியான முத்திரைகள் ஒட்டியுள்ளதெனவும், இவ்விண்ணப்பத்திற்கு என்னால் ஒட்டப்பட்டுள்ள முத்திரைகள் செல்லுபடி நீக்கம் செய்யப்படுவதற்கு முன்பு பாவிக்கப்படாத முத்திரைகள் எனவும் வெளிப்படுத்துகின்றேன்.

(ii) சுகாதாரம், போஷணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சினால் பரீட்சை தொடர்பாக விதிக்கப்பட்டுள்ள சட்டதிட்டங்களுக்கு அமைந்து நடப்பதற்கும், இப்பரீட்சை தொடர்பான நியதிச் சட்டத்தின் படி நான் தகைமையற்றவன் எனக் காணப்படின் எனது பரீட்சார்த்தத் தன்மையை இரத்துச் செய்வதற்கு மேற்கொள்ளப்படும் எவ்விதத் தீர்மானத்திற்கும் நான் கட்டுப்படுவேன் எனவும் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.

------,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :----.

07. சுயவிபரக் கோவையினை கையாளும் விடய உத்தியோகத்தரின் சான்றிதழ்.-

இவ் விண்ணப்பமானது விண்ணப்ப முடிவுத் திகதிக்கு முன்னர் என்னிடம் கையளிக்கப்பட்டது என்றும், சுயவிபரக் கோவையில் உள்ள தகவல்களின் அடிப்படையில் சரியாக பூரணப்படுத்தப்பட்டுள்ளது என்றும், இத் திணைக்களப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு தேவையான தகைமைகள் பூரணப்படுத்தப்பட்டுள்ளது என்றும் இவ்விண்ணப்பப் பத்திரத்தின் பிரதி ஒன்று சுயவிபரக் கோவையில் கோவையிடப்பட்டுள்ளது என்றும் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.

------,
உத்தியோகத்தரின் கையொப்பம்.

திகதி :----.

08. நிறுவனத் தலைவரின் சான்றிதழ் :

திரு./ திருமதி/ செல்வி .............................. என்பவர் எனது நிறுவனத்தில் சேவை புரியும் வைத்திய உத்தியோகத்தர்/ பல் வைத்தியர் என்றும், இப்பரீட்சைக்குத் தோற்றுவது முதன்முறை/ அல்லாத படியால் ரூபா ...................... பெறுமதியான முத்திரைகள் இவ்விண்ணப்பத்தில் ஒட்டியுள்ளதாகவும்/ முத்திரை ஒட்ட வேண்டியதில்லை எனவும் விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள விபரங்கள் விண்ணப்பதாரரின் பெயர்வழிக் கோவையிலுள்ள விபரங்களின் படி பிழையற்றவைகளெனவும் இப்பரீட்சைக்கு தோற்றுவதற்கு அவருக்கு தகைமைகள் உண்டு எனவும் எனது முன்னிலையில் கையொப்பம் இட்டார் எனவும் உறுதிப்படுத்துகின்றேன்.

------,
நிறுவனத் தலைவரின் கையொப்பம்.
(பதவி முத்திரை)

திகதி :----.

09. விஷேட இயக்க தலைவரின் சான்றிதழ் :

திரு./திருமதி/செல்வி ........................... என்பவர் ஆரம்ப தர வைத்திய உத்தியோகத்தர் ஒருவராக/பல் சத்திர சிகிச்சை வைத்தியர் ஒருவராக எனது நிறுவனத்தில் சேவையாற்றுகின்றார் எனவும் விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள விபரங்கள் விண்ணப்பதாரரின் பெயர்வழிக்கோவையிலுள்ள விபரங்களின் படி பிழையற்றவைகளெனவும் இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அவருக்குத் தகைமைகள் உள்ளன எனவும் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.

------,
பன்முகப்படுத்தப்பட்ட பிரிவு/விஷேட இயக்கத் தலைவரின் கையொப்பம்.
(பதவி முத்திரை இடப்படுதல் வேண்டும்)

திகதி :----.
(தேவையற்றனவற்றை கீறிவிடவும்)

*3 -1541*

---

**காணி அமைச்சு**

இலங்கை நில அளவைத் திணைக்களம்

**நில அளவையாளர் நாயகத்தின் உத்தரவுபெற்ற பட வரைஞர் சான்றிதழ் வழங்குவதற்காக நடாத்தப்படும் பரீட்சை – 2019**

நில அளவையாளர் நாயகத்தால், உத்தரவுபெற்ற படவரைஞராக தொழில் புரிவதற்கான சான்றிதழ் வழங்குவதற்கான பரீட்சை கொழும்பில் நடைபெறும். இப்பரீட்சை இரண்டு பகுதிகளாக நடாத்தப்படும்.-

பகுதி I – ஆள் கூற்றுப்பத்திரம் தயாரித்தல்
பகுதி II – பட வேலை

2. பகுதி I - பரீட்சை 2019 ஆம் ஆண்டு யூலை மாதம் 20 ஆந் திகதியும், பகுதி II - பரீட்சை 2019 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 19 மற்றும் 20 ஆந் திகதிகளிலும் நடைபெறும். பகுதி I பரீட்சையில் சித்தியடையாத பரீட்சார்த்திகள், பகுதி II பரீட்சைக்குத் தோற்ற அனுமதிக்கப்படமாட்டார்கள். நில அளவையாளர் நாயகத்தின் உத்தரவுபெற்ற படவரைஞராக தொழில் புரிவதற்கான சான்றிதழ் பெறுவதற்கான தகுதியைப் பெறுவதற்கு பரீட்சார்த்திகள் ஒரே தடவையில் பகுதி I மற்றும் பகுதி II ஆகிய இரு பரீட்சைகளிலும் சித்தி அடைந்திருத்தல் வேண்டும்.

3. பரீட்சார்த்திகள் பின்வருவனவற்றைச் செய்ய முடியுமென்பதில் என்னைத் திருப்திப்படுத்த வேண்டும் :

(அ) புலக் குறிப்பிலிருந்து ஆள் கூற்றுத் தாள் ஒன்றைச் சரியாக தயார் செய்து அளவைப் போகு ஒன்றின் ஆள் கூறுகளைக் கணித்தல் ;

(ஆ) புலக் குறிப்பிலிருந்து சரியான கிடைப்படம் ஒன்றை ஆள் கூறுகளையும், புறக்டாக்ரரையும் (protractor) பாவித்துக் கீறி சரியாகப் பரப்பைக் கணிக்கக் கூடியதாக இருக்க வேண்டும்.

4. பரீட்சைக்குத் தோற்றுவதற்கான தகைமைகள் :

(அ) தேசிய கல்விச் சான்றிதழ் (N. C. E.) அல்லது க. பொ. த. (சா. த.) பரீட்சையில் இரண்டு (02) திறமைச்சித்தி (Credit Pass) உட்பட ஆறு (06) பாடங்களில் சித்தி ;

மற்றும்

(ஆ) ஒரு வருடத்திற்கு குறையாத படவரைஞர் பாடநெறியுடன் தொடர்புடைய பாடநெறியை அரச தொழில்நுட்பக் கல்லூரியில் அல்லது வேறு பகுதி அரச நிறுவனங்களில் (Semi Government Institution) வெற்றிகரமாகப் பூரணப்படுத்தியிருத்தல்.

5. பரீட்சைக் கட்டணம்.- பரீட்சைக் கட்டணம் 800 ரூபா ஆகும். பரீட்சைக் கட்டணத்தை நில அளவையாளர் நாயகத்தின் சிறாப்பர் அலுவலகத்திலோ, எந்த ஒரு மாவட்ட நில அளவை அலுவலகத்திலோ அல்லது அளவையியல் படமாக்கல் நிறுவனம் தியத்தலாவையிலோ செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டை விண்ணப்பப்படிவத்தில் அதற்கென ஒதுக்கப்பட்ட இடத்தில் ஒட்ட வேண்டும். (பற்றுச்சீட்டின் ஒரு புகைப்படப் பிரதியை எதிர்கால தேவைக்காக வைத்திருக்கவும்.) மேலும் காசுக்கட்டளைகளோ, காசோலைகளோ இதன் பொருட்டு ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. பற்றுச்சீட்டு இன்றி அனுப்பி வைக்கப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். பரீட்சைக் கட்டணம் முத்திரைகளாகவோ அல்லது காசோலைகளாகவோ ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

6. விண்ணப்பப்படிவங்களைத் தயாரித்தலும் சமர்ப்பித்தலும்.- இந்த விளம்பரத்தின் இறுதியில் காணப்படும் மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு அமைய 21 செ. மீ. x 29 செ. மீ. (A4) அளவிலான தாளில் இரு பக்கங்களையும் பாவித்துத் தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவங்கள் பதிவுத்தபால் மூலம் கீழ் உள்ள முகவரிக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும். தபால் உறையின் இடது பக்க மேல் மூலையில் "நில அளவையாளர் நாயகத்தின் உத்தரவுபெற்ற படவரைஞர் சான்றிதழ் வழங்குவதற்காக நடாத்தப்படும் பரீட்சை - 2019" என்று குறிப்பிடவும்.

சிரேஷ்ட நில அளவை அத்தியட்சகர் (பரீட்சை),
பரீட்சைகள் கிளை,
நில அளவையாளர் நாயக அலுவலகம்,
தபால் பெட்டி இலக்கம் 506,
கொழும்பு 05.

தரப்பட்ட மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு அமைவாகத் தயாரிக்கப்படாத விண்ணப்பப்படிவங்களும், சரியான முறையில் பூரணப்படுத்தப்படாத விண்ணப்பப்படிவங்களும், விண்ணப்பப்படிவங்களை ஏற்றுக்கொள்ளும் திகதிக்குப் பின்னர் கிடைக்கும் விண்ணப்பப்படிவங்களும் நிராகரிக்கப்படும்.

7. எக்காரணம் கொண்டும் பரீட்சைக் கட்டணம் மீளளிக்கப்பட மாட்டாது.

8. 2019 ஆம் ஆண்டு மே மாதம் 24 ஆந் திகதிக்குப் பின்னர் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

9. வரைபுத்தாள்களும் ஆள் கூற்றுத்தாள்களும் பரீட்சை மண்டபத்தில் வழங்கப்படும். இருந்தும் வரைதல் உபகரணங்கள், ஆள் கூறுகளைக் கணிக்க உதவும் கணித வாய்ப்பாடுகள் மற்றும் விண்ணப்பதாரிகளுக்கு வேண்டிய உபகரணங்கள் யாவற்றையும் அவர்களே கொண்டு வருதல் வேண்டும். பரீட்சை மண்டப மேற்பார்வையாளரின் அனுமதியுடன் சாதாரண கணிப்பொறிகள் (Non - Programmable Scientific Calculators) பாவிக்க அனுமதிக்கப்படும்.

10. (i) பரீட்சைக்குத் தோற்றும் ஒவ்வொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்தில் மேற்பார்வையாளரைத் திருப்திப்படுத்துமளவுக்கு தனது ஆள் அடையாளத்தை நிரூபித்தல் வேண்டும். கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள ஏதாவது ஒரு ஆவணத்தைச் சமர்ப்பிப்பதன் மூலம் தனது ஆள் அடையாளத்தை நிரூபிக்கலாம் :-

(அ) ஆள் பதிவு ஆணையாளரினால் வழங்கப்பட்ட தேசிய ஆள் அடையாள அட்டை ;

(ஆ) ஒரு செல்லுபடியான கடவுச்சீட்டு ;

(இ) ஒரு அரசாங்கத் திணைக்களத்தின் அதிகாரத்துடன் பரீட்சார்த்திக்கு பரீட்சை தினத்திலிருந்து மூன்று வருடங்களுக்குள் வழங்கப்பட்டதும், வைத்திருப்பவரின் நிழற் படத்தைக் கொண்டதுமான ஏதாவதொரு சான்றிதழ் அல்லது உத்தரவுச்சீட்டு;

(ii) பந்தி 10 (i) இல் வேண்டப்பட்ட அடையாளத்தை நிரூபிக்க இயலாத எந்தவொரு பரீட்சார்த்தியும் பரீட்சைக்குத் தோற்ற அனுமதிக்கப்படமாட்டார்.

11. இப்பரீட்சை மெற்றிக் முறையில் நடத்தப்படும்.

பி. எம். பி. உதயகாந்த,
நில அளவையாளர் நாயகம்.

நில அளவையாளர் நாயகத்தின் அலுவலகம்,
த. பெ. இல. 506,
கிருல வீதி,
கொழும்பு 05,
2019, மாச்சு 05.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**இலங்கை நில அளவைத் திணைக்களம்**

*நில அளவையாளர் நாயகத்தின் உத்தரவுபெற்ற பட வரைஞர் சான்றிதழ் வழங்குவதற்காக நடாத்தப்படும் பரீட்சை - 2019*

சுட்டிலக்கம் : [ ]
(அலுவலக உபயோகத்திற்கு)

(அ) (i) முதலெழுத்துக்களுடன் பெயர் : திரு./திருமதி/செல்வி :
தமிழில் :----.
ஆங்கில பெரிய எழுத்துக்களில் :----.

(ii) முதலெழுத்தைக் குறிக்கும் பெயர் :
தமிழில் :----.
ஆங்கில பெரிய எழுத்துக்களில் :----.

(ஆ) பால் :----.

(இ) பதவி :----.

(ஈ) தொழில் செய்யுமிடத்தின் முகவரி :----.

(உ) நிரந்தர முகவரி :

தமிழில் :----.
ஆங்கில பெரிய எழுத்துக்களில் :----.

(ஊ) பிறந்த திகதி :----.

(எ) கல்வித் தகைமைகள் (உறுதிப்படுத்தப்பட்ட உண்மைப் பிரதிகள் (certified true copies) இணைக்கப்பட வேண்டும்) :----.

(ஏ) பரீட்சார்த்தி இப்பரீட்சைக்கு தோற்ற உத்தேசித்திருக்கும் மொழி (சிங்களம்/தமிழ்/ஆங்கிலம்) :----.

(ஐ) காசு செலுத்திய அலுவலகம் :----.

(ஒ) பற்றுச்சீட்டு இலக்கம் :----.

திகதி :----.

| (பற்றுச்சீட்டை இங்கே ஒட்டவும்.) |
|---|

மேற்கூறிய விபரங்கள் யாவும் சரியானதென்றும், உண்மையானதென்றும் உறுதிமொழிகின்றேன்.

----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

*3-1520*

---

## இலங்கைப் பாராளுமன்றம்

## இலங்கைப் பாராளுமன்றத்தின் பாராளுமன்ற உத்தியோகத்தர் பதவிக்கு ஆட்சேர்த்துக்கொள்வதற்கான திறந்த போட்டிப்பரீட்சை - 2019

(Open Competitive Examination for the Recruitment to the Post of Parliamentary Officer in Parliament of Sri Lanka)

01. இலங்கைப் பாராளுமன்றத்தின் பாராளுமன்ற உத்தியோகத்தர் பதவிக்கு ஆட்சேர்த்துக் கொள்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை, பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் 2019 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் கொழும்பில் நடாத்தப்படும் என இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

(அ) விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாள் 2019 ஆம் ஆண்டு யூலை மாதம் 30 ஆம் திகதியாகும்.

(ஆ) இந்த அறிவித்தல் தொடர்பான விபரங்களை www.parliament.lk எனும் இணையத்தளத்தினூடாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

02. பரீட்சைகள், ஆணையாளர் நாயகத்தினால் நடாத்தப்படும் எழுத்துப் பரீட்சையில் பெற்ற புள்ளிகளினதும் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையில் பெற்ற புள்ளிகளினதும் கூட்டுத்தொகைக்கிணங்க அதிகூடிய புள்ளிகளைப் பெற்ற பரீட்சாத்திகள் இடையிலிருந்து வெற்றிடம் நிலவுகின்ற 09 பதவிகளுக்கு நியமிப்பதற்காக தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

தெரிவுசெய்யப்படும் நபர்கள் பாராளுமன்றத்தின் நிருவாக, சட்டவாக்க சேவை, நிதி மற்றும் வழங்கல் அலுவலகங்களின் முகாமைத்துவத்திற்கு உதவவும் மற்றும் பாராளுமன்ற செயலாளர் நாயகத்தினால் ஒப்படைக்கப்படும் வேறு கடமைகளை நிறைவேற்றவும் எதிர்பார்க்கப்படுகின்றனர்.

03. மாதாந்த சம்பள அளவுத்திட்டம்:- 2016.11.07 ஆம் திகதிய 06/2016ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கையின் Iஆம் அட்டவணையின் பிரகாரம் இந்தப் பதவிக்குரிய சம்பள அளவுத்திட்டம் ரூபா 34,605 - 9 × 660 - 3 × 755 - ரூபா 42,810.00 ஆகும். உங்களுக்கான சம்பளம் மேற்குறித்த சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கு இணங்க அதன் II ஆம் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு செலுத்தப்படும். (சகல கொடுப்பனவுகளும் அடங்கலாக இந்தப் பதவிக்குரிய ஆகக்குறைந்த மொத்த மாதாந்த சம்பளம் ஏறக்குறைய ரூபா 63,000.00 ஆகும்).

04. ஆட்சேர்த்துக் கொள்வதற்கான தகைமைகள்:-

(அ) இலங்கைப் பிரஜையாக இருத்தல் வேண்டும்.

(ஆ) விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படுகின்ற இறுதித் திகதிற்கு 21 வயதுக்கு குறையாமலும் 30 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். அதற்கிணங்க 1998ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 30 ஆந் திகதிக்கு முன்னர் அல்லது 1989ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 30 ஆந் திகதிற்குப் பின்னர் பிறந்தவர்கள் மாத்திரம் இந்தப் பதவிற்கு

விண்ணப்பிப்பதற்கு தகைமை பெறுவார்கள். (அரச அல்லது மாகாண அரச முகாமைத்துவ உதவியாளர் சேவையில் 10 வருட திருப்திகரமான சேவை காலத்தை பூர்த்தி செய்துள்ள உத்தியோகத்தர்களுக்கும் மற்றும் பாராளுமன்ற செயலாளர் நாயகத்தின் பணியாட்டொகுதி ஊழியர்களுக்கும் உச்ச வயதெல்லை 40 வயதாகும்).

(இ) சிறந்த நல்லொழுக்கமுடையவராக இருத்தல் வேண்டும்.

(ஈ) கீழே குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளை பூர்த்திசெய்திருத்தல் வேண்டும்.

(i) அங்கீகரிக்கப்பட்ட ஒரு பல்கலைக்கழகத்திலிருந்து அல்லது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பட்டம் வழங்கும் ஒரு நிறுவனத்திலிருந்து பட்டம் ஒன்றைப் பெற்றிருத்தல்.

அல்லது

அரச/மாகாண அரச முகாமைத்துவ உதவியாளர் சேவையில் 10 வருட திருப்திகரமான சேவை அனுபவத்தைக் கொண்டிருத்தல்

மற்றும்

(ii) இரண்டு தடவைகளுக்கு மேற்படாத அமர்வுகளில் சிங்களம் அல்லது தமிழ், ஆங்கிலம் அல்லது ஆங்கில இலக்கியம் மற்றும் கணிதம் ஆகிய பாடங்களுக்கு திறமைச்சித்திகளுடன் க.பொ.த. (சாதாரண தர) பரீட்சையில் 06 பாடங்களில் சித்தியடைந்திருத்தல்.

குறிப்பு:- மேலேவுள்ள 4 (ஈ) (ii) இல் குறிப்பிடப்பட்டுள்ள கல்வித் தகைமைகளையுடைய, தமது பதவிகளில் நிரந்தரமாக்கப் பட்டுள்ள, பாராளுமன்றச் செயலாளர் நாயகத்தின் பணியாட்டொகுதி ஊழியர்களும் இந்தப்பதவிக்கு விண்ணப்பிக்கலாம்.

கவனிக்குக: ஒவ்வொரு விண்ணப்பதாரரும் குறித்த பதவிக்குரிய சகல தகைமைகளையும் 2019 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 30 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் கட்டாயமாக பூர்த்திசெய்திருத்தல் வேண்டும்.

05. ஆட்சேர்ப்பு முறைமை:-

எழுத்துமூல பரீட்சை மற்றும் ஒரு கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை ஆகியவற்றின் மூலம் ஆட்சேர்ப்பு செய்யப்படும்.

06. பரீட்சை நடைமுறை:-

(அ) எழுத்துமூலப் பரீட்சை

இந்துப் பரீட்சை ஆங்கில மொழி ஆற்றலையும் பொது அறிவையும் மதிப்பிடும் வகையில் இரண்டு வினாத்தாள்களை உள்ளடக்கியதாகும். இந்த இரண்டு வினாத்தாள்களும் ஆங்கில மொழியில் வழங்கப்படும். எனினும், மொழி ஆற்றலை மதிப்பிடும் வினாத்தாளில் ஒரு மொழிபெயர்ப்பு பந்தி உள்ளடங்கியிருப்பதால் விண்ணப்பதாரர்கள் தாம் பரீட்சைக்கு தோற்றுவதற்கு எதிர்பார்க்கின்ற மொழிமூலத்தை விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடுவதற்கு கவனத்திற்கொள்ள வேண்டும்.

| பாடம் | புள்ளிகள் | நேரம் | சித்தியடைவதற்கு பெறவேண்டிய ஆகக்குறைந்த புள்ளிகள் |
|---|---|---|---|
| மொழி மற்றும் மொழிபெயர்ப்பு ஆற்றல் | 100 | 2 மணித்தியாலம் | 50% |
| பொது அறிவும் நுண்ணறிவும் | 100 | 2 மணித்தியாலம் | 50% |

(1) மொழி மற்றும் மொழிபெயர்ப்பு ஆற்றல் - இந்த வினாத்தாள் விண்ணப்பதாரர்களின் ஆங்கில மொழி ஆற்றலை மதிப்பிடும் வகையில் தயாரிக்கப்பட்டுள்ள கிரகித்தல், கட்டுரையெழுதுதல், பந்தியை வாசித்து சுருக்கமெழுதுதல், சிங்கள மொழியிலுள்ள/ தமிழ் மொழியிலுள்ள ஒரு பந்தியை ஆங்கிலத்திற்கு மொழிபெயர்த்தல், ஆங்கில மொழியிலுள்ள ஒரு பந்தியை சிங்களத்திற்கு /தமிழுக்கு மொழிபெயர்த்தல் ஆகிய வினாக்களைக் கொண்டதாகும். சகல வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.

(2) பொது அறிவும் நுண்ணறிவும் - பொது அறிவு வினாத்தாள் விண்ணப்பதாரர்களின் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு போக்குகள் பற்றிய அறிவை மதிப்பிடும் வகையில் தயாரிக்கப்பட்டுள்ள வினாக்களைக்

கொண்டதாகும். இதில் அரசியலமைப்பு, சுயாதீன ஆணைக்குழுக்கள், பாராளுமன்றத்தின் பொறுப்புக்கள் கடமைகள், நீதி நிருவாகம்,நல்லாட்சிக் கோட்பாடுகள் முதலிய பிரிவுகளில் பொதுவான அறிவு மதிப்பிடப்படும். சகல வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.

(ஆ) கட்டமைக்கப்பட்டநேர்முகப்பரீட்சை:-

பாராளுமன்ற செயலாளர் நாயகத்தினால் நியமிக்கப்படும் ஒரு நேர்முகப் பரீட்சைக் குழுவினால் விண்ணப்பதாரர் களின் தொடர்பாடல் திறமைகள், மேலதிக கல்வித் தகைமைகள், கணினி எழுத்தறிவு, வெளிக்களச் செயற்பாடுகள் மற்றும் தலைமைத்துவப் பண்புகள், ஆளுமை மற்றும் நேர்முகப் பரீட்சையின்போது காட்டுகின்ற திறமைகளை மதிப்பிடும் பொருட்டு கீழ்காணும் தகவுதிறன்களுக்கு அமைய கட்டமைக்கப்பட்ட ஒரு நேர்முகப் பரீட்சைநடாத்தப்படும்.

இதில் பெற்றுக் கொள்ளக்கூடிய ஆகக் கூடிய புள்ளிகள் நூறு (100).

| | விடயப் பிரிவு | ஆகக்கூடிய புள்ளிகள் |
|---|---|---|
| 1 | தொடர்பாடல் திறமைகள் | 20 |
| 2 | மேலதிக கல்வித் தகைமைகள் | 20 |
| 3 | கணனி எழுத்தறிவு | 20 |
| 4 | வெளிக்கள செயற்பாடுகள் மற்றும் தலைமைத்துவப் பண்புகள் | 20 |
| 5 | ஆளுமை, நேர்முகப் பரீட்சையின் போது காட்டும் திறமைகள் | 20 |
| | கூட்டுத்தொகை | 100 |

குறிப்பு:-விடையளிக்கும் போது கையெழுத்துக்களிலும் மற்றும் எழுத்திலக்கணத்திலும் கவனம் செலுத்துதல் வேண்டும்.

07. சேவையில் அமர்த்துவது தொடர்பான விதிகளும் நிபந்தனைகளும்:-

அ. இந்தப் பதவி நிரந்தரமானதாகும். இந்தப் பதவிக்குரிய ஓய்வூதியத் திட்டம் தொடர்பாக அரசாங்கம் எதிர்காலத்தில் மேற்கொள்ளவிருக்கும் கொள்கை ரீதியான தீர்மானங்களுக்கு விண்ணப்பதாரர்கள் இயைந்தொழுகவேண்டும். தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரர்கள் முதலில் மூன்று (3) வருட நன்னடத்தை காலத்திற்கு அமைவாக நியமிக்கப்படுவர்கள்.அரச சேவையில் அல்லது மாகாண அரச சேவையில் நிரந்த ஓய்வூதியமுடைய ஒரு பதவியில் பணியாற்றுகின்ற எவரேனும் ஒருவர் தெரிவு செய்யப்படும் பட்சத்தில் அவர் ஒரு வருட பதிற் கடமைகாலத்திற்கு அமைய நியமிக்கப்படுவார்.

ஆ. தெரிவு செய்யப்படும் நபர்களின் எண்ணிக்கையும் மற்றும் நியமனம் செயல்வலுப் பெறும் திகதியும் பாராளுமன்ற செயலாளர் நாயகத்தினால் தீர்மானிக்கப்படும். ஏதாவது ஒரு வெற்றிடத்தை அல்லது சகல வெற்றிடங்களையும் பூர்த்தி செய்யாமல் விடுவதற்கு, பாராளுமன்ற செயலாளர் நாயகத்திற்கு அதிகாரமுண்டு.

இ. பாராளுமன்ற உத்தியோகத்தர் பதவிக்கு தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரர்கள் நன்னடத்தை/பதிற் கடமை காலப்பகுதியின் முதலாவது வருடத்தில் கணினிப் பாவனை தொடர்பான அறிவை பெற்றுக்கொள்ள வேண்டும். MICROSOFT WORD ஐ பயன்படுத்தி 25 நிமிடங்களில்250 சொற்களுக்குக் குறையாத ஒரு ஆங்கில கடிதத்தையும் மற்றும் 25 நிமிடங்களில்150 சொற்களுக்கு குறையாத ஒரு சிங்கள/ தமிழ் கடிதத்தையும் தயாரிக்கும் ஆற்றலைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

ஈ. தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரர்கள் பாராளுமன்ற செயலாளர் நாயகத்தின் பணியாட்டொகுதிற்குரிய நிதி மற்றும் திணைக்கள ஒழுங்குவிதிகளுக்கு இயைந்தொழுக வேண்டும்.

உ. தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரர்கள் விதவைகள் மற்றும் அநாதைகள்/ தபுதாரர் மற்றும் அநாதைகள் நிதியத்திற்கு தமது சம்பளத்திலிருந்து அரசாங்கம் தீர்மானிக்கும் வீதத்தில் பங்களிப்பு செய்ய வேண்டும்.

ஊ. தெரிவுசெய்யப்படும் விண்ணப்பதாரர்கள் மருத்துவ பரிசோதனைக்கு உட்படுத்தப்படுவார்கள்.

எ. தெரிவுசெய்யப்படும் விண்ணப்பதாரர்கள் நியமிக்கப்பட முன்னர் அவர்கள் பற்றிய பாதுகாப்பு விடுவிப்பு அறிக்கைகள் பெற்றுக்கொள்ளப்படும்.

ஏ. அரச, மாகாண அரச முகாமைத்துவ உதவியாளர் சேவையிலுள்ள விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பப் படிவங்களைஅந்தந்தத் திணைக்கள/நிறுவன தலைவர்களினூடாக அனுப்பிவைத்தல் வேண்டும்.

08. பொய்யான தகவல்களுக்குரிய தண்டனை:-

விண்ணப்பப்படிவத்தைப் பூர்த்தி செய்யும்போது மிகவும் கவனமாக சரியான தகவல்கள் வழங்கப்படுதல் வேண்டும். இந்தப் பரீட்சையின் ஒழுங்குவிதிகளுக்கு இணங்க எவரேனும் விண்ணப்பதாரர் ஒருவர் தகைமையற்றவர் என கண்டறியப்படும் பட்சத்தில் பரீட்சைக்கு முன்னர் அல்லது பரீட்சை நடைபெறும்போது அல்லது பரீட்சையின் பின்னர் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அவரது பரீட்சார்த்தி நிலை இரத்துச் செய்யப்படலாம்.

09. பரீட்சைக் கட்டணம்:-

பரீட்சைக் கட்டணம் ரூ. 1200/-. இந்தக் கட்டணம் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் 20-03-02-13 ஆம் இலக்க வருமானத் தலைப்பின் கீழ் அரசாங்கத்தின் வருமானத்திற்கு வரவு வைக்கப்படும் வகையில் நாட்டிலுள்ள ஏதாவது ஒரு தபால் அலுவலகத்தில் / உப தபால் அலுவலகத்தில் / மாவட்ட செயலகத்தில் / பிரதேச செயலகத்தில் மாத்திரம் செலுத்தப்படுதல் வேண்டும். குறித்த கட்டணம் செலுத்தப்பட்டு விண்ணப்பதாரரின் பெயரில் பெற்றுக் கொள்ளப்படும் பற்றுச்சீட்டு விண்ணப்பப்படிவத்தில் காட்டப்பட்டுள்ள விதத்தில் உரிய இடத்தில் கழறாதவாறு ஒட்டப்படுதல் வேண்டும். (எதிர்கால உபயோகத்திற்காக பற்றுச்சீட்டின் ஒரு பிரதியை வைத்திருப்பது பயனுள்ளதாகும்.) எக்காரணம் கொண்டும் பரீட்சை கட்டணம் மீளளிக்கப்படமாட்டாது .அத்துடன் வேறு பரீட்சைகளுக்கு அந்தக் கட்டணம் மாற்றப்படவும் மாட்டாது. மேலும் காசுக் கட்டளைகள் மற்றும் முத்திரைகள் ஏற்றுக்கொள்ளப்படவும் மாட்டாது.

10. விண்ணப்பிக்கும் முறை:-

(அ) விண்ணப்பப்படிவம் இந்த அறிவித்தலுடன் இணைக்கப்பட்டுள்ள மாதிரிப் படிவத்திற்கு அமைய தயாரிக்கப்படுதல் வேண்டும்.8½" × 12" (A4)அளவான ஒரு தாளின் இரண்டு பக்கங்களையும் உபயோகித்து விண்ணப்பப் படிவம் தயாரிக்கப்படுதல் வேண்டும். 01 தொடக்கம் 03 வரையான தலைப்புகள் தாளின் முதல் பக்கத்திலும், 04 தொடக்கம் 06 வரையான தலைப்புகள் இரண்டாம் பக்கத்திலும், 07 தொடக்கம் 09 வரையான தலைப்புகள் மூன்றாம் பக்கத்திலும் அமையும் வகையில் தயாரிக்கப்படுதல் வேண்டும் என்பதை குறிப்பாக கவனத்தில் கொள்ளவும். விண்ணப்பப் படிவத்தின் தலைப்பில் குறிப்பிட்டுள்ள பரீட்சையின் பெயரை சிங்கள மொழிமூல விண்ணப்பப்படிவங்களில் சிங்கள மொழிக்கு மேலதிகமாக ஆங்கில மொழியிலும், தமிழ் மொழிமூல விண்ணப்பப்படிவங்களில் தமிழ் மொழிக்கு மேலதிகமாக ஆங்கில மொழியிலும் குறிப்பிடுதல் வேண்டும்.

உரிய மாதிரிப் படிவத்தை அனுசரிக்காத, உரிய திகதிக்கு முன்னர் குறித்த பரீட்சைக் கட்டணம் செலுத்தப்படாத மற்றும் உரிய முறையில் பூரணப்படுத்தப்படாத விண்ணப்பப் படிவங்கள் அறிவித்தல் ஏதுமின்றி நிராகரிக்கப்படும். விண்ணப்பப்படிவம் உரிய முறையில் பூரணப்படுத்தப்படாததால் ஏற்படும் இழப்புகளை விண்ணப்பதாரர்களே பொறுப்பேற்க வேண்டும். விண்ணப்பப்படிவத்தின் ஒரு நிழற்பிரதியை தம்வசம் வைத்திருப்பது பயனுள்ளதாகும். பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவம் பரீட்சை தொடர்பான அறிவித்தலின் இறுதியில் தரப்பட்டுள்ள விண்ணப்பப்படிவத்திற்கு அமைவானதா என்பதை விண்ணப்பதாரர்கள் பரிசீலித்துக்கொள்ள வேண்டும். உரிய மாதிரிப் படிவத்திற்கு இணங்க தயாரிக்கப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படலாம்.

(ஆ) வர்த்தமானி அறிவித்தலில் கோரப்பட்டுள்ள தகைமைகளை பூர்த்தி செய்வதர்கள் மாத்திரம் விண்ணப்பித்திருப்பார்கள் எனும் முன்கூட்டிய முடிவுக்கு இணங்க உரிய பரீட்சைக் கட்டணத்தை செலுத்தி குறிப்பிடப்பட்டுள்ள திகதியில் அல்லது அதற்கு முன்னர் தமது விண்ணப்பப்படிவங்களை சமர்ப்பித்துள்ள சகல விண்ணப்பதாரர்களுக்கும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் போட்டிப் பரீட்சைக்கு தோற்றுவதற்கான சந்தர்ப்பம் வழங்கப்படும். போட்டிப் பரீட்சைக்கு தோற்றுவதற்காக அனுப்பிவைக்கப்படும் அனுமதி அட்டை விண்ணப்பதாரர் இந்தப்பதவிக்கான தகைமைகளைப் பூர்த்திசெய்துள்ளார் என்பதாக கருதப்படமாட்டாது. விண்ணப்பதாரர்கள் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டு, வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட தகைமைகளை பூர்த்திசெய்துள்ளனரா என்பதை பரிசீலிக்கும்போது தேவையான தகைமைகள் இல்லையெனத் தெரியவருமிடத்து குறித்த ஆளின் பரீட்சார்த்தி நிலை இரத்துச் செய்யப்படும்.

(இ) விண்ணப்பப்படிவத்தை தாங்கிவருகின்ற கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "இலங்கைப் பாராளுமன்ற உத்தியோகத்தர் பதவிக்கு ஆட்சேர்த்துக்கொள்வதற்கான போட்டிப் பரீட்சை - (2019)" எனக் குறிப்பிடப்படுதல் வேண்டும்.

(ஈ) பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்கள் 2019 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 30 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் கீழ்காணும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பப்படுதல் வேண்டும்.

பரீட்சைகள் ஆணையாளர் நாயகம்,
ஒழுங்கமைப்பு (தாபன மற்றும் வெளிநாட்டுப்) பரீட்சைகள் கிளை,
இலங்கைப் பரீட்சைகள் திணைக்களம்,
த.பெ. இல. 1503,
கொழும்பு.

11. பரீட்சைக்கு தோற்றுதல்:-

(அ) விண்ணப்பப்படிவம் கிடைத்தமை பற்றி அறிவிக்கப்படமாட்டாது. விண்ணப்பதாரர்களுக்கு அனுமதி அட்டைகள் அனுப்பப்பட்டவுடன் அது பற்றிய அறிவித்தல் இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தினால் வெளியிடப்படும். அறிவித்தல் வெளியாகி 02 அல்லது 03 நாட்கள் கழிந்தும் அனுமதி அட்டை கிடைக்கவில்லை எனில் அறிவித்தலில் குறிப்பிட்டுள்ளவாறு இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்திற்கு அது பற்றி அறிவிக்க வேண்டும். அவ்வாறு அறிவிக்கும்போது விண்ணப்பித்த பரீட்சையின் பெயரையும், விண்ணப்பதாரியின் முழுப் பெயரையும்,தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கத்தையும் முகவரியையும் குறிப்பிட வேண்டும். கொழும்புக்கு வெளியிலுள்ள விண்ணப்பதாரராயின், அனுமதி அட்டையின் ஒரு பிரதியை தொலைநகலினூடாக அனுப்பி வைக்குமாறு கோரி மேற்படி விபரங்களுடன் தனது தொலைநகல் இலக்கத்தைக் குறிப்பிட்டு ஒரு கடிதத்தை, இந்த அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள எமது தொலைநகல் இலக்கத்துக்கு அனுப்பி வினவுவது பயனுள்ளதாகும். மேலும், பரீட்சைகள் திணைக்களத்தினால் கோரப்படுகின்ற தேவையான விபரங்களை உறுதிப்படுத்துவதற்கு விண்ணப்பதாரியிடமுள்ள விண்ணப்பப் படிவத்தின் பிரதி, பரீட்சைக் கட்டணத்திற்கான பற்றுச்சீட்டின் பிரதி, விண்ணப்பப்படிவத்தை பதிவுத் தபாலில் அனுப்பியமைக்கான பற்றுச்சீட்டு என்பவற்றை தயார் நிலையில் வைத்திருப்பது பயன் அளிக்கக்கூடியதாகும்.

(ஆ) விண்ணப்பப்படிவத்திலும் பரீட்சைக்கான அனுமதி அட்டையிலும் விண்ணப்பதாரரின் கையொப்பம் உறுதிப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும். ஏதேனும் ஒரு நிறுவனத்திலிருந்து பரீட்சைக்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரர் தனது கையொப்பத்தை நிறுவனத்தின் தலைவரால் அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தரால்,அவ்வாறல்லாத விண்ணப்பதாரர் தனது கையொப்பத்தை அரசாங்க பாடசாலை அதிபர்/ ஓய்வுபெற்ற உத்தியோகத்தர், தனது பிரிவின் கிராம அலுவலர், சமாதான நீதவான்,சத்தியப் பிரமாண ஆணையாளர்,சட்டத்தரணி, பிரசித்த நொத்தாரிசு,முப்படைகளின் தகவுடைய அதிகாரி, அரசாங்க அல்லது மாகாண அரசாங்க சேவையில் நிரந்தர பதவிநிலைத் தரத்திலான அலுவலர்அல்லது பௌத்த விகாரையின் தலைமைப் பிக்கு அல்லது பிற மத ஸ்தலங்களுக்கு பொறுப்பாகவுள்ள அல்லது மதத் தலைவர்களில் முக்கியநிலை வகிப்பவர் ஆகியோர்களில் ஒருவரால் உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். குறித்துரைக்கப்பட்ட பரீட்சை நிலையத்தில் பரீட்சைக்கு தான் தோற்ற வேண்டும் என்பதுடன்,அவ்வாறு தோற்றும் முதலாவது தடவையிலேயே பரீட்சை நிலையத்திற்கு பொறுப்பு உடைய அதிகாரியிடம் தனது கையொப்பம் உறுதிப்படுத்தப்பட்ட அனுமதி அட்டையை சமர்ப்பிக்க வேண்டும். அவ்வாறு உறுதிப்படுத்தப்பட்ட அனுமதி அட்டையை சமர்ப்பிக்காத விண்ணப்பதாரர் பரீட்சைக்குத் தோற்ற அனுமதிக்கப்படமாட்டார்.

(இ) பரீட்சையின் பெறுபேறுகள்

இந்த அறிவித்தலின் 06 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளதன் பிரகாரம்,எழுத்துமூல பரீட்சைக்குத் தோற்றி தகைமைபெறும் பரீட்சார்த்திகள் கட்டமைக்கப்பட்ட நேர்முகப்பரீட்சைக்குத் தோற்றியதன் பின்னர்,எழுத்துமூல பரீட்சையிலும் மற்றும் கட்டமைக்கப்பட்ட நேர்முகப்பரீட்சையிலும் பெற்ற மொத்தப் புள்ளிகளின் கூட்டுத் தொகை அடிப்படையில், திறமை ஒழுங்கில் பெறுபேறுகள் அடங்கிய பட்டியல் தயாரிக்கப்படும். இலங்கைப் பரீட்சைகள் திணைக்களம் பாராளுமன்ற செயலாளர் நாயகத்துக்கு எழுத்துமூல பரீட்சையின் பெறுபேறுகளை சமர்ப்பித்த பின்னர், அந்த எழுத்துப் பரீட்சைக்குத் தோற்றிய சகல பரீட்சார்த்திகளுக்கும் அவர்களின் பெறுபேறுகளை தனிப்பட்ட ரீதியில் அனுப்பி வைப்பதற்கு அல்லது இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தின் www.results.exams.gov.lk எனும் இணையத்தளத்தில் வெளியிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

12. பரீட்சார்த்திகளின் ஆளடையாளத்தை உறுதிசெய்வதற்கு கீழே குறிப்பிடப்பட்டுள்ள ஆவணங்களில் ஒன்றைப் பரீட்சை நிலையத்திற்கு பொறுப்புடைய அதிகாரியிடம் சமர்ப்பிக்க வேண்டும்.

(i) தேசிய ஆள் அடையாள அட்டை;

(ii) செல்லுபடியாகும் கடவுச்சீட்டு;

(iii) செல்லுபடியாகும் சாரதி அனுமதிப்பத்திரம்.

13. பரீட்சையை நடத்துதல் மற்றும் பெறுபேறுகளை வெளியிடுதல் தொடர்பில் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் ஒழுங்குவிதிகளுக்கு பரீட்சார்த்திகள் இயைந்தொழுக வேண்டும். இந்த ஒழுங்குவிதிகள் மீறப்படும் பட்சத்தில் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் தண்டனைக்கு ஆளாக நேரிடும்.

14. இங்கு குறிப்பிடப்படாத ஏதேனுமொரு விடயமிருப்பின்,அது பற்றி பாராளுமன்றத்தின் செயலாளர் நாயகத்தினால் தீர்மானிக்கப்படும். சகல விண்ணப்பதாரர்களும் இந்த வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள பொதுவான பரீட்சை ஒழுங்குவிதிகளுக்கு இயைந்தொழுக வேண்டும்.

15. சிங்களம்,தமிழ் மற்றும் ஆங்கில மொழிமூலம் வெளியிடப்படும் இவ்வறிவித்தலில் மொழிகளுக்கு இடையில் ஏதேனும் முரண்பாடு அல்லது ஒவ்வாமை காணப்படுமாயின், சிங்கள மொழிமூலமான அறிவித்தல் மேலோங்கி நிற்கும்.

டபிள்யூ. பி. டி. தசநாயக்க,
பாராளுமன்ற செயலாளர் நாயகம்.

இலங்கைப் பாராளுமன்றம்,
ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே,
2019, மார்ச் 29.

மாதிரி விண்ணப்பப்படிவம்

[ ]
(அலுவலக உபயோகத்திற்காக)

**இலங்கைப் பாராளுமன்றத்தின் பாராளுமன்ற உத்தியோகத்தர் பதவிக்கு ஆட்சேர்த்துக் கொள்வதற்கான திறந்த போட்டிப்பரீட்சை - 2019**

பரீட்சைக்கு தோற்றும் மொழி மூலம்:
சிங்களம் - 2
தமிழ் - 3 [ ]
ஆங்கிலம் - 4
(கூட்டுக்குள் சரியான இலக்கத்தை எழுதுக.)

1.0
1.1 முழுப்பெயர்: ..........................................................................................
(ஆங்கில கெப்பிற்றல் எழுத்துக்களில்)

1.2 முழுப்பெயர்: .......................................................................................... (சிங்களத்தில் /தமிழில்)

1.3 தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம்: [ | | | | | | | | | | | ]

2.0
2.1 நிரந்தர முகவரி: ..........................................................................................
(ஆங்கில கெப்பிற்றல் எழுத்துக்களில்)

2.2 நிரந்தர முகவரி : ..........................................................................................
(சிங்களத்தில் /தமிழில்)

2.3 அனுமதி அட்டை அனுப்பப்பட வேண்டிய முகவரி: ......................................................
(ஆங்கில கெப்பிற்றல் எழுத்துக்களில்)

3.0
3.1 பால் நிலை: ஆண்- 0 பெண் - 1 [ ]
(உரிய இலக்கத்தை கூட்டுக்குள் எழுதுக.)

3.2 தொலைபேசி இலக்கம்: [ | | | | | | | | | ]

3.3 பிறந்த திகதி:
வருடம் [ | | | ] மாதம் [ | ] திகதி [ | ]

3.4 தகைமைகளை பூர்த்திசெய்ய வேண்டிய திகதிக்கு வயது:

வருடங்கள் ☐☐ மாதங்கள் ☐☐ நாட்கள் ☐☐

4.0 கல்வித் தகைமைகள்:

4.1 க.பொ.த (சா. த.) தகைமைகள்:

I. பரீட்சையின் வருடமும் மாதமும் : ...................................
II. சுட்டிலக்கம். : ...................................
III. பெறுபேறுகள் :

| பாடம் | தரம் |
|---|---|
| 1 | |
| 2 | |
| 3 | |
| 4 | |
| 5 | |

| பாடம் | தரம் |
|---|---|
| 6 | |
| 7 | |
| 8 | |
| 9 | |
| 10 | |

4.2 க.பொ.த (உ. த.) தகைமைகள்:

I. பரீட்சையின் வருடமும் மாதமும் : ...................................
II. சுட்டிலக்கம். : ...................................
III. பெறுபேறுகள் :

| பாடம் | தரம் |
|---|---|
| 1 | |
| 2 | |
| 3 | |
| 4 | |

4.3 பட்டம் பற்றிய விபரம் :
(i) பட்டம் பெற்ற திகதி :........................................................
(ii) பல்கலைக்கழகம்/நிறுவனம் :........................................................
(iii) பட்டம் :........................................................
(iv) பாடங்கள் : ........................................................

5.0 பிற தகைமைகள்..........................................................................................................................................................
..........................................................................................................................................................

6.0 நீங்கள் ஏதேனும் குற்றச்சாட்டுக்காக நீதிமன்றத்தினால் குற்றவாளியாக்கப்பட்டுள்ளீர்களா? ( உரிய கூட்டில் (√) அடையாளமிடுக.) (ஆம் எனில் விபரங்களை குறிப்பிடுக.) ஆம் ☐ இல்லை ☐
..........................................................................................................
..........................................................................................................
..........................................................................................................
..........................................................................................................

7.0 பணம் செலுத்திய பற்றுச்சீட்டு பற்றிய விபரம்.

I. பணம் செலுத்தப்பட்ட அலுவலகம் : ..................................
II. பற்றுச்சீட்டு இலக்கமும் திகதியும் : ..................................
III. செலுத்திய தொகை : ..................................

பற்றுச்சீட்டை கழறாதவாறு இங்கு ஒட்டவும்
(பற்றுச்சீட்டின் பிரதியை பாதுகாப்பாக வைத்துக் கொள்வது பயனுள்ளதாகும்.)

8.0 விண்ணப்பதாரரின் உறுதியுரை:

(அ) இதில் குறிப்பிடப்பட்டுள்ள விபரங்கள் எனது அறிவுக்கும் மற்றும் நம்பிக்கைக்கும் எட்டிய வகையில் உண்மையான வையும் தெரிவித்துக் கொள்கிறேன். இங்கு ஏதாவது பகுதிகள் பூர்த்தி செய்யப்படாமையால் மற்றும்/அல்லது தவறாக பூர்த்தி செய்யப்பட்டமையினால் ஏற்படக்கூடிய இழப்புகளை ஏற்க உடன்படுகிறேன். மேலும் இதன் அனைத்துப் பகுதிகளையும் சரியாகப் பூர்த்தி செய்துள்ளேன் எனவும் வெளிப்படுத்துகிறேன்.

(ஆ) என்னால் வெளிப்படுத்தப்பட்ட இந்த கூற்று பிழையானதென நிரூபிக்கப்பட்டால் நியமிக்கப்பட முன்னர் தகைமையற்றவனாவேன் எனவும் நியமனம்பெற்ற பின்னர் சேவையிலிருந்து நீக்கப்படவும் ஆளாவேன் என்பதையும் நானறிவேன்.

(இ) மேலும் பரீட்சையை நடாத்துதல் சம்பந்தமாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படுகின்ற சட்டவிதிகளுக்கு நான் கட்டுப்படுவேன் என்பதையும் வெளிப்படுத்துகிறேன்.

(ஈ) இங்கு குறிப்பிட்டுள்ள எந்தவொரு தகவலையும் பின்னர் மாற்றமாட்டேன்.

.....................................................,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி:....................

9.0 விண்ணப்பதாரியின் கையொப்பத்தை உறுதிப்படுத்துல் :

இந்த விண்ணப்பப்பத்திரத்தை சமர்ப்பிக்கின்ற திரு./திருமதி/செல்வி ................................................................ என்பவரை நான் தனிப்பட்ட முறையில் நன்கு அறிவேன் எனவும், அவர் எனது முன்னிலையில்.............................. ஆந் திகதி அவரது கையொப்பத்தை இட்டார் எனவும், உரிய பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்தி மேற்படி பற்றுச்சீட்டு ஒட்டப்பட்டுள்ளது எனவும் உறுதிப்படுத்துகிறேன்.

............................................................
கையொப்பத்தை உறுதிப்படுத்தும் அலுவலரின்
கையொப்பம்.

திகதி :.............................

உறுதிப்படுத்தும் அலுவலரின் முழுப்பெயர் :.........................................................
பதவி:........................................................................................................................
முகவரி:....................................................................................................................
(உத்தியோகபூர்வ முத்திரையால் உறுதிப்படுத்துக)

10.0 திணைக்கள /நிறுவனத் தலைவரின் சான்றிதழ்:

பாராளுமன்ற செயலாளர் நாயகம் அவர்கட்கு,

இந்த நிறுவனத்தில்........................................................................................................................
.................... பதவியை வகிக்கும் திரு./ திருமதி/ செல்வி ...........................................................................
அவர்களின் விண்ணப்பத்தை சிபாரிசு செய்து சமர்ப்பிக்கின்றேன். இவர் உரிய பதவியில் நிரந்தரமாக்கப்பட்டுள்ளார் / நிரந்தரமாக்கப்படவில்லை என்றும், இவரின் வேலைகள் மற்றும் நடத்தை என்பன திருப்திகரமானது என்றும், இவருக்கு எதிரான ஒழுக்காற்று நடவடிக்கைகள் ஏதுமில்லை என்றும், இவருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கைகள் எதனையும் மேற்கொள்ளும் அபிப்பிராயமில்லை என்றும் உறுதிசெய்கின்றேன். இவர் இப்பதவிக்குத் தெரிவு செய்யப்படுவாராயின், இவரை சேவையிலிருந்து விடுவிக்க முடியும் /முடியாது.

.....................................................................................................
திணைக்கள /நிறுவனத் தலைவரின் கையொப்பம்.
(உத்தியோகபூர்வ முத்திரை)

திகதி: ...............................

3-1550

## நீதி மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சு

*சிறைச்சாலைகள் திணைக்களம்*

## இலங்கை சிறைச்சாலைகள் திணைக்களத்தின், II ஆம் தர ஜேலர் மற்றும் II ஆம் தர புனர்வாழ்வு உத்தியோகத்தர்களை ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2019

இலங்கை சிறைச்சாலைகள் திணைக்களத்தில் வெற்றிடமாகக் காணப்படுகின்ற IIஆம் தர ஜேலர் (பெண்/ஆண்) மற்றும் II ஆம் தர புனர்வாழ்வு உத்தியோகத்தர்கள் (பெண்/ஆண்) பதவிகளுக்கு ஆட்சேர்த்துக்கொள்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சைக்கு, தகைமை பெற்ற இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

(1) இந்தப் பரீட்சையின் மூலம் இலங்கை சிறைச்சாலைகள் திணைக்களத்தின் II ஆம் தர ஜேலர் (பெண்/ஆண்) மற்றும் II ஆம் தர புனர்வாழ்வு உத்தியோகத்தர்கள் (பெண்/ஆண்) பதவிக்கு ஆட்கள் சேர்த்துக் கொள்ளப்படுவர்.

(2) எழுத்து மூலப் பரீட்சை :- இப்பரீட்சையானது கீழே காட்டப்பட்டுள்ள 03 வினாத்தாள்களைக் கொண்டிருக்கும்.

I. பொது உளச்சார்பு

II. பொது அறிவு

III. கணிதம்

**02. பரீட்சைத் திகதி மற்றும் பரீட்சையை நடாத்துதல்:-**

இப்பரீட்சையானது 2019, யூன் மாதம் அட்டவணை - 1 இல் காட்டப்பட்டுள்ளவாறு, நாடு பூராகவும் அமைந்துள்ள பிரதான நகரங்களில் நடாத்தப்படும். அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள நகரங்களில், பரீட்சைக்குத் தோற்றுவதற்கு எதிர்பார்க்கின்ற விண்ணப்பதாரிகள் நகரத்தை, உரிய இலக்கத்துடன் தெளிவாகக் குறிப்பிடுதல் வேண்டும். விண்ணப்பித்த நகரத்தை பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது. எனினும் ஏதேனும் நகரத்தில் பரீட்சை மத்திய நிலையத்தை அமைப்பதற்குப் போதுமான விண்ணப்பதாரிகள் விண்ணப்பிக்காத சந்தர்ப்பத்தில், விண்ணப்பதாரிகளால், விண்ணப்பப்படிவத்தில் இரண்டாவது தெரிவின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள நகரத்தில் அல்லது அண்மித்த வேறொரு நகரத்தில் அமைக்கப்படுகின்ற பரீட்சை மத்திய நிலையத்திற்கு அவர்கள் அனுப்பப்படுவார்கள். உத்தேசிக்கப்பட்ட அனைத்து நகரங்களிலும் அல்லது கூடுதலான எண்ணிக்கையிலான பரீட்சை மத்திய நிலையங்களை அமைப்பதற்குப் போதிய விண்ணப்பதாரிகள் விண்ணப்பிக்காத சந்தர்ப்பத்தில், பரீட்சையை கொழும்பில் நடாத்துவதற்கு பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

**அட்டவணை - 1**

| நகரம் மற்றும் நகர இலக்கம் | |
|---|---|
| கொழும்பு | 01 |
| கம்பஹா | 02 |
| களுத்துறை | 03 |
| கண்டி | 04 |
| மாத்தளை | 05 |
| நுவரெலியா | 06 |
| காலி | 07 |
| மாத்தறை | 08 |
| அம்பாந்தோட்டை | 09 |
| யாழ்ப்பாணம் | 10 |
| மன்னார் | 11 |
| வவுனியா | 12 |
| முல்லைத்தீவு | 13 |
| கிளிநொச்சி | 14 |

| நகரம் மற்றும் நகர இலக்கம் | |
|---|---|
| மட்டக்களப்பு | 15 |
| அம்பாறை | 16 |
| திருகோணமலை | 17 |
| குருநாகல் | 18 |
| புத்தளம் | 19 |
| அநுராதபுரம் | 20 |
| பொலநறுவை | 21 |
| பதுளை | 22 |
| மொணராகலை | 23 |
| இரத்தினபுரி | 24 |
| கேகாலை | 25 |

03. நியமிக்கப்படுகின்ற மொத்த வெற்றிடங்களின் எண்ணிக்கை 97 ஆகும். [II ஆம் தர ஜேலர் (ஆண்) - 69, II ஆம் தர ஜேலர் (பெண்) -10, II ஆம் தர புனர்வாழ்வு உத்தியோகத்தர் (ஆண்) - 15, II ஆம் தர புனர்வாழ்வு உத்தியோகத்தர் (பெண்) - 03] இறுதி வெற்றிடங்களுக்காக அல்லது ஒரு சில வெற்றிடங்களுக்காக சம புள்ளிகளைப் பெற்ற விண்ணப்பதாரிகள், வெற்றிடங்களது எண்ணிக்கைக்கு மேலாகக் காணப்பட்டால், அவ்வெற்றிடங்களை நிரப்புதல் தொடர்பில் நடைமுறை விதிக் கோவையின் 80 ஆம் பந்தியின் பிரகாரம் மற்றும் அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் கட்டளையின் பிரகாரம் தீர்மானிக்கப்படும். நியமனம் செயல்வலுப்பெறும் திகதியானது சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகத்தினால் தீர்மானிக்கப்படும்.

04. **சேவை நிபந்தனைகள் :-**

4.1 அரசாங்க சேவையின் நியமனங்கள் நிருவகிக்கப்படும் பொதுவான நிபந்தனைகளுக்கும், தாபன விதிக் கோவை மற்றும் நிதிப் பிரமாணங்களது ஏற்பாடுகளுக்கும் இலக்கம் 1589/30 மற்றும் 2009.02.20 ஆந் திகதிய அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் நடைமுறை விதிகளுக்கும், உட்பட்டவகையில் ஒரு விண்ணப்பதாரர் II ஆம் தர ஜேலர் /II ஆம் தர புனர்வாழ்வு உத்தியோகத்தர் பதவியில் நியமிக்கப்படுவார்.

4.2 இப்பதவி நிரந்தரமானது. ஓய்வூதிய உரித்துடையது. உங்களுக்குரிய ஓய்வூதிய முறை தொடர்பில் அரசாங்கத்தினால் இனிவரும் காலங்களில் மேற்கொள்ளப்படும் கொள்கை ரீதியான தீர்மானங்களுக்கு நீங்கள் கட்டுப்படுதல் வேண்டும். மேலும், நீங்கள் விதவைகள்/ தபுதாரர், அநாதைகள் ஓய்வூதிய திட்டத்திற்கு பங்களிப்புச்செய்தல் வேண்டும். அரசாங்கத்தினால் காலத்திற்குக் காலம் விதிக்கப்படுகின்ற விதத்தில் நீங்கள் அதற்கான பங்களிப்புத் தொகையைச் செலுத்த வேண்டும்.

4.3 இப்பதவியானது மூன்று வருட தகுதிகாண் காலத்திற்கு உட்பட்டது. II ஆம் தர ஜேலர் மற்றும் II ஆம் தர புனர்வாழ்வு உத்தியோகத்தர்கள் பதவிக்கு நியமிக்கப்பட்டு 03 வருட காலப்பகுதியுள் முதலாவது வினைத்திறன்காண் தடை தாண்டல் பரீட்சையிலும், பதவிக்கு நியமிக்கப்பட்டு 07 வருட காலப்பகுதியுள் இரண்டாவது வினைத்திறன்காண் தடை தாண்டல் பரீட்சையிலும் சித்தியடைதல் வேண்டும்.

4.4 அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கை இலக்கம் 01/2014 க்கு அமையவும், அதனுடன் தொடர்புடைய சுற்றறிக்கைகளுக்கு அமையவும், உரிய அரசகரும மொழித் தேர்ச்சியைப் பெறுதல் வேண்டும்.

4.5 தமக்கு ஒப்படைக்கப்படுகின்ற பதவியின் கடமைகளை உரிய திகதியில் பொறுப்பேற்பதற்குத் தவறுகின்ற மற்றும் / அல்லது நியமிக்கப்பட்ட பதவியில் அல்லது நியமிக்கப்படுகின்ற பிரதேசத்தில் கடமைகளைப் பொறுப்பேற்பதை நிராகரிக்கின்ற விண்ணப்பதாரர்களது நியமனத்தை இரத்துச் செய்வதற்கு சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகத்திற்கு அதிகாரம் உண்டு. II ஆம் தர ஜேலர் மற்றும் II ஆம் தர புனர்வாழ்வு உத்தியோகத்தர்கள் பதவியில் நியமனங்களைப் பெறுவோர் நியமனம் பெற்று, முதல் 05 வருடங்களுக்கு தாம் வசிக்கின்ற பிரதேசத்திற்கு வெளியே தனிநபர் உத்தியோகபூர்வ விடுதியில் தங்கியிருந்து சேவை புரிவதாக இணக்கம் தெரிவித்தல் வேண்டும்.

05. **மாதாந்த சம்பள அளவுத் திட்டம் :-**

இப்பதவியானது அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கை இலக்கம் 03/2016 இன் RS- 3-2016 (படிமுறை 1) சம்பள வகுதிக்குரியது. அச்சம்பள வகுதிக்குரிய சம்பள அளவுத்திட்டம் கீழே காட்டப்பட்டுள்ளது.

ரூபா 32,790.00 - 7 x 370 - 2 × 495 - 25 × 660 - ரூபா 52,870.00 (மாதாந்தம்)

(2016.02.25 ஆந் திகதிய அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கை இலக்கம் 03/2016 இன் ஏற்பாடுகளுக்கு அமைய அதன் அட்டவணை II இல் குறிப்பிடப்பட்டுள்ள ரூ. 32,790.00 இற்கு அமைவாக ஆரம்ப படிமுறையில் வைக்கப்பட்டு சம்பளம் வழங்கப்படும்.)

**06. ஆட்சேர்த்துக் கொள்ளப்படுவதற்கான தகைமைகள் :-**

(அ) (i) இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.

(ii) சிறந்த நன்நடத்தையைக் கொண்ட நபராக இருத்தல் வேண்டும்.

(iii) நாட்டின் எந்தவொரு பாகத்திலும் சேவையாற்றுவதற்குத் தேவையான உடல் தகைமை மற்றும் உளத் தகைமையைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(iv) ஆகக் குறைந்த உயரம் 5அடி 4 அங்குலம் (ஆண்)

(vi) மார்பு - உள்மூச்சு வெளியே விட்டு மார்பின் சுற்றளவு 32 அங்குலத்திற்கு குறையாமல் இருத்தல் வேண்டும். (பெண்களுக்கு பொருத்தமற்றது.)

(vi) ஒழுக்காற்று தொடர்பான ஒரு தவறு தொடர்பில் எந்தவொரு நீதிமன்றத்தினாலும் குற்றவாளியாக் கப்பட்டிருப்பது பதவிக்கு நியமிக்கப்படுவதற்கான முழுமையான ஒரு தகுதியீனமாகும்.

(ஆ) கல்வித் தகைமைகள் :-

கபொ.த.(உ.த) பரீட்சையில் அனைத்துப் பாடங்களிலும் ஒரே தடவையில் சித்தியடைந்திருத்தல். (பொது அறிவு மற்றும் ஆங்கிலம் தவிர்ந்த) பழைய பாடத்திட்டத்தின்படி 03 பாடங்களில் ஒரே தடவையில் சித்திடைந்திருத்தல் .

மற்றும்

சிங்களம்/தமிழ்மொழி மற்றும் எண் கணிதம்/கணிதம்/வர்த்தக எண் கணிதம் ஆகிய இரண்டு பாடங்கள் உள்ளடங்கலாக 04 பாடங்களில் திறமைச் சித்தியும், இரண்டு தடவைக்கு மேற்படாத தடவைகளில் க.பொ.த. (சா.த) பரீட்சையில் 06 பாடங்களில் சித்தியடைந்திருத்தல். (ஒரு தடவையில் 05 பாடங்களுக்குக் குறையாமல் சித்தியடைதல் வேண்டும்.)

அல்லது

முதலாம் மொழி, கணிதம் ஆகிய இரண்டு பாடங்கள் உள்ளடங்கலாக 4 பாடங்களில் "B" தரச் சித்தியும் இரண்டு தடவைக்கு மேற்படாத தடவைகளில் 06 பாடங்களில் தே.பொ.க.சா. பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். (ஒரே தடவையில் 05 பாடங்களுக்குக் குறையாமல் சித்தியடைதல் வேண்டும்.)

அல்லது

மொழி, கணிதம் உள்ளடங்கலாக நான்கு பாடங்களில் திறமைச் சித்தியுடன், இரண்டு தடவைகளுக்கு மேற்படாத தடவைகளில் ஆறு பாடங்களில் க.பொ.த.(சா.த) பரீட்சையில் சித்தியடைந்திருத்தல்.(ஒரே தடவையில் 05 பாடங்களுக்குக் குறையாமல் சித்தியடைதல் வேண்டும்.)

(இ) பிற தகைமைகள்:

II ஆம் தர புனர்வாழ்வு உத்தியோகத்தர் பதவிக்கு ஆட்சேர்த்துக் கொள்ளும்போது இலங்கை சமூக அபிவிருத்தி நிறுவனத்தில் தொழில்சார் சமூகவியல் டிப்ளோமாச் சான்றிதழைப் பெற்றிருத்தல் மேலதிகத் தகைமையாகக் கருதப்படும்.

(ஈ) வயது :

- II ஆம் தர ஜெலர்- 18 வயதிற்குக் குறையாத 45 வயதிற்கு மேற்படாத நபராக இருத்தல். (அதனடிப்படையில் 2001.04.22 ஆந் திகதியில் அல்லது அதற்கு முன்னர் மற்றும் 1974.04.22 ஆந் திகதியில் அல்லது அதற்கு பின்னர் பிறந்த திகதியை கொண்டுள்ளவர்களுக்கு மட்டும் இதற்கு விண்ணப்பிப்பதற்கு தகைமை உண்டு.) (தற்போது அரச சேவையில் /மாகாண அரச சேவையில் உள்ளவர்களுக்கு ஆகக்கூடிய வயதெல்லை பொருத்தமாகாது.)

II ஆம் தர புனர்வாழ்வு உத்தியோகத்தர்- 24 வயதிற்குக் குறையாத 45 வயதிற்கு மேற்படாத நபராக இருத்தல். (அதனடிப்படையில் 1995.04.22 ஆந் திகதியில் அல்லது அதற்கு முன்னர் மற்றும் 1974.04.22 ஆந் திகதியில் அல்லது அதற்குப்பின்னர், பிறந்த திகதியைக் கொண்டுள்ளவர்களுக்கு மட்டும் இதற்கு விண்ணப்பிப்பதற்குத் தகைமை உண்டு.) (தற்போது அரச சேவையில் /மாகாண அரச சேவையில் உள்ளவர்களுக்கு ஆகக்கூடிய வயதெல்லை பொருத்தமாகாது.)

(உ) தகைமைகள் தொடர்பான வரையறைகள் :

இந்தப் பரீட்சைக்கு விண்ணப்பிப்பதற்குத் தேவையான அனைத்து தகைமைகளையும், விண்ணப்பம் பொறுப்பேற்கும் இறுதித் திகதியில் அல்லது அதற்கு முன்னர் எல்லா விதத்திலும் பூரணப்படுத்தியிருத்தல் வேண்டும்.

**07. பரீட்சைக் கட்டணங்கள்:-**

பரீட்சைக் கட்டணம் ரூபா 600.00 ஆகும். விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு முன்னராக, பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் வருமானத் தலைப்பு இலக்கம் 20-03-02-13 இன் கீழ் அரச வருமானத்தில் வரவு வைக்கப்படும் விதத்தில், நாடு பூராகவும் அமைந்துள்ள தபால் அலுவலகங்கள் /உப தபால் அலுவலகங்கள் அல்லது மாவட்ட /பிரதேச செயலகங்களில் பணமாகச் செலுத்தி விண்ணப்பதாரியின் பெயரில் பெற்றுக் கொண்ட பற்றுச்சீட்டை, விண்ணப்பப்படிவத்தில் உரிய இடத்தில் ஒட்டுதல் வேண்டும். எந்தவொரு காரணத்தினாலேயும் பரீட்சைக் கட்டணமானது மீளக் கொடுப்பனவு செய்தல் அல்லது வேறு பரீட்சைக்கு மாற்றப்படுதல் மாட்டாது. பற்றுச்சீட்டின் ஒரு நிழற்படப் பிரதியை தம்வசம் வைத்துக் கொள்ளுதல் பயனுடையதாகும்.

**08. விண்ணப்பிக்கும் முறை :-**

8.1 விண்ணப்பப்படிவமானது இந்த அறிவித்தலில் இணைக்கப்பட்டுள்ள மாதிரிப் படிவத்திற்கு அமைய இருத்தல் வேண்டும். கடதாசியின் இரண்டு பக்கத்தையும் பயன்படுத்தி 8.27" x 11.69" (A4) அளவான கடதாசியில் தயாரித்து, விண்ணப்பதாரி தமது சொந்த கையெழுத்தில் பூரணப்படுத்துதல் வேண்டும். இதற்காக கணினியில் தயாரிக்கப்பட்ட அல்லது தட்டச்சு செய்யப்பட்ட விண்ணப்பப்படிவத்தைப் பயன்படுத்தலாம். 01 தொடக்கம் 05 வரையான பகுதிகள் முதலாவது பக்கத்திலும், 06 தொடக்கம் 11 வரையான பகுதிகள் இரண்டாவது பக்கத்திலும், மீதிப் பகுதிகள் மூன்றாவது பக்கத்திலும் இருக்கும் வண்ணம் தயாரிக்கப்படுதல் வேண்டும். மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு அமையாத விண்ணப்பப்படிவங்கள் மற்றும் முழுமையாக தகவல்கள் பூரணப்படுத்தப்படாத விண்ணப்பங்கள் அறிவித்தலின்றி நிராகரிக்கப்படும். (விண்ணப்பப்படிவத்தின் பிரதியொன்றை தம்வசம் வைத்திருத்தல் பயனுடையதாகும்) மேலும் பூரணப்படுத்தியுள்ள விண்ணப்பப்படிவமானது பரீட்சை அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு அமைவாக உள்ளதா என விண்ணப்பதாரி ஆராய்ந்து பார்த்தல் வேண்டும். அவ்வாறில்லாதுவிடின் விண்ணப்பப்படிவம் நிராகரிக்கப்படும்.

8.2 விண்ணப்பப்படிவமானது விண்ணப்பதாரி பரீட்சைக்குத் தோற்ற விரும்புகின்ற மொழியிலேயே இருத்தல் வேண்டும்.

8.3 பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவங்களை 2019.04.22 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் "பரீட்சைகள் ஆணையாளர் நாயகம், ஒழுங்கமைப்பு (நிறுவனம்சார் மற்றும் வெளிநாட்டுப் பரீட்சைகள்) கிளை, இலங்கைப் பரீட்சைகள் திணைக்களம், த. பெ. இல. 1503, கொழும்பு" என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். விண்ணப்பப்படிவங்கள் இடப்பட்ட கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "II ஆம் தர ஜேலர் மற்றும் II ஆம் தர புனர்வாழ்வு உத்தியோகத்தர் பதவிக்கு ஆட்சேர்த்துக் கொள்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை -(2019)" எனக் குறிப்பிடுதல் வேண்டும். விண்ணப்பப்படிவங்களைத் தயாரிக்கும்போது அதன் தலைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சையின் பெயரை, தமிழ் விண்ணப்பப்படிவத்தில் தமிழ் மொழிக்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும், சிங்கள விண்ணப்பப்படிவத்தில் சிங்கள மொழிக்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் குறிப்பிடுதல் அத்தியாவசியமாகும். இரண்டு பதவிகளுக்கும் விண்ணப்பிப்போர் ஒரே விண்ணப்பப்படிவத்தில் விண்ணப்பிக்கலாம்.

8.4 வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைக் கொண்டுள்ள நபர்கள் மட்டும் விண்ணப்பித்துள்ளார்கள் எனக் கருதப்பட்டு, உரிய பரீட்சைக் கட்டணம் செலுத்தி, உரிய திகதியில் அல்லது அதற்கு முன்னராக விண்ணப்பப்படிவங்களை அனுப்பியுள்ள அனைத்து விண்ணப்பதாரிகளுக்கும் போட்டிப் பரீட்சைக்குத் தோற்றுவதற்குப் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் அனுமதிப் பத்திரங்கள் அனுப்பி வைக்கப்படும். போட்டிப் பரீட்சைக்குத் தோற்றுவதற்காக அனுமதிப்பத்திரங்கள் அனுப்பி வைக்கப்படுகின்றமையானது, விண்ணப்பதாரி இப்பதவிக்கு தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ளார் என அங்கீகரிக்கப்பட்டதொன்றாகக் கருதப்படக் கூடாது. விண்ணப்பதாரிகளை நேர்முகப் பரீட்சைக்கு அழைத்து வர்த்தமானி அறிவித்தலுக்கமைய தகைமைகள் உள்ளதா என பரிசீலிக்கும் சந்தர்ப்பத்தில் தேவையான தகைமைகள் இல்லையென தெரியவந்தால், அந்த நபர்களது பரீட்சைக்குத் தோற்றிய சந்தர்ப்பமானது இரத்துச் செய்யப்படும்.

8.5 விண்ணப்பப்படிவத்தில் விண்ணப்பதாரியின் கையொப்பத்தினை அரச பாடசாலையொன்றின் அதிபர், சமாதான நீதவான், சத்தியப்பிரமான ஆணையாளர், பிரசித்த நொத்தாரிசு, முப்படைகளில் அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர், பொலிஸ் சேவையில் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட பதவியை வகிக்கும் உத்தியோகத்தர் அல்லது அரச துறையில் நிரந்தரப் பதவியை வகிக்கும் பதவி நிலை உத்தியோகத்தர் அல்லது அரச /மாகாண அரச சேவையில் உள்ள ஒருவர் எனின், திணைக்களத் தலைவர் உறுதிப்படுத்துதல் வேண்டும். தற்போது அரச சேவையில் உள்ள ஒருவர் தமது விண்ணப்பப்படிவங்களை தமது திணைக்களத் தலைவர் ஊடாக விண்ணப்பங்கள் பொறுப்பேற்கப்படும் இறுதித் திகதிக்கு முன்னர் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்திற்கு அனுப்புதல் வேண்டும். இத்தகைய ஒரு உத்தியோகத்தரை தெரிவு செய்தால் திணைக்களத்திலிருந்து விடுவிக்க முடியும் என திணைக்களத் தலைவர் உறுதிப்படுத்துதல் வேண்டும்.

8.6 உரிய திகதியில் பரீட்சைக் கட்டணங்களைச் செலுத்தாத மற்றும் முழுமையாக பூரணப்படுத்தப்படாத நிலையிலுள்ள விண்ணப்பப்படிவங்கள் எந்தவித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும். உரிய முறையில் விண்ணப்பப்படிவங்கள் பூர்த்தி செய்யாமையினால் ஏற்படுகின்ற நட்டத்தினை விண்ணப்பதாரிகள் ஏற்றுக் கொள்ளுதல் வேண்டும். தபாலில் இடும்போது விண்ணப்பப்படிவங்கள் தொலைந்து போதல் அல்லது தாமதமாகுதல் தொடர்பில் எந்தவித முறைப்பாடுகளும் கருத்திற் கொள்ளப்பட மாட்டாது.

8.7 விண்ணப்பப்படிவங்கள் கிடைத்ததாக அறிவிக்கப்பட மாட்டாது. விண்ணப்பதாரிகளுக்கு அனுமதிப் பத்திரங்கள் அனுப்பப்பட்டவுடன் அது தொடர்பில் பத்திரிகைகளிலும், பரீட்சைகள் திணைக்களத்தின் இணையத்தளத்திலும் அறிவித்தல் விடுக்கப்படும். அறிவித்தல் விடுக்கப்பட்டு 2 அல்லது 3 நாட்கள் கடந்த பின்னரும் அனுமதிப் பத்திரங்கள் கிடைக்காதிருந்தால், அறிவித்தலில் குறிப்பிட்டுள்ள விதத்தில் அது தொடர்பில், இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்திற்கு அறிவித்தல் வேண்டும். அதன்போது, உங்களது முழுப் பெயர், முகவரி, தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் மற்றும் விண்ணப்பிக்கின்ற பரீட்சையின் பெயர் என்பனவற்றைக் குறிப்பிடுதல் வேண்டும். கொழும்புக்கு வெளியிலுள்ள ஒரு விண்ணப்பதாரி எனின், உங்களது மேற்குறிப்பிட்ட தகவல்களை உள்ளடக்கிய ஒரு கடிதத்தை, தொலை நகல் மூலம், அனுமதிப் பத்திரத்தின் பிரதியொன்றை உங்களுக்கு அனுப்புவதற்காக, ஒரு தொலைநகல் இலக்கத்தையும் குறிப்பிட்டு, அவ்வறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தொலைநகல் இலக்கத்திற்கு அனுப்பி விசாரித்தறிதல் வேண்டும். அதன்போது தேவையான தகவல்களை உறுதிப்படுத்துவதற்காக உங்களிடம் வைத்திருக்கும் விண்ணப்பப்படிவத்தின் பிரதி, பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்திய பற்றுச்சீட்டு, விண்ணப்பப்படிவத்தை பதிவுத் தபாலில் அனுப்பிய பற்றுசீட்டு என்பவற்றை தயாராக தம்வசம் வைத்திருத்தல் மிகுந்த பயனுடையதாக அமையும்.

**09. பரீட்சைக்குத் தோற்றுதல் :-**

(அ) விண்ணப்பதாரி தமக்கு குறித்தொதுக்கப்பட்டுள்ள பரீட்சை மண்டபத்தில் பரீட்சைக்குத் தோற்றுதல் வேண்டும். அனைத்து விண்ணப்பதாரிகளும் பரீட்சை அனுமதிப் பத்திரத்தில் தமது கையொப்பத்தை உறுதிப்படுத்திக் கொண்டு, முதலாவதாக அம்மண்டபத்தில் தோற்றும் திகதியில், அங்குள்ள பரீட்சைகள் மேற்பார்வையாளரிடம் ஒப்படைத்தல் வேண்டும். அனுமதிப்பத்திரம் இன்றி பரீட்சைக்குத் தோற்ற அனுமதிக்கப்படமாட்டாது. அனைத்து விண்ணப்பதாரிகளும் கடைப்பிடிக்க வேண்டிய விதிமுறைகள் இவ்வர்த்தமானி அறிவித்தலின் ஆரம்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. பரீட்சைகளை நடாத்துதல் மற்றும் பெறுபேறுகளை வெளியிடுதல் தொடர்பில் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படுகின்ற விதிமுறைகளுக்கு பரீட்சார்த்திகள் கட்டுப்படுவர். அவ்விதிமுறைகளை மீறினால் பரீட்சார்த்திகள், பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படுகின்ற தண்டனைக்கு உட்படுவர்.

**10. பரீட்சார்த்திகளது ஆளடையாளம் :-**

தாம் தோற்றுகின்ற அனைத்துப் பாடங்களுக்கும் பரீட்சை மண்டப மேற்பார்வையாளர் திருப்தியடையக்கூடிய விதத்தில், பரீட்சை மண்டபத்தில் தமது ஆளடையாளத்தை உறுதிப்படுத்துதல் வேண்டும். இதன்போது கீழே காட்டப்பட்டுள்ள ஒரு ஆவணத்தை பரீட்சை மண்டப மேட்பார்வையாளரிடம் சமர்ப்பித்தல் வேண்டும்.

(i) தேசிய ஆள் அடையாள அட்டை;

(ii) செல்லுபடியான கடவுசீட்டு;

(iii) செல்லுபடியான சாரதி அனுமதிப்பத்திரம்.

**11. பிழையான தகவல்களை வழங்கியமைக்கான தண்டனை :-**

விண்ணப்பப்படிவங்களைப் பூர்த்தி செய்யும்போது மிகக் கவனமாக சரியான தகவல்களை வழங்குதல் வேண்டும். இப்பரீட்சையின் சட்ட திட்டங்களுக்கமைய ஒரு பரீட்சார்த்தி தகைமையற்றவர் எனத் தெரிய வந்தால், பரீட்சைக்கு முன்னர் அல்லது பரீட்சை நடைபெறும் போதோ அல்லது பரீட்சையின் பின்னரோ எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அவர் பரீட்சைக்குத் தோற்றும் வாய்ப்பை இரத்துச் செய்ய முடியும். விண்ணப்பதாரியால் தரப்பட்ட எந்தவொரு தகவலும் தவறானது என தெரிந்தே

சமர்ப்பிக்கப்பட்டுள்ளது எனத் தெரிய வந்தால், அல்லது ஏதேனும் முக்கியமான ஒரு விடயத்தை அவர் வேண்டுமென்றே மறைத்திருந்தால் அவரது பதவியை இரத்துச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

**12. பரீட்சை முறை மற்றும் பரீட்சை மொழி மூலம் :-**

(அ) பரீட்சை தமிழ், சிங்களம், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் நடாத்தப்படும்.

(ஆ) தமது விண்ணபப்பபடிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சை மொழியை பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்பட மாட்டாது.

**13. ஆட்சேர்க்கும் முறை :-**

(1) எழுத்து மூலப் பரீட்சை :

இவ்வறிவித்தலின் 02ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள பாடங்களைக் கொண்ட 03 வினாத்தாள்களைக் கொண்டதாக எழுத்துப் பரீட்சை அமைந்திருக்கும். ஒரு பாடத்தில் சித்தியடைவதற்காக ஆகக் குறைந்தது 40% வீதம் புள்ளிகளைப் பெற்றிருத்தல் வேண்டும். பரீட்சார்த்திகள் அனைத்து வினாத்தாள்களுக்கும் தோற்றியிருத்தல் வேண்டும்.

பாடங்கள்:- 1. பொது உளச்சார்பு
2. பொது அறிவு
3. கணிதம்

(2) கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை :

(i) மேலே இலக்கம் 06 இல் குறிப்பிடப்பட்டுள்ள ஆட்சேர்ப்பிற்கான தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ளாரா எனவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகள் தொடர்பான வரையறைகளுக்கு உட்பட்டதா எனவும் பரிசீலிப்பதற்காக கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையொன்று நடாத்தப்படும்.

(ii) எழுத்துமூலப் பரீட்சையில் ஒவ்வொரு பாடத்திற்கும் 40% இற்குக் குறையாத புள்ளிகளைப் பெற்ற விண்ணப்பதாரிகளது பெயர்கள் அகர வரிசைப்படி தயாரிக்கப்பட்டு, காணப்படுகின்ற வெற்றிடங்களது எண்ணிக்கையைப் போல் ஐந்து மடங்கு (05) எண்ணிக்கையானவர்கள் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர். அந்த நேர்முகப் பரீட்சை இடம்பெறும் திகதி சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகத்தினால் தீர்மானிக்கப்படும்.

**கவனத்திற் கொள்க**: நேர்முகப் பரீட்சைக்கு பங்கு பற்றுதல் நியமனம் பெறுவதற்கான ஒரு தகைமையாகக் கொள்ளப்பட மாட்டாது.

**14. எழுத்து மூலப் பரீட்சைக்கான பாட விதானம் :-**

(அ) பொது உளச்சார்பு (காலம் 01 மணித்தியாலம்) - மொத்தப் புள்ளிகள் 100 ஆகும். கணித ரீதியான, மொழி ரீதியிலான மற்றும் வரைபு ரீதியிலான கட்டமைப்புகள் ஊடாக சிந்திக்கக் கூடிய தர்க்க ரீதியான திறன், பகுப்பாய்வுத் திறன், நிர்ணயிக்கும் திறன்களை அளவிடுவதற்கான பல்தேர்வு வினாக்களைக் கொண்டதும், சுருக்கமான விடை எதிர்பார்க்கும் 50 வினாக்களைக் கொண்டதுமான வினாத்தாளாக அமையும். அனைத்து வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.

(ஆ) பொது அறிவு (காலம் 01 மணித்தியாலம்) - மொத்தப் புள்ளிகள் 100 ஆகும். தகவல் தொழில்நுட்பம், பரீட்சார்த்தி வாழும் சூழல் உள்ளிட்ட இலங்கையின் அரசியல், கலாசார, பொருளாதார சூழல் மற்றும் தேசிய, சர்வதேச ரீதியில் முக்கியமான நவீன விடயங்களைப் போன்றே, விஞ்ஞானம்சார் கைத்தொழில் அபிவிருத்தி தொடர்பாகவும் விண்ணப்பதாரியிடம் உள்ள அறிவினைப் பரீட்சிப்பதற்கான, பல்தேர்வு வினாக்களைக் கொண்ட வினாத்தாள் ஆகும். இது பல்தேர்வு மற்றும் சுருக்கமான விடைகளை எதிர்பார்க்கும் 50 வினாக்களைக் கொண்ட வினாத்தாள் ஆகும். அனைத்து வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.

(இ) கணிதம் (காலம் 01 மணித்தியாலம் - 100 புள்ளிகள்.)

- I ஆம் பகுதி - கூட்டல் திறனை அளவிட்டுப் பார்க்கும் நோக்கில் வினாத்தாளிலேயே விடையளிக்கக் கூடியவகையில் வினாத்தாள் தயாரிக்கப்படும். அனைத்து வினாக்களுக்கும் விடை அளித்தல் வேண்டும்.
- II ஆம் பகுதி - கணிக்கும் திறனை அளவிட்டுப் பார்க்கும் நோக்கில், கட்டாயம் விடையளிக்க வேண்டிய கணித ரீதியான பிரச்சினைகளைத் தீர்க்கக்கூடிய ஆறு வினாக்களைக் கொண்டிருக்கும்.

15. ஏதேனும் வெற்றிடங்களின் எண்ணிக்கையை அல்லது அனைத்து வெற்றிடங்களையும் நிரப்பாது விடுவதற்கு நியமன அதிகாரிக்கு அதிகாரம் உண்டு.

16. இங்கு குறிப்பிடப்படாத ஏதேனும் விடயங்கள் இருந்தால், அது தொடர்பில் சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகத்தினால் தீர்மானம் மேற்கொள்ளப்படும். அனைத்து விண்ணப்பதாரர்களும் இந்த வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ள பொதுப் பரீட்சை விதிமுறைகளுக்கமைய செயற்படுவதற்கு கட்டுப்பட்டுள்ளனர்.

17. இந்த அறிவித்தலின் சிங்கள, தமிழ், ஆங்கில மொழிகளில் ஏதேனும் பொருத்தமின்மைகள் காணப்படின், சிங்கள மொழியிலான அறிவித்தல் சரியானதாகக் கொள்ளப்பட்டு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.

டீ. எம். ஜே. டப். தென்னகோன்,
சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம்.

சிறைச்சாலைகள் தலைமையகம்,
இலக்கம் 150,
பேஸ் லைன் வீதி,
கொழும்பு 09.
2019, மாச்சு 25 ஆந் திகதி,

மாதிரி விண்ணப்பப்படிவம்

(அலுவலகப் பயன்பாட்டிற்காக)

**இலங்கைச் சிறைச்சாலைகள் திணைக்களத்தின் II ஆம் தர ஜேலர் மற்றும் II ஆம் தர புனர்வாழ்வு உத்தியோகத்தர்களை ஆட்சேர்ப்பு செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2019**

OPEN COMPETITIVE EXAMINATION FOR THE RECRUITMENT OF JAILOR, CLASS II AND REHABILITATION OFFICER, CLASS II IN THE DEPARTMENT OF PRISONS IN SRI LANKA - 2019

| | நகரம் | நகர இலக்கம் |
|---|---|---|
| முதலாவது தெரிவு | | |
| இரண்டாவது தெரிவு | | |

(வர்த்தமானி அறிவித்தலின் 02 ஆம் பந்திக்கமைய பரீட்சைக்குத் தோற்றுவதற்கு எதிர்பார்க்கின்ற நகரத்தை எழுத்திலும் உரிய நகர இலக்கத்தையும் குறிப்பிடுக.)

விண்ணப்பிக்கும் பதவி

IIஆம் தர ஜேலர் - 1

II ஆம் தர புனர்வாழ்வு உத்தியோகத்தர் - 2

இரண்டு பதவிகளுக்கும் - 3

(உரிய இலக்கத்தை கூட்டினுள் எழுதுக)

பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலம்

சிங்களம் - 2

தமிழ் - 3

ஆங்கிலம் - 4

(உரிய இலக்கத்தை கூட்டினுள் எழுதுக.)

(இது பின்னர் மாற்றப்படுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது.)

01. (அ) முதலெழுத்துக்கள் இறுதியாக வரக்கூடியவாறு பெயர்: ..........................................................
(ஆங்கில பெரிய எழுத்தில்) உதா: (GUNAWARDHANA, M. G. B. S. K . )

(ஆ) முழுப்பெயர் (ஆங்கில பெரிய எழுத்தில்): ..........................................................
..........................................................

இ) முழுப்பெயர் (தமிழில்/சிங்களத்தில்): ..........................................................
..........................................................

02. (அ) நிரந்தர முகவரி (தமிழில்/சிங்களத்தில்) : ..........................................................
..........................................................

(ஆ) நிரந்தர முகவரி (ஆங்கில பெரிய எழுத்தில்) (அனுமதிப்பத்திரம் இந்த முகவரிக்கு அனுப்பப்படும்): ........................
..........................................................
..........................................................

03. பால் (ஆண்/பெண்): ☐

பெண் - 1, ஆண் - 0
(உரிய இலக்கத்தை கூட்டினுள் எழுதுக)

04. தேசிய ஆளடையாள அட்டை இலக்கம்: ☐☐☐☐☐☐☐☐☐☐☐☐

05. தொலைபேசி இலக்கம் : கையடக்க: ☐☐☐☐☐☐☐☐☐☐

நிரந்தர : ☐☐☐☐☐☐☐☐☐☐

06. விவாகமானவர்/விவாகமாகாதவர் :
விவாகமாகாதவர் - 1
விவாகமானவர் - 2 ☐
(உரிய இலக்கத்தை கூட்டினுள் எழுதுக)

07. பிறந்த திகதி :
ஆண்டு : ☐☐☐☐ மாதம் : ☐☐ திகதி : ☐☐

08. விண்ணப்பப்படிவங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியில் வயது (2019.04.22):
வருடங்கள் : ☐☐ மாதங்கள்: ☐☐ நாட்கள்: ☐☐

09. பிரசாவுரிமை (பரம்பரை வழியாகவா? /பதிவின் மூலமா?) :- ..........................................................

10. கல்வித் தகைமைகள் :

க.பொ.த. (சா.த.)
முதலாம் அமர்வு :
(i) பரீட்சைக்குத் தோற்றிய வருடம் :- ...........
(ii) பரீட்சை இலக்கம்:- ..................................
(iii) பரீட்சைப் பெறுபேறுகள்:-

| பாடம் | தரம் |
|---|---|
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |

க.பொ.த. (சா.த.)
இரண்டாம் அமர்வு :
(i) பரீட்சைக்குத் தோற்றிய வருடம் :- ...........
(ii) பரீட்சை இலக்கம் :-..................................
(iii) பரீட்சைப் பெறுபேறுகள்:-

| பாடம் | தரம் |
|---|---|
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |

க.பொ.த. (உ.த)

(i) பரீட்சைக்குத் தோற்றிய வருடம் : ..........................

(ii) பரீட்சை இலக்கம்...........................

(iii) பரீட்சைப் பெறுபேறுகள்:

| பாடம் | தரம் |
|---|---|
| | |
| | |
| | |
| | |

11. பிற தகைமைகள்:......................................................................................................................................
.................................................................................................................................................................
.................................................................................................................................................................
......................................................................................................................................

12. தாங்கள் எப்போதாவது நீதிமன்றம் ஒன்றின் மூலம் குற்றவாளியாக்கப்பட்டிருப்பின், அது தொடர்பான முழுமையான விபரங்கள் : .................................................................................................................................................
.................................................................................................................................................................

13. பரீட்சைக் கட்டணம் செலுத்துதல் :

I. செலுத்தப்பட்ட கட்டணம் : .........................................

II. செலுத்திய அலுவலகம் : .........................................

III. செலுத்திய திகதி : .................................................

IV. பற்றுச் சீட்டு இலக்கம் : ..........................................................................................

பற்றுச்சீட்டின் ஒரு முனையை கழறாதவாறு இங்கு ஒட்டவும்.
(பற்றுச்சீட்டின் ஒரு நிழற்படப்பிரதியை தம்வசம் வைத்துக் கொள்ளல் பயனுடையதாகும்.)

**14. விண்ணப்பதாரியின் உறுதியுரை :**

இங்கு குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் எனது அறிவிற்கும் நம்பிக்கைக்கும் எட்டியவகையில், உண்மையானது எனவும், பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்ட இலக்கம் ................................ மற்றும் ................... ஆந் திகதிய பற்றுசீட்டு இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது எனவும் வெளிப்படுத்துகின்றேன். மேலும், பரீட்சை சட்டதிட்டங்களுக்கு அமைய செயற்படுவதற்கும், இப்பரீட்சை தொடர்பான நிபந்தனைகளுக்கமைய நான் தகைமையற்றவன் எனத் தெரிய வந்தால், பரீட்சைக்கு முன்னர் அல்லது அது இடம்பெறும்போது அல்லது அதன் பின்னர் நான் பரீட்சைக்குத் தோற்றுவதை இரத்துச் செய்வதற்கும், எடுக்கும் எந்தவொரு தீர்மானத்திற்கும் நான் இணக்கம் தெரிவிக்கின்றேன். மேலும், பரீட்சையை நடாத்துதல் மற்றும் பெறுபேறுகளை வெளியிடுதல் தொடர்பில் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் சட்டதிட்டங்களுக்கு நான் கட்டுப்படுகின்றேன் எனவும் வெளிப்படுத்துகின்றேன்.

..................................................
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :.........................

15. கையொப்பத்தை உறுதிப்படுத்துதல் : (வர்த்தமானி அறிவித்தலின் 8.5 இன்படி இருத்தல் வேண்டும்)

இந்த விண்ணபப்படிவத்தை சமர்ப்பிக்கின்ற திரு./ திருமதி/ செல்வி:-............................................. என்பவரை நான் தனிப்பட்ட முறையில் அறிவேன் எனவும், அவர் எனது முன்னிலையில் .............................ஆந் திகதி அவரது கையொப்பத்தை இட்டார் எனவும், உரிய பரீட்சைக் கட்டணத்தை செலுத்தி அப்பற்றுச்சீட்டை ஒட்டியுள்ளார் எனவும் உறுதிப்படுத்துகின்றேன்.

.................................................
கையொப்பத்தை உறுதிப்படுத்தும் உத்தியோகத்தரின் கையொப்பம்.

பெயர்:- ..........................................
பதவி :- ......................................
முகவரி:- ....................................
திகதி :- ......................................
(பதவி முத்திரையை இடவும்)

16. திணைக்களத் தலைவரின் சான்றுரை: (தற்போது அரச சேவையில் உள்ளவர்களுக்கு மட்டும்)

திரு./திருமதி/செல்வி.............................................. இத்திணைக்களத்தில் சேவையாற்றுகின்றார் எனவும், அவரது வேலை, நடத்தை திருப்திகரமானது எனவும், இப்பதவிக்குரிய அறிவித்தலின் பிரகாரம் இப்பதவிக்கு விண்ணப்பிப்பதற்கு தகைமை பெற்றுள்ளார் எனவும், அவரை இப்பதவிக்கு தெரிவு செய்தால் சேவையிலிருந்து விடுவிக்க முடியும் /முடியாது எனவும் வெளிப்படுத்துகின்றேன்.

(பொருத்தமற்ற சொற்களை வெட்டி விடவும்)

.....................................................
திணைக்களத் தலைவரின் கையொப்பம்

பெயர்:- ....................................

பதவி :- ......................................

முகவரி:- ....................................

திகதி :- .....................................

(பதவி முத்திரையை இடவும்)

3-1555/2

---

## நீதி மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சு

## சிறைச்சாலைகள் திணைக்களம்

சிறைக்காவலர் பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2019

இலங்கைச் சிறைச்சாலைகள் திணைக்களத்தில் வெற்றிடமாகக் காணப்படுகின்ற சிறைக்காவலர் (பெண்/ஆண்) பதவிகளுக்கு ஆட்சேர்த்துக் கொள்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சைக்கு, தகைமை பெற்ற இலங்கைப்பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

01. இந்தப் பரீட்சையின் மூலம் இலங்கைச் சிறைச்சாலைகள் திணைக்களத்தின் பொலிஸ் மற்றும் ஏனைய காவலர் சேவைத் தொகுதியின் சிறைக்காவலர் பதவிக்கு ஆட்கள் சேர்த்துக் கொள்ளப்படுவர்.

02. எழுத்து மூலப் பரீட்சை :- இப்பரீட்சையானது கீழே காட்டப்பட்டுள்ள 02 வினாத்தாள்களைக் கொண்டிருக்கும்.

I. பொது உளச்சார்பு

II. பொது அறிவு

**கவனத்திற் கொள்க**:- எழுத்துமூலப் பரீட்சையில் சித்தியடையும் விண்ணப்பதாரர்கள் இந்த அறிவித்தலின் 13ஆம் பந்தியின் (1), (2) மற்றும் (3) உப பந்திகளின் மூலம் காட்டப்பட்டுள்ள உடல் தகுதி பரிசோதனையிலும், தகுதிகளை மதிப்பீடு செய்யும் நேர்முகப் பரீட்சையிலும் தோற்றுதல் வேண்டும். எனவே அப்பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைக் கொண்ட விண்ணப்பதாரர்கள் மட்டும் விண்ணப்பித்தல் எதிர்பார்க்கப்படுகின்றது.

**02. பரீட்சைத் திகதி மற்றும் பரீட்சையை நடாத்துதல்:-**

இப்பரீட்சையானது 2019, யூன் மாதம் அட்டவணை - 1 இல் காட்டப்பட்டுள்ளவாறு,நாடு பூராகவும் அமைந்துள்ள பிரதான நகரங்களில் நடாத்தப்படும். அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள நகரங்களில், பரீட்சைக்குத் தோற்றுவதற்கு எதிர்பார்க்கின்ற விண்ணப்பதாரிகள் நகரத்தை, உரிய இலக்கத்துடன் தெளிவாக குறிப்பிடுதல் வேண்டும். கோரிய நகரத்தை பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது. எனினும் ஏதேனும் நகரத்தில் பரீட்சை மத்திய நிலையத்தை அமைப்பதற்குப் போதுமான விண்ணப்பதாரிகள் விண்ணப்பிக்காத சந்தர்ப்பத்தில், விண்ணப்பதாரிகளால், விண்ணப்பப்படிவத்தில் இரண்டாவது தெரிவின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள நகரத்தில் அல்லது அண்மித்த வேறொரு நகரத்தில் அமைக்கப்படுகின்ற பரீட்சை மத்திய நிலையத்திற்கு அவர்கள் அனுப்பப்படுவார்கள். உத்தேசிக்கப்பட்ட அனைத்து நகரங்களிலும் அல்லது கூடுதலான எண்ணிக்கையிலான பரீட்சை மத்திய நிலையங்களை அமைப்பதற்குப் போதிய விண்ணப்பதாரிகள் விண்ணப்பிக்காத சந்தர்ப்பத்தில், பரீட்சையை கொழும்பில் நடாத்துவதற்கு பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

**அட்டவணை - 1**

| நகரம் மற்றும் நகர இலக்கம் | |
|---|---|
| கொழும்பு | 01 |
| கம்பஹா | 02 |
| களுத்துறை | 03 |
| கண்டி | 04 |
| மாத்தளை | 05 |
| நுவரெலியா | 06 |
| காலி | 07 |
| மாத்தறை | 08 |
| அம்பாந்தோட்டை | 09 |
| யாழ்ப்பாணம் | 10 |
| மன்னார் | 11 |
| வவுனியா | 12 |
| முல்லைத்தீவு | 13 |
| கிளிநொச்சி | 14 |
| மட்டக்களப்பு | 15 |
| அம்பாறை | 16 |
| திருகோணமலை | 17 |
| குருநாகல் | 18 |
| புத்தளம் | 19 |
| அநுராதபுரம் | 20 |
| பொலநறுவை | 21 |
| பதுளை | 22 |
| மொணராகலை | 23 |
| இரத்தினபுரி | 24 |
| கேகாலை | 25 |

03. நியமிக்கப்படுகின்ற மொத்த வெற்றிடங்களின் எண்ணிக்கை 1178 ஆகும். [சிறைக்காவலர் (ஆண்) - 1068, சிறைக்காவலர் (பெண்) 110] இறுதி வெற்றிடங்களுக்காக அல்லது ஒரு சில வெற்றிடங்களுக்காக சம புள்ளிகளைப் பெற்ற விண்ணப்பாதாரிகள், வெற்றிடங்களது எண்ணிக்கைக்கு மேலாகக் காணப்பட்டால், அவ்வெற்றிடங்களை நிரப்புதல் தொடர்பில் நடைமுறை விதிக் கோவையின் 80 ஆம் பந்தியின் பிரகாரம்,மற்றும் அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் கட்டளையின் பிரகாரம் தீர்மானிக்கப்படும். நியமனம் செயல்வலுப்பெறும் திகதியானது சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகத்தினால் தீர்மானிக்கப்படும்.

**04. சேவை நிபந்தனைகள் :-**

4.1 அரசாங்க சேவையின் நியமனங்கள் நிருவகிக்கப்படும் பொதுவான நிபந்தனைகளுக்கும், தாபன விதிக் கோவை மற்றும் நிதிப் பிரமாணங்களது ஏற்பாடுகளுக்கும், இலக்கம் 1589/30 மற்றும் 2009.02.20 ஆந் திகதிய அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் நடைமுறை விதிகளுக்கும், உட்பட்டவகையில் ஒரு விண்ணப்பதாரர் உரிய பதவியில் சிறைக்காவலர் பதவிக்கு நியமிக்கப்படுவார்.

4.2 இப்பதவி நிரந்தரமானது. ஓய்வூதிய உரித்துடையது. உங்களுக்குரிய ஓய்வூதிய முறை தொடர்பில் அரசாங்கத்தினால் இனிவரும் காலங்களில் மேற்கொள்ளப்படும் கொள்கை ரீதியான தீர்மானங்களுக்கு நீங்கள் கட்டுப்படுதல் வேண்டும். மேலும், நீங்கள் விதவைகள்/ தபுதாரர், அநாதைகள் ஓய்வூதிய திட்டத்திற்கு பங்களிப்புச்செய்தல் வேண்டும். அரசாங்கத்தினால் காலத்திற்குக் காலம் விதிக்கப்படுகின்ற விதத்தில் நீங்கள் அதற்கான பங்களிப்புத் தொகையைச் செலுத்த வேண்டும்.

4.3 இப்பதவியானது மூன்று வருட தகுதிகாண் காலத்திற்கு உட்பட்டது. சிறைக்காவலர் பதவிக்கு நியமிக்கப்பட்டு 03 வருட காலப்பகுதியுள் முதலாவது வினைத்திறன்காண் தடைப் பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும்.

4.4 அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கை இலக்கம் 01/2014 க்கு அமையவும், அதனுடன் தொடர்புடைய சுற்றறிக்கைகளுக்கு அமையவும், உரிய அரச கரும மொழி தேர்ச்சியைப் பெறுதல் வேண்டும்.

4.5 தமக்கு ஒப்படைக்கப்படுகின்ற பதவியின் கடமைகளை உரிய திகதியில் பொறுப்பேற்பதற்குத் தவறுகின்ற மற்றும் / அல்லது நியமிக்கப்பட்ட பதவியில் அல்லது நியமிக்கப்படுகின்ற பிரதேசத்தில் கடமைகளைப் பொறுப்பேற்பதை நிராகரிக்கின்ற விண்ணப்பதாரர்களது நியமனத்தை இரத்துச் செய்வதற்கு சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகத்திற்கு அதிகாரம் உண்டு. சிறைக்காவலர் பதவியில் நியமனங்களைப் பெறுவோர் நியமனம் பெற்று முதல் 05 வருடங்களுக்கு தாம் வசிக்கின்ற பிரதேசத்திற்கு வெளியே தனிநபர் உத்தியோகபூர்வ விடுதியில் தங்கியிருந்து சேவை புரிவதாக இணக்கம் தெரிவித்தல் வேண்டும்.

**05. மாதாந்த சம்பள அளவுத் திட்டம் :-**

இப்பதவியானது அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கை இலக்கம் 03/2016 இன் RS - 1-2016 (படிமுறை 1) சம்பள வகுதிக்குரியது. அச்சம்பள வகுதிக்குரிய சம்பள அளவுத்திட்டம் கீழே காட்டப்பட்டுள்ளது.

ரூபா 29,540.00 - 7 × 300 - 27 × 370 - ரூபா 41,630.00 (மாதாந்தம்)

(2016.02.25 ஆந் திகதிய அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கை இலக்கம் 03/2016 இன் ஏற்பாடுகளுக்கு அமைய அதன் அட்டவணை II இல் குறிப்பிடப்பட்டுள்ள ரூ. 29,540.00 க்கு அமைவாக ஆரம்ப படிமுறையில் வைக்கப்பட்டு சம்பளம் வழங்கப்படும்.)

**06. ஆட்சேர்த்துக் கொள்ளப்படும் தகைமைகள்:-**

(அ) (i) இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.

(ii) சிறந்த ஆரோக்கியத்தைக் கொண்டிருக்க வேண்டியதுடன், சிறந்த நடத்தையையும் கொண்ட நபராக இருத்தல் வேண்டும். அதனை பொலிஸ் சான்றறிக்கை ஊடாக உறுதிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

(iii) நடத்தைக்கேடு தொடர்பான ஒரு தவறு தொடர்பில் எந்தவொரு நீதிமன்றத்தினாலும் குற்றவாளியாக் கப்பட்டிருப்பது பதவிக்கு நியமிக்கப்படுவதற்கான முழுமையான ஒரு தகுதியீனமாகும்.

(iv) ஆகக் குறைந்த உயரம் 5 அடி 4 அங்குலம் (ஆண்)

(v) ஆகக் குறைந்த உயரம் 5 அடி 2 அங்குலம் (பெண்)

(vi) மார்பு - உள்மூச்சு வெளியே விட்டு மார்பின் சுற்றளவு 32 அங்குலத்திற்கு குறையாமல் இருத்தல் வேண்டும். (பெண்களுக்கு பொருத்தமற்றது.)

(vii) விவாகமாகாதவராக இருத்தல் வேண்டும். (விவாகரத்து பெற்றோர் மற்றும் விதவைகள் இதன்போது விவாகமானவர்களாகக் கருதப்படுவர்.)

(ஆ) கல்வித் தகைமைகள் :-

கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சையில் இரண்டு தடவைக்கு மேற்படாத தடவைகளில் சிங்களம்/தமிழ்/ ஆங்கிலம் மற்றும் கணிதம் உள்ளிட்ட ஆறு பாடங்களுள் (06) ஏதேனும் இரண்டு பாடங்களுக்கு (02) திறமைச் சித்தியைப் பெற்றிருத்தல்.

(இ) வயது :-

- 18 வயதிற்குக் குறையாத 33 வயதிற்கு மேற்படாதவராக இருத்தல் வேண்டும்.

(அதனடிப்படையில் 2001, ஏப்பிறல் 22 ஆந் திகதியில் அல்லது அதற்கு முன்னர் மற்றும் 1986.04.22 ஆந் திகதியில் அல்லது அதற்கு பின்னர் பிறந்த திகதியை கொண்டுள்ளவர்களுக்கு மட்டும் இதற்கு விண்ணப்பிப் பதற்கு தகைமை உண்டு.)

(ஈ) தகைமைகள் தொடர்பான வரையறைகள் :-

இந்தப் பரீட்சைக்காக விண்ணப்பிப்பதற்கு தேவையான அனைத்து தகைமைகளையும் விண்ணப்பம் பொறுப்பேற்கும் இறுதித் திகதியில் அல்லது அதற்கு முன்னர் எல்லா விதத்திலும் பூரணப்படுத்தியிருத்தல் வேண்டும்.

**07. பரீட்சைக் கட்டணங்கள்:-**

பரீட்சைக் கட்டணம் ரூபா 600.00 ஆகும். விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு முன்னராக, பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் வருமானத் தலைப்பு இலக்கம் 20-03-02-13 இன் கீழ் அரச வருமானத்தில் வரவு வைக்கப்படும் விதத்தில் நாடு பூராகவும் அமைந்துள்ள தபால் காரியாலயங்கள் /உப தபால் காரியாலயங்கள் அல்லது மாவட்ட /பிரதேச செயலகங்களில் பணமாகச் செலுத்தி விண்ணப்பதாரியின் பெயரில் பெற்றுக் கொண்ட பற்றுச்சீட்டை,விண்ணப்பப்படிவத்தில் உரிய இடத்தில ஒட்டுதல் வேண்டும். எந்தவொரு காரணத்தினாலேயும் பரீட்சைக் கட்டணமானது மீளக் கொடுப்பனவு செய்தல் அல்லது வேறு பரீட்சைக்கு மாற்றப்படுதல் மாட்டாது. பற்றுச்சீட்டின் ஒரு பிரதியை தம்வசம் வைத்துக் கொள்ளுதல் பயனுடையதாகும்.

**08. விண்ணப்பிக்கும் முறை :-**

8.1 விண்ணப்பப்படிவமானது இந்த அறிவித்தலில் இணைக்கப்பட்டுள்ள மாதிரிப்படிவத்திற்கு அமைய இருத்தல் வேண்டும். கடதாசியின் இரண்டு பக்கத்தையும் பயன்படுத்தி 8.27" x 11.69" (A4) அளவான கடதாசியில் தயாரித்து, விண்ணப்பதாரி தமது சொந்தக் கையெழுத்தில் பூரணப்படுத்துதல் வேண்டும். இதற்காக கணினியில் தயாரிக்கப்பட்ட அல்லது தட்டச்சு செய்யப்பட்ட விண்ணப்பப்படிவத்தைப் பயன்படுத்தலாம். 01 தொடக்கம் 05 வரையான பகுதிகள் முதலாவது பக்கத்திலும், 06 தொடக்கம் 11 வரையான பகுதிகள் இரண்டாவது பக்கத்திலும், மீதிப் பகுதிகள் மூன்றாவது பக்கத்திலும் இருக்கும் வண்ணம் தயாரிக்கப்படுதல் வேண்டும். மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு அமையாத விண்ணப்பப்படிவங்கள் மற்றும் முழுமையாக தகவல்கள் பூரணப்படுத்தப்படாத விண்ணப்பங்கள் அறிவித்தலின்றி நிராகரிக்கப்படும். (விண்ணப்பப்படிவத்தின் பிரதியொன்றை தம்வசம் வைத்திருத்தல் பயனுடையதாகும்) மேலும் பூரணப்படுத்தியுள்ள விண்ணப்பப்படிவமானது பரீட்சை அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு அமைவாக உள்ளதா என விண்ணப்பதாரி ஆராய்ந்து பார்த்தல் வேண்டும். அவ்வாறில்லாதுவிடின் விண்ணப்பப்படிவம் நிராகரிக்கப்படும்.

8.2 விண்ணப்பப்படிவமானது விண்ணப்பதாரி பரீட்சைக்குத் தோற்ற விரும்புகின்ற மொழியிலேயே இருத்தல் வேண்டும்.

8.3 பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவங்களை 2019.04.22 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் "பரீட்சைகள் ஆணையாளர் நாயகம், ஒழுங்கமைப்பு (நிறுவனம்சார் மற்றும் வெளிநாட்டுப் பரீட்சைகள் ) கிளை, இலங்கைப் பரீட்சைகள் திணைக்களம், த.பெ.1503,கொழும்பு" என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். விண்ணப்பப்படிவங்கள் இடப்பட்ட கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "சிறைக்காவலர் பதவிக்கு ஆட்சேர்த்துக் கொள்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - (2019)" எனக் குறிப்பிடுதல் வேண்டும். விண்ணப்பப்படிவங்களைத்

தயாரிக்கும்போது அதன் தலைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சையின் பெயரை, தமிழ் விண்ணப்பப்படிவத்தில் தமிழ் மொழிக்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும், சிங்கள விண்ணப்பப்படிவத்தில் சிங்கள மொழிக்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் குறிப்பிடுதல் அத்தியாவசியமாகும்.

8.4 வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைக் கொண்டுள்ள நபர்கள் மட்டும் விண்ணப்பித்துள்ளார்கள் எனக் கருதப்பட்டு, உரிய பரீட்சைக் கட்டணம் செலுத்தி, உரிய திகதியில் அல்லது அதற்கு முன்னராக விண்ணப்பப்படிவங்களை அனுப்பியுள்ள அனைத்து விண்ணப்பதாரிகளுக்கும் போட்டிப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் அனுமதிப்பத்திரங்கள் அனுப்பி வைக்கப்படும். போட்டிப் பரீட்சைக்குத் தோற்றுவதற்காக அனுமதிப் பத்திரங்கள் அனுப்பி வைக்கப்படுகின்றமையானது, விண்ணப்பதாரி இப்பதவிக்கு தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ளார் என அங்கீகரிக்கப்பட்டதொன்றாகக் கருதப்படக் கூடாது. விண்ணப்பதாரிகளை நேர்முகப் பரீட்சைக்கு அழைத்து வர்த்தமானி அறிவித்தலுக்கமைய தகைமைகள் உள்ளதா என பரிசீலிக்கும் சந்தர்ப்பத்தில் தேவையான தகைமைகள் இல்லையென தெரியவந்தால் அந்த நபர்களது பரீட்சைக்குத் தோற்றும் சந்தர்ப்பமானது நிராகரிக்கப்படும்.

8.5 விண்ணப்பப்படிவத்தில் விண்ணப்பதாரியின் கையொப்பத்தினை அரச பாடசாலையொன்றின் அதிபர், சமாதான நீதவான், சத்தியப்பிரமான ஆணையாளர், பிரசித்த நொத்தாரிசு, முப்படைகளில் அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர், பொலிஸ் சேவையில் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட பதவியை வகிக்கும் உத்தியோகத்தர் அல்லது அரச துறையில் நிரந்தரப் பதவியை வகிக்கும் பதவி நிலை உத்தியோகத்தர் அல்லது அரச /மாகாண அரச சேவையில் உள்ள ஒருவர் எனின், திணைக்களத் தலைவர் உறுதிப்படுத்துதல் வேண்டும். தற்போது அரச சேவையில் உள்ள ஒருவர் தமது விண்ணப்பப்படிவங்களை தமது திணைக்களத் தலைவர் ஊடாக விண்ணப்பங்கள் பொறுப்பேற்கப்படும் இறுதித் திகதிக்கு முன்னர் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்திற்கு அனுப்புதல் வேண்டும். இத்தகைய ஒரு உத்தியோகத்தரை தெரிவு செய்தால் திணைக்களத்திலிருந்து விடுவிக்க முடியும் என திணைக்களத் தலைவர் உறுதிப்படுத்துதல் வேண்டும்.

8.6 உரிய திகதியில் பரீட்சைக் கட்டணங்களைச் செலுத்தாத மற்றும் முழுமையாக பூரணப்படுத்தப்படாத நிலையிலுள்ள விண்ணப்பப்படிவங்கள் எந்தவித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும். உரிய முறையில் விண்ணப்பப்படிவங்கள் பூர்த்தி செய்யாமையினால் ஏற்படுகின்ற நட்டத்தினை விண்ணப்பதாரிகள் ஏற்றுக் கொள்ளுதல் வேண்டும். தபாலில் இடும்போது விண்ணப்பப்படிவங்கள் தொலைந்து போதல் அல்லது தாமதமாகுதல் தொடர்பில் எந்தவித முறைப்பாடுகளும் கருத்திற் கொள்ளப்பட மாட்டாது.

8.7 விண்ணப்பப்படிவங்கள் கிடைத்ததாக அறிவிக்கப்பட மாட்டாது. விண்ணப்பதாரிகளுக்கு அனுமதிப் பத்திரங்கள் அனுப்பப்பட்டவுடன் அது தொடர்பில் பத்திரிகைகளிலும், பரீட்சைகள் திணைக்களத்தின் இணையத்தளத்திலும் அறிவித்தல் விடுக்கப்படும். அறிவித்தல் விடுக்கப்பட்டு 2 அல்லது 3 நாட்கள் கடந்த பின்னரும் அனுமதிப் பத்திரங்கள் கிடைக்காதிருந்தால், அறிவித்தலில் குறிப்பிட்டுள்ள விதத்தில் அது தொடர்பில், இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்திற்கு அறிவித்தல் வேண்டும். அதன்போது, உங்களது முழுப் பெயர், முகவரி, தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் மற்றும் விண்ணப்பிக்கின்ற பரீட்சையின் பெயர் என்பனவற்றைக் குறிப்பிடுதல் வேண்டும். கொழும்புக்கு வெளியிலுள்ள ஒரு விண்ணப்பதாரி எனின், உங்களது மேற்குறிப்பிட்ட தகவல்களை உள்ளடக்கிய ஒரு கடிதத்தை, தொலை நகல் மூலம், அனுமதிப் பத்திரத்தின் பிரதியொன்றை உங்களுக்கு அனுப்புவதற்காக, ஒரு தொலைநகல் இலக்கத்தையும் குறிப்பிட்டு, அவ்வறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தொலைநகல் இலக்கத்திற்கு அனுப்பி விசாரித்தறிதல் வேண்டும். அதன்போது தேவையான தகவல்களை உறுதிப்படுத்துவதற்காக உங்களிடம் வைத்திருக்கும் விண்ணப்பப்படிவத்தின் பிரதி, பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்திய பற்றுச்சீட்டு, விண்ணப்பப்படிவத்தை பதிவுத் தபாலில் அனுப்பிய பற்றுசீட்டு என்பவற்றை தம்வசம் வைத்திருத்தல் மிகுந்த பயனுடையதாக அமையும்.

**09. பரீட்சைக்குத் தோற்றுதல் :-**

(அ) விண்ணப்பதாரி தமக்கு குறித்தொதுக்கப்பட்டுள்ள பரீட்சை மண்டபத்தில், பரீட்சைக்குத் தோற்றுதல் வேண்டும். அனைத்து விண்ணப்பதாரிகளும் பரீட்சை அனுமதிப் பத்திரத்தில் தமது கையொப்பத்தை உறுதிப்படுத்திக் கொண்டு, முதலாவதாக அம்மண்டபத்தில் தோற்றும் திகதியில், அங்குள்ள பரீட்சைகள் மேற்பார்வையாளரிடம் ஒப்படைத்தல் வேண்டும். அனுமதிப்பத்திரம் இன்றி பரீட்சைக்குத்தோற்ற அனுமதிக்கப்படமாட்டாது. அனைத்து விண்ணப்பதாரிகளும் கடைப்பிடிக்க வேண்டிய விதிமுறைகள் இவ்வர்த்தமானி அறிவித்தலின் ஆரம்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. பரீட்சைகளை நடாத்துதல் மற்றும் பெறுபேறுகளை வெளியிடுதல் தொடர்பில் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படுகின்ற விதிமுறைகளுக்கு பரீட்சார்த்திகள் கட்டுப்படுவர். அவ்விதிமுறைகளை மீறினால் பரீட்சார்த்திகள், பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படுகின்ற தண்டனைக்கு உட்படுவர்.

**10. பரீட்சார்த்திகளது ஆளடையாளம் :-**

தாம் தோற்றுகின்ற அனைத்துப் பாடங்களுக்கும் பரீட்சை மண்டப மேற்பார்வையாளர் திருப்தியடையக்கூடிய விதத்தில், பரீட்சை மண்டபத்தில் தமது அடையாளத்தை உறுதிப்படுத்துதல் வேண்டும். இதன்போது கீழே காட்டப்பட்டுள்ள ஒரு ஆவணத்தை பரீட்சை மண்டப மேற்பார்வையாளரிடம் சமர்ப்பித்தல் வேண்டும்.

(i) தேசிய ஆளடையாள அட்டை;

(ii) செல்லுபடியான கடவுச்சீட்டு;

(iii) செல்லுபடியான சாரதி அனுமதிப்பத்திரம்.

**11. பிழையான தகவல்களை வழங்கியமைக்கான தண்டனை :-**

விண்ணப்பப்படிவங்களைப் பூர்த்தி செய்யும்போது மிகக் கவனமாக சரியான தகவல்களை வழங்குதல் வேண்டும். இப்பரீட்சையின் சட்ட திட்டங்களுக்கமைய ஒரு பரீட்சார்த்தி தகைமையற்றவர் எனத் தெரிய வந்தால், பரீட்சைக்கு முன்னர் அல்லது பரீட்சை நடைபெறும் போதோ அல்லது பரீட்சையின் பின்னரோ எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அவர் பரீட்சைக்குத் தோற்றும் வாய்ப்பை இரத்துச் செய்ய முடியும். விண்ணப்பதாரியால் தரப்பட்ட எந்தவொரு தகவலும் தவறானது என தெரிந்தே சமர்ப்பிக்கப்பட்டுள்ளது எனத் தெரிய வந்தால், அல்லது ஏதேனும் முக்கியமான ஒரு விடயத்தை அவர் வேண்டுமென்றே மறைத்திருந்தால் அவரது பதவியை இரத்துச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

**12. பரீட்சை முறை மற்றும் பரீட்சை மொழி மூலம் :-**

(அ) பரீட்சை தமிழ், சிங்களம், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் நடாத்தப்படும்.

(ஆ) தமது விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சை மொழியை பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்பட மாட்டாது.

**13. ஆட்சேர்க்கும் முறை :-**

(1) எழுத்து மூலப் பரீட்சை :-

இவ்வறிவித்தலின் 02ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள பாடங்களைக் கொண்ட 02 வினாத்தாள்களைக் கொண்டதாக எழுத்துப் பரீட்சை அமைந்திருக்கும். ஒரு பாடத்தில் சித்தியடைவதற்காக ஆகக் குறைந்தது 40% வீதம் புள்ளிகளைப் பெற்றிருத்தல் வேண்டும். பரீட்சார்த்திகள் அனைத்து வினாத்தாள்களுக்கும் தோற்றியிருத்தல் வேண்டும்.

பாடங்கள் : 1. பொது உளச்சார்பு

2. பொது அறிவு

- எழுத்து மூலப் பரீட்சைக்கான பாட விதானம் :-

(அ) பொது உளச்சார்பு - காலம் 01 மணித்தியாலம் - மொத்தப் புள்ளிகள் 100 ஆகும். கணித ரீதியான, மொழி ரீதியிலான மற்றும் வரைபு ரீதியிலான கட்டமைப்புகள் ஊடாக சிந்திக்கக் கூடிய தர்க்க ரீதியான திறன், பகுப்பாய்வுத் திறன், நிர்ணயிக்கும் திறன்களை அளவிடுவதற்கான பல்தேர்வு வினாக்களைக் கொண்ட வினாத்தாள் ஆகும்.

(ஆ) பொது அறிவு - காலம் 02 மணித்தியாலங்கள். இலங்கையின் அரசியல், கலாசார, பொருளாதார ரீதியில் முக்கியமான விடயங்களை உள்ளடக்கியதாக அறிவினைப் பரீட்சிப்பதற்கான பல்தேர்வு வினாக்களைக் கொண்ட வினாத்தாள் ஆகும்.

(2) உடல் தகைமைகளைப் பரிசோதித்தல் :-

தற்போது காணப்படுகின்ற வெற்றிடங்களது எண்ணிக்கையின் இரண்டு மடங்கான, எழுத்துப் பரீட்சையில் கூடிய புள்ளிகளைப் பெற்ற விண்ணப்பதாரர்களது பெயர்களை, அகர வரிசையில் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்திடம் இருந்து பெற்று, அந்த விண்ணப்பதாரிகளுக்கு மட்டும்,உடல் தகைமை பரிசோதனை, அதாவது தாக்குப்பிடிப்பதற்கான பரிசோதனையொன்று நடாத்தப்படும். அந்நேர்முகப் பரீட்சை நடாத்தப்படும் திகதியானது சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகத்தினால் தீர்மானிக்கப்படும்.

ஆண் -1000 மீற்றர்களை (1km) 03 நிமிடம் 44 செக்கனில் ஓடுதல்.

பெண் - 400 (0.4km) மீற்றர்களை 02 நிமிடம் 05 செக்கனில் ஓடுதல்.

சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகத்தினால் தகைமையை மதிப்பீடு செய்வதற்கான பரீட்சைச் சபை நியமிக்கப்படும்.

(3) தகைமையை மதிப்பீடு செய்யும் நேர்முகப் பரீட்சை:-

(I) மேலே இலக்கம் 06 இல் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதா எனவும், அதில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகள் வரையறைகளுக்கு உட்பட்டதா என்பதைப் பரிசோதிப்பதற்காகவும் தகைமைகளை மதிப்பீடு செய்யும் நேர்முகப் பரீட்சை நடாத்தப்படும்.

(II) கீழே காட்டப்பட்டுள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள புள்ளிகள் வழங்கப்படும் பிரதான துறைகளுக்காக, ஒதுக்கப்பட்டுள்ள ஆகக் கூடிய புள்ளிகளது எண்ணிக்கையுள், நேர்முகப் பரீட்சை சபையால் புள்ளிகள் வழங்கப்படும்.

| பரீட்சிக்கப்பட்டு புள்ளிகள் வழங்கப்படும் பிரதான துறைகள் | வழங்கப்படும் ஆகக் கூடிய புள்ளிகள் | தெரிவு செய்வதற்காகக் கருத்திற் கொள்ளப்படும் ஆகக் குறைந்த புள்ளிகள் |
|---|---|---|
| மேலதிக கல்வி மற்றும் பிற தகைமைகள் | 25 | பொருத்தமன்று. |
| தொழில்சார் தகைமைகள் | 15 | |
| விளையாட்டுத் திறன்கள் | 30 | |
| தலைமைத்துவமும் சமூக சேவையும் | 25 | |
| நேர்முகப் பரீட்சையில் காட்டும் திறன்கள் | 05 | |
| மொத்தம் | **100** | |

(III) உடல் தகைமை பரிசோதனை, அதாவது தாக்குப் பிடிக்கும் பரிசோதனையில் சித்தியடையும் விண்ணப்பதாரிகள் மட்டும், தகைமைகளைப் பரிசோதிக்கும் நேர்முகப் பரீட்சைக்கு அனுப்பப்படுவர். அடிப்படைத் தகைமைகள், தகைமைகளைப் பரிசோதிக்கும், நேர்முகப் பரீட்சையிலேயே பரிசோதிக்கப்படும். (எழுத்து மூலப் பரீட்சையில் விண்ணப்பதாரிகள் பெற்றுக் கொண்ட புள்ளிகள் இச்சந்தர்ப்பத்தில் கவனத்திற் கொள்ளப்படும்.)

(IV) தகைமைகளைப் பரிசோதிக்கும் நேர்முகப் பரீட்சையில் ஒவ்வொரு விண்ணப்பதாரிகளும் பெற்றுக் கொண்ட புள்ளிகளை மீளவும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்திற்கு அனுப்பியதன் பின்னர் அவ்விண்ணப்பதாரிகள் எழுத்து மூலப் பரீட்சை மற்றும் தகைமைகளைப் பரிசோதிக்கும் நேர்முகப் பரீட்சையில் பெற்றுக் கொண்ட புள்ளிகளது மொத்தத் தொகையின் அடிப்படையில், முறையே ஆகக் கூடிய புள்ளிகளைப் பெற்ற விண்ணப்பதாரிகள், சிறைக்காவலர் பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்யப்படுவர்.

**கவனத்திற் கொள்க.**- நேர்முகப் பரீட்சையில் தோற்றுதல் என்பது நியமனம் வழங்குவதற்குத் தகைமைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதாகக் கருதப்பட மாட்டாது.

❖ ஏதேனும் வெற்றிடங்களின் எண்ணிக்கையை அல்லது அனைத்து வெற்றிடங்களையும் நிரப்பாது விடுவதற்கு நியமன அதிகாரிக்கு அதிகாரம் உண்டு.

❖ இங்கு குறிப்பிடப்படாத ஏதேனும் விடயங்கள் இருந்தால், அது தொடர்பில் சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகத்தினால் தீர்மானம் மேற்கொள்ளப்படும். அனைத்து விண்ணப்பதாரர்களும் இந்த வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ள பொதுப் பரீட்சை விதிமுறைகளுக்கமைய செயற்படுவதற்கு கட்டுப்பட்டுள்ளனர்.

❖ இந்த அறிவித்தலின் சிங்கள, தமிழ், ஆங்கில மொழிகளில் ஏதேனும் பொருத்தமின்மைகள் காணப்படின், சிங்கள மொழியிலான அறிவித்தல் சரியானதாகக் கொள்ளப்பட்டு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.

டீ. எம். ஜே. டப்.தென்னகோன்,
சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம்.

சிறைச்சாலைகள் தலைமையகம்,
இலக்கம் 150,
பேஸ்லைன் வீதி,
கொழும்பு 09.
2019, மாச்சு 25.

மாதிரி விண்ணப்பப்படிவம்

(அலுவலகப் பயன்பாட்டிற்காக)

**சிறைக்காவலர் பதவிக்கு ஆட்சேர்த்துக் கொள்ளப்படும் திறந்த போட்டிப் பரீட்சை - 2019**

Open Competitive Examination for the Recruitment to the Post of Prison Guard -2019

| | நகரம் | நகர இலக்கம் |
|---|---|---|
| முதலாவது தெரிவு | | |
| இரண்டாவது தெரிவு | | |

(வர்த்தமானி அறிவித்தலின் 02 ஆம் பந்திக்கமைய பரீட்சைக்குத் தோற்றுவதற்கு எதிர்பார்க்கின்ற நகரத்தை எழுத்திலும் உரிய நகர இலக்கத்தையும் குறிப்பிடுக.)

பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலம்
சிங்களம் - 2
தமிழ் - 3
ஆங்கிலம் - 4
(உரிய இலக்கத்தை கூட்டினுள் எழுதுக.)
(இது பின்னர் மாற்றப்படுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது.)

01. (அ) முழுப் பெயர் (ஆங்கில பெரிய எழுத்தில்) : ..........................................................................................................

(ஆ) முதலெழுத்துக்கள் இறுதியாக வரக்கூடியவாறு பெயர்: ..........................................................................................
(ஆங்கில பெரிய எழுத்தில்) உதா: (GUNAWARDHANA, M. G. B. S. K . )

(இ) முழுப் பெயர் (தமிழில்/சிங்களத்தில்) : ..........................................................................................................

02. (அ) நிரந்தர முகவரி (ஆங்கில பெரிய எழுத்தில்) (அனுமதிப்பத்திரம் இந்த முகவரிக்கு அனுப்பப்படும்): ............................
..........................................................................................................

(ஆ) நிரந்தர முகவரி (தமிழில்/சிங்களத்தில்) : ..........................................................................................................

03. பால் (ஆண்/பெண்) :
பெண் - 1, ஆண் - 0
(உரிய இலக்கத்தை கூட்டினுள் எழுதுக)

04. தேசிய ஆளடையாள அட்டை இலக்கம்:

05. தொலைபேசி இலக்கம் : கையடக்க:
நிரந்தர:

06. விவாகமானவர்/விவாகமாகாதவர் :
விவாகமாகாதவர் - 1
விவாகமானவர் - 2
(உரிய இலக்கத்தை கூட்டினுள் எழுதுக)

07. பிறந்த திகதி :
ஆண்டு: மாதம்: திகதி:

08. விண்ணப்பப்படிவங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி திகதியில் வயது (2019.04.22):
வருடங்கள்: ☐☐ மாதங்கள்: ☐☐ நாட்கள்: ☐☐

09. பிரசாவுரிமை (பரம்பரை வழியாகவா /பதிவின் மூலமா) :- ........................................................

10. உடல் அளவுகள்:

உயரம் - அடி : ________ அங்குலம்:________
மார்பு - அங்குலம் : ________

(பெண் விண்ணப்பதாரர்கள் உயரத்தை மட்டும் குறிப்பிடவும்).

11. கல்வித் தகைமைகள் :

1 ஆவது அமர்வு

க.பொ.த. (சா. த.)

(i) பரீட்சைக்குத் தோற்றிய வருடம் : ..........................
(ii) பரீட்சை சுட்டெண் : ............................
(iii) பரீட்சைப் பெறுபேறுகள்:-

| பாடம் | தரம் |
|---|---|
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |

2 ஆவது அமர்வு

க.போ.த. (உ.த.)

(i) பரீட்சைக்குத் தோற்றிய வருடம் : ..........................
(ii) பரீட்சை சுட்டெண் : ..........................
(iii) பரீட்சைப் பெறுபேறுகள்:-

| பாடம் | தரம் |
|---|---|
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |

12. பிற தகைமைகள் : ..............................................................................................................................................
..............................................................................................................................................
..............................................................................................................................................
..............................................................................................................................................

13. தாங்கள் எப்போதாவது நீதிமன்றம் ஒன்றின் மூலம் குற்றவாளியாக்கப்பட்டிருப்பின், அது தொடர்பான முழுமையான விபரங்கள் :- ..............................................................................................................................................
..............................................................................................................................................

14. பரீட்சைக் கட்டணம் செலுத்துதல் :-

I. செலுத்தப்பட்ட கட்டணம் : .........................................
II. செலுத்திய அலுவலகம் : .........................................
III. செலுத்திய திகதி : .................................................
IV. பற்றுசீட்டு இலக்கம் : .............................................

பற்றுச்சீட்டின் ஒரு முனையை கழறாதவாறு இங்கு ஒட்டவும்.
(பற்றுச்சீட்டின் ஒரு நிழற்படப்பிரதியை தம்வசம் வைத்துக் கொள்ளல் பயனுடையதாகும்.)

15. விண்ணப்பதாரியின் உறுதியுரை :

இங்கு குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் எனது அறிவிற்கும் நம்பிக்கைக்கும் எட்டியவகையில் உண்மையானவை எனவும், பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்ட ................................ ஆந் திகதிய ................... ஆம் இலக்கம் கொண்ட பற்றுசீட்டு

இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது எனவும் வெளிப்படுத்துகின்றேன். மேலும், பரீட்சை சட்டதிட்டங்களுக்கு அமைந்து செயற்படுவதற்கும், இப்பரீட்சை தொடர்பான நிபந்தனைகளுக்கமைய நான் தகைமையற்றவன் எனத் தெரிய வந்தால், பரீட்சைக்கு முன்னர் அல்லது அது இடம்பெறும்போது அல்லது அதன் பின்னர் நான் பரீட்சைக்குத் தோற்றுவதை இரத்துச் செய்வதற்கு எடுக்கப்படும் எந்தவொரு தீர்மானத்திற்கும் நான் உடன்படுகின்றேன். மேலும், பரீட்சையை நடாத்துதல் மற்றும் பெறுபேறுகளை வெளியிடுதல் தொடர்பில் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் சட்டதிட்டங்களுக்கு நான் கட்டுப்படுகின்றேன் எனவும் வெளிப்படுத்துகின்றேன்.

..................................................
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :.........................

16. கையொப்பத்தை உறுதிப்படுத்துதல் : (வர்த்தமானி அறிவித்தலின் 8.5 இன்படி இருத்தல் வேண்டும்)

இந்த விண்ணப்பப்படிவத்தை சமர்ப்பிக்கின்ற திரு./திருமதி/செல்வி: ........................................................ என்பவரை நான் தனிப்பட்ட முறையில் அறிவேன் எனவும், அவர் எனது முன்னிலையில் .............................ஆந் திகதி அவரது கையொப்பத்தை இட்டார் எனவும், உரிய பரீட்சைக் கட்டணத்தை செலுத்தி அப்பற்றுசீட்டை ஒட்டியுள்ளார் எனவும் உறுதிப்படுத்துகின்றேன்.

.....................................................
கையொப்பத்தை உறுதிப்படுத்தும் உத்தியோகத்தரின் கையொப்பம்.

பெயர்:- ....................................

பதவி :- ...............................

முகவரி:- ...............................

திகதி :- ...................................

(பதவி முத்திரையை இடவும்)

17. திணைக்களத் தலைவரின் சான்றுரை: (தற்போது அரச சேவையில் உள்ளவர்களுக்கு மட்டும்)

இவ் விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கும் திரு./திருமதி/செல்வி ............................................... இத்திணைக்களத்தில் சேவையாற்றுகின்றார் எனவும், அவரது வேலை, நடத்தை திருப்திகரமானவை எனவும், இப்பதவிக்குரிய அறிவித்தலின் பிரகாரம் இப்பதவிக்கு விண்ணப்பிப்பதற்கு தகைமை பெற்றுள்ளார் எனவும், அவர் இப்பதவிக்கு தெரிவு செய்யப்பட்டால் சேவையிலிருந்து அவரை விடுவிக்க முடியும் /முடியாது எனவும் வெளிப்படுத்துகின்றேன்.

(பொருத்தமற்ற சொற்களை வெட்டி விடவும்)

.....................................................
திணைக்களத் தலைவரின் கையொப்பம்.

பெயர்:- ....................................

பதவி :- ...............................

முகவரி:- ...............................

திகதி :- ...................................

(பதவி முத்திரையை இடவும்)

3-1555/1

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.